# மன்னா

## உலகளாவிய கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கத்தின் பொன்விழா

# அருங்கொடை இயக்கம் ஆவியாரின் விலைமதிப்பற்ற கருவி

### பொன்விழா மாநாட்டில் கலந்துகொண்டோருக்கு திருத்தந்தையின் செய்தி

கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம் (Catholic Charismatic Renewal Movement) கிறிஸ்தவ ஒன்றிப்புக்கு தூய ஆவியாரின் விலைமதிப்பற்ற கருவி. தூய ஆவியாரின் ஒவ்வொரு செயலும் பன்மைத்தன்மையில் ஒன்றிப்பைக் கொணர்வதுபோன்று, தூய ஆவியார் கிறிஸ்தவ ஒன்றிப்பையும் விரும்புகிறார். செபத்திலும் பணியிலும் பிற கிறிஸ்தவ சகோதரர்களுடன் ஒன்றிணைவதற்கு அருங்கொடை இயக்கத்தினர் சிறந்த கருவிகள் என திருத்தந்தை பிரான்சிஸ் குறிப்பிட்டார்.

உரோம் நகரில் நடைபெற்ற உலகளாவிய கத்தோலிக்க அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கத்தின் பொன் விழா மாநாட்டில் கலந்துகொண்டவர்களுக்கு அனுப்பிய செய்தியிலேயே திருத்தந்தை இவ்வாறு குறிப்பிட்டார்.

கடந்த மே 31ஆம் திகதி தொடங்கிய இப்பொன் விழா மாநாடு, கடந்த யூன் மாதம் 4ஆம் திகதி தூய ஆவியார் வருகைப் பெருவிழாவுடன் நிறைவடைந்தது. இதில் 130 நாடுகளைச் சேர்ந்த முப்பதாயிரத்திற்கும் அதிகமானோர் பங்கேற்றனர்.

இரண்டாம் வத்திக்கான் பொதுச்சங்கம் நிறைவுற்ற இரண்டு ஆண்டுகளுக்குப்பின், 1968ஆம் ஆண்டு பெப்ரவரி 17ஆம் திகதியன்று, அமெரிக்க ஐக்கிய நாட்டில் மாணவர் குழு ஒன்று ஆன்மீகத் தியானத்தில் ஈடுபட்டது. அத்தியானத்தில் அம்மாணவர்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தின் பயனாக ஆரம்பிக்கப்பட்டதே அருங்கொடை மறுமலர்ச்சி இயக்கம். இன்று இது உலகளாவிய இயக்கமாக மாறி 12 கோடிக்கு மேற்பட்டவர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

### மணற்குளம் புனித அந்தோனியார் ஆலயம்
### திருப்பொழிவு விழாவும் 150வது ஆண்டு நிறைவு விழாவும்



கட்டைக்காடு பங்கிற்கு உட்பட்ட மணற்குளம் புனித அந்தோனியார் ஆலயம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நிலையில் புதிய ஆலயத் திறப்பு விழாவும் திருப்பொழிவும் (அர்ச்சிப்பும்) 150வது ஆண்டு நிறைவு விழாவும் கடந்த யூன் மாதம் 14ஆம் திகதி நடைபெற்றது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம் - மேலதிக படங்கள் 8ஆம் பக்கம்)

### பிச்சகுளம் செபமாலை அன்னை ஆலயம்
### திருப்பொழிவு விழாவும்
### அவிதப்பர் அடிகளாரின் 2ஆம் ஆண்டு நினைவும்



சிறுக்கண்டல் பங்கிற்கு உட்பட்ட பிச்சகுளம் தூய செபமாலை அன்னை புதிய ஆலயத் திறப்பு விழாவும், திருப்பொழிவும் (அர்ச்சிப்பும்) கடந்த யூன் மாதம் 22ஆம் திகதி இடம்பெற்றது. அன்றைய தினம் அமரர் அருட்பணி. விக்ரன் அவிதப்பர் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவும் நினைவுகூரப்பட்டது. (தொடர்ச்சி 15ஆம் பக்கம் - மேலதிக படங்கள் 9ஆம் பக்கம்)

### பெரிய தம்பனை
### புதிய ஆலயத் திறப்பும் திருப்பொழிவும்




பெரிய பண்டிவிரிச்சான் பங்கிற்கு உட்பட்ட பெரிய தம்பனைக் கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித அந்தோனியார் ஆலயத் திறப்பு விழாவும், ஆலயத் திருப்பொழிவும் (அர்ச்சிப்பும்) வருடாந்த திருவிழாத் திருப்பலியும் கடந்த யூன் மாதம் 18ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு இடம்பெற்றது.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## சிறப்பாக இடம்பெற்ற மடு ஆடித் திருவிழா









மடுத் திருப்பதியின் ஆடித் திருவிழாத் திருப்பலி கடந்த யூன் மாதம் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு கூட்டுத் திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளைள ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற இத்திருவிழாத் திருப்பலியில் திருகோணமலை ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகையும், அநுராதபுரம் ஆயர் மேதகு நோபேட் அன்ராடி ஆண்டகையும் கலந்துகொண்டனர்.

இவ்விழாவில் நாட்டின் பல்வேறு பாகங்களில் இருந்தும் குருக்கள் துறவியர், இறைமக்கள் என ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோர் கலந்துகொண்டனர்.

மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்தந்தை எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரின் நெறிப்படுத்தலில், மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை விக்ரர் சோசை அடிகளாரின் வழிநடத்தலில் மன்னார் மறைமாவட்டக் குருக்களின் நிறைவான ஒத்துழைப்போடு இவ்விழா இனிதே இடம்பெற்றது.


**மன்னா வாசகர்களே!**

மன்னா பத்திரிகைக்கு நீங்கள் வழங்கும் ஆதரவுக்கு நன்றி கூறுகின்றோம். பத்திரிகையைப் பெறும் நீங்கள் அதற்குரிய பணத்தைக் காலம் தாமதிக்காமல் உடனடியாகச் செலுத்தி எம்மோடு ஒத்துழையுங்கள்.

*- மன்னா பதிப்பாசிரியர்*

### சுதேச குருக்கள் துறவியர் தினம்
Indigenous Clergy/ Religious Sunday

**யூலை 30**



நமக்குப் பணிபுரியும் சுதேச (சொந்த நாட்டை, பிரதேசத்தைச் சேர்ந்த) குருக்கள், துறவியரின் இறை அழைத்தலுக்காகச் செபிக்கவும், இவர்களின் உருவாக்கத்திற்காக தாராள நன்கொடைகளை வழங்கவும் இறைமக்களாகிய நாம் முன்வருவோமாக!

**மையப் பொருள்**

“எனக்குரிய நீ, என்னுடைய அடையாளமாய் இரு”

“Being mine, be a sign of mine”


### வாங்கி விட்டீர்களா.... ?
### புனித யோசவ்வாஸ் திரைப்படம்

புனித யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றுத் திரைப்படம் கலையருவி அமைப்பின் ஏற்பாட்டில் பங்குத்தந்தையர்கள் ஊடாகவும் மன்னா விநியோகஸ்தர்கள் ஊடாகவும் இப்போது விநியோகிக்கப்படுகிறது. ஒரு குறும்படத்தின் விலை 200 ரூபா. மன்னார் மறைமாவட்டத்தில் உள்ளவர்கள் உங்கள் பங்குத்தந்தையோடு தொடர்புகொண்டு இதனைப் பெற்றுக்கொள்ளுங்கள். **– கலையருவி.**

# மன்னா மனப்பொழிவு
## பதிப்பாசிரியர் பகர்வது

# சுதேச குருக்கள், துறவியர் தினம்

யூலை மாதம் 30ஆம் திகதி சுதேச குருக்கள் துறவியர் தினம் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் குருக்கள் என்றால் யார்? அவர்களின் தனித்தன்மை என்ன? என்ற கேள்விகளை முன்வைத்துச் சிந்திப்பது பொருத்தமாகும். இக்கேள்விக்கு திருச்சபையின் போதனை நமக்கு சில தெளிவுகளை, சில புரிதல்களைத் தருகின்றது.

**2ஆம் வத்திக்கான் சங்கம்**

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'திருச்சபை' என்ற ஏடு ஒரு குரு 'மறுகிறிஸ்துவாக செயற்படுகின்றார்' என்று கூறுகின்றது. "பணியாற்றும் குரு தான் பெற்ற புனித ஆணையுரிமையால் குருகுல மக்களை உருவாக்குகிறார்; ஆளுகிறார்; மறுகிறிஸ்துவாக நின்று நற்கருணைப் பலியை நிறைவேற்றுகின்றார்" (திருச்சபை, எண் 10).

"விசுவாசிகளுள் குருத்துவ நிலையைக் கொண்டிருப்பவர்கள் இறைவனின் வார்த்தையாலும் அருளாலும் திருச்சபைக்கு மேய்ப்பர்களாய் நின்று பணிபுரிய கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்" என திருச்சபை என்ற ஏடு எண் 11 கூறுகின்றது.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் 'குருக்களின் பணியும் வாழ்வும்" என்ற ஏடு, எண் 2, "குருக்கள் கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகின்றனர்" என்று கூறுகின்றது.
எனவே இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் படிப்பினைகளின்படி திருப்பட்டம் பெற்ற ஒரு குரு:
- மறு கிறிஸ்துவாக இருக்கின்றார்,
- கிறிஸ்துவின் பெயரால் நியமிக்கப்படுகின்றார்.
- கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகின்றார்

இதுதான் ஒரு குருவின் தனித்தன்மை.

**திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்**

குரு என்றால் யார் என்று இரண்டாம் வத்திக்கான் சங்கம் கூறிய கருத்துக்களை திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் இன்னும் செழுமைப்படுத்தி நமக்குத் தருகின்றார்.

'Pastores Dabo Vobis' "மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன்" என்ற தனது மறைத்தூதுத் திருமடலில் திருத்தந்தை புனித இரண்டாம் அருள் சின்னப்பர் வத்திக்கான் சங்கத்தின் இந்தக் கருத்துக்களை இன்னும் அழகாக, இன்னும் தெளிவாக விளக்குகின்றார்.

**கிறிஸ்துவின் ஆளுமையில் :**

"குரு கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகின்றார்" என்று கூறுகின்றார். குருவின் தனித்தன்மை அவர் தலைவரும் ஆயருமான கிறிஸ்துவின் ஆளுமையில் செயல்படுகின்றார் என்பதாகும். குறிப்பாக நற்கருணைப் பலியை ஒப்புக்கொடுக்கும்போதும், ஒப்புரவு அருட்சாதனத்தில் பாவமன்னிப்பு வழங்கும்போதும் குரு கிறிஸ்துவின் ஆளுமையில் செயற்படுகின்றார்.

"இது என் உடல், இது என் இரத்தம்" என்று நற்கருணைப் பலியின்போது குரு உச்சரிக்கின்ற வார்த்தையும், "நானும் பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் உம் பாவங்களிலிருந்து உம்மை விடுவிக்கிறேன்" என்று பாவமன்னிப்பின்போது குரு உச்சரிக்கின்ற வார்த்தையும் கிறிஸ்துவின் பெயரால், மறுகிறிஸ்துவாக, கிறிஸ்துவின் ஆளுமையில் உச்சரிக்கப்படுகின்ற வார்த்தையாகும்.

**குரு கிறிஸ்துவின் உயிருள்ள, தெளிவான உருவம்**

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் 'மேய்ப்பர்களை உங்களுக்குத் தருவேன்' என்ற தனது திருத்தூது மடல் எண் 12இல் "ஒரு குருவானவர், குருவாகிய கிறிஸ்துவின் உயிருள்ள, தெளிவான உருவம்" என்று கூறுகின்றார்.

**அருட்சாதன ரீதியிலான மறுதோற்றம்**

எண் 15இல் திருத்தந்தை இவ்வாறு கூறுகின்றார்; "குருக்கள் திருச்சபையிலும் திருச்சபைக்காகவும் தலைவரும் ஆயருமாகிய கிறிஸ்துவின் அருட்சாதன ரீதியிலான மறுதோற்றம் போன்று உள்ளனர்".

**இயேசுக் கிறிஸ்துவின் உருவத்தைப் பெறுகின்றார்.**

எண். 21இல் திருத்தந்தை கூறுகின்றார், "குரு அருட்சாதன அர்ப்பணத்தின் - திருப்பொழிவின் வழியாக, திருச்சபையின் தலைவரும் ஆயருமாகிய இயேசுக்கிறிஸ்துவின் உருவத்தைப் பெறுகின்றார்". எண் 15இல் திருத்தந்தை சொல்வார், "ஒரே வார்த்தையில், குருக்கள் இருப்பதும், செயல்படுவதும் தலைவரும் ஆயருமாகிய கிறிஸ்துவின் பெயராலும் ஆளுமையிலும் உலகிற்கு நற்செய்தி அறிவிக்கவும், திருச்சபையைக் கட்டி எழுப்பவுமே".

### குருக்களைப் புரிந்துகொள்வோம்

எனவே சுதேச குருக்கள் துறவியர் தினத்தை எதிர்நோக்கியிருக்கும் நாம் நமக்குப் பணிபுரியும் குருக்கள் யார் என்பதைப் புரிந்துகொள்வோம். அவர்களுடைய தனித்தன்மை என்ன என்பதை அறிந்துகொள்வோம். திருச்சபையினுடைய படிப்பினையின் ஒளியில் குருக்களைப் புரிந்து, மதித்து, அன்புசெய்வோம். பணிவாழ்வில் அவர்களுக்குக் கைகொடுப்போம்.

**மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை**
**அருட்பணியாளர் தமிழ் நேசன்,**
**பதிப்பாசிரியர், மன்னா.**

# சுவிஸ் நாட்டு ஆன்மீகப் பணியின் பின்னர் நாடு திரும்பியுள்ள டலிமா அடிகளார்

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. கி. அந்தோனிதாஸ் டலிமா அடிகளார் கடந்த எட்டு வருடங்களாக (2009 - 2017 வரை) சுவிஸ்லாந்து நாட்டில் உள்ள தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் ஆன்மீகக் குருவாகப் பணிசெய்தபின் கடந்த யூன் மாதம் 16ஆம் திகதி இலங்கையை வந்தடைந்தார்.

டலிமா அடிகளார் சுவிஸ் நாட்டிற்குச் செல்லும் முன் மன்னார் மறைமாவட்டத்தில் அன்பிய ஆணைக்குழு, சமூகத் தொடர்பு ஆணைக்குழு ஆகியவற்றின் இயக்குனராக இருந்தும், பங்குத்தந்தையாகவும் பல காத்திரமான பணிகளை முன்னெடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் குறிப்பாக தமிழ்க் கத்தோலிக்கர்கள் வாழும் நாடுகளில் தமிழ் ஆன்மீகப் பணியகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் உள்ள தமிழ் மறைமாவட்டங்கள் மற்றும் துறவற சபைகள் இந்த ஆன்மீகப் பணி மையங்களுக்கு பொறுப்பாக உள்ளன.

இந்த வகையில் சுவிஸ் தமிழ் ஆன்மீகப் பணி மையத்திற்குரிய ஆன்மீகக் குருவை மன்னார் மறைமாவட்டமும், இதேபோல் இங்கிலாந்து, ஜேர்மனி, கனடா ஆகிய நாடுகளுக்கு யாழ் மறைமாவட்டமும், பிரான்ஸ், இத்தாலி, நோர்வே ஆகிய நாடுகளுக்கு யாழ் அமலமரித்தியாகிகள் சபையும் குருக்களை அனுப்பிவருகின்றன.

தனது மறைமாவட்டம் திரும்பியுள்ள டலிமா அடிகளாரின் பணிவாழ்வு சிறப்புற மன்னா வாழ்த்துகிறது, செபிக்கிறது.

# உயர் கல்விக்காகத் தன்னை தயார்படுத்தும் அருட்பணி. வசந்தகுமார் அடிகளார்

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி. செ. வசந்தகுமார் அடிகளார் கடந்த ஆறு வருடங்களாக (2011 - 2017 வரை) காத்தான் குளம் பங்குத்தந்தையாகப் பணியாற்றியபின் தற்போது அமெரிக்காவில் தனது உயர் கல்வியை மேற்கொள்வதற்காக கொழும்பில் தங்கியிருந்து தன்னை தயார்-படுத்திவருகின்றார்.

வசந்தகுமார் அடிகளாருக்கு காத்தான் குளம் பங்குச் சமூகம் கடந்த மே மாதம் 21ஆம் திகதி பிரியாவிடை நிகழ்வை நடாத்தியது. மே மாதம் 22ஆம் திகதி அவர் பங்கில் இருந்து விடைபெற்றுச் சென்றார்.

எதிர்வரும் செப்ரம்பர் வரையிலான மூன்று மாத காலப்பகுதியில் அவர் கொழும்பு தெகிவளையில் உள்ள Amarican College of Higher Education என்ற நிறுவனத்தில் TOEFL எனப்படும் ஆங்கில மொழிக் கற்கையை மேற்கொண்டுள்ளார். இந்த மூன்று மாத கற்கைநெறியை நிறைவுசெய்தபின் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் அளவில் இவர் அமெரிக்கா செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

வசந்தகுமார் அடிகளாரின் உயர்கல்விக்கான ஆயத்தக் கற்கைநெறி சிறப்பாக அமைய மன்னார் மறைமாவட்டச் சமூகத்தின் வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து நிற்கின்றது.

# கொரிய மனித உரிமைகள் கருத்தமர்வில் அருட்பணி. ஞானராஜ் (நேரு)



சாந்திபுரம் பங்குத்தந்தை அருட்பணி. யூட் ஞானராஜ் குரூஸ் (நேரு) அடிகளார் தென்கொரியா நாட்டில் நடைபெற்ற நான்கு நாள் கருத்தமர்வில் கலந்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

'மே 18 அமைப்பினால்' ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த 'ஆசிய மனித உரிமைகள் பட்டயக் குழு' (Asian Human Rights Charter Forum) என்ற அமைப்பினால் ஒழுங்குசெய்யப்பட்ட கருத்தமர்விலேயே இவர் பங்குகொண்டிருந்தார். கடந்த மே மாதம் 17ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை இந்தக் கருத்தரங்கு தென் கொரியாவில் இடம்பெற்றது.

# மன்னார் மறைமாவட்டம்
## திருவழிபாட்டு நாட்காட்டி - 2017

### ஆடி

02. மடுமாதா திருவிழா.
03. இயேசுவின் திருஇருதயப் பெருவிழா - சிதம்பரபுரம்.
06. செபமாலை அன்னை திருவிழா - பாலையடி புதுக்குளம்.
- மன்னார் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசப் ஆண்டகை மன்னார் ஆயராக நியமனம்பெற்ற தினம் (1992).
09. மடு மாதா திருவிழா - மகாறம்பைக்குளம்.
10. தூய ஆரோக்கிய அன்னை திருவிழா - நானாட்டான் பங்குத் திருவிழா.
- புனித தோமையார் திருவிழா - முருங்கன், கன்னாட்டி.
13. நல்லாயன் ஆலயத் திருவிழா - மென்டிஸ் பண்ணை.
- செபஸ்ரியார் திருவிழா - மருதமடு.
15. குழந்தையேசு திருவிழா - மன்னார்.
- புனித மரிய கொறற்றி திருவிழா - பெரிய பண்டிவிரிச்சான்.
- கார்மேல் மாதா ஆலயம் - நாகர் இலுப்பைக்குளம்.
- தூய பற்றிமா அன்னை ஆலயம் - அண்ணாநகர்.
16. புனித கார்மேல் அன்னைத் திருவிழா - கார்மேல்நகர் (பொற்கேணி), இளமருதங்குளம், ஆவணம், அளவக்கை.
- கார்மேல் சபை அருட்சகோதரிகள் விழா
- தூய கப்பலேந்தி மாதா திருவிழா - பெரிய நொச்சிக்குளம்.
17. தூய கார்மேல் அன்னை திருவிழா - பறப்பாங்கண்டல்.
25. புனித இயாகப்பர் திருவிழா - கொக்குப்புடையான், நறுவிலிக்குளம், பறப்பாங்கண்டல், விடத்தல்தீவு, முருங்கன் கமம், கட்டுக்காரன் குடியிருப்பு, சிறுநீலாசனை, சிவபுரம்.
26. புனித அன்னம்மாள் திருவிழா - கொக்குப்புடையான், வங்காலை, பூவரசன்குளம்.
29. சதாசகாய மாதா திருவிழா - கந்தபுரம்
30. சுதேச குருக்கள் தினம்.

■ வியாழக்கிழமைகளில் மாலை 4.00 மணி தொடக்கம் 7.00 மணிவரை செபவழிபாடு - தோட்டவெளி ஆன்மீக இல்லம்·

# அமரர் செபஸ்ரியான் குரூஸ் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு



மன்னார் மறை மாவட்டத்தின் வங்கலைப் பங்கு மகனும் திருவுளப்பணியாளர் சபைக் குருவுமாகிய அருட்பணி. எல். செபஸ்ரியான் குரூஸ் அடிகளாரின் முதலாம் ஆண்டு நிறைவு இம்மாதம் யூலை 19ஆம் திகதி ஆகும்.

அன்னாரின் ஆன்மா இறைவனின் இன்ப சந்நிதியில் இளைப்பாற செபிக்கும்படி மன்னா இறைமக்களைக் கேட்டு நிற்கின்றது.

## உண்மை உறைக்கும் கமிலஸ்



(நன்றி - தி மெசஞ்சர்)


## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம்

- மன்னா நிர்வாகம் -

# சமயம் என்ற போர்வையில் பிரிவினைகள் வேண்டாம்

## கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தல விழாவில் கர்தினால் ஆண்டகை



சமயம் என்ற போர்வையில் பிரிவினைகளை நாம் வளர்த்துக்கொள்ளக்கூடாது. எந்தவொரு சமயமும் ஒருவருக்கு வேண்டிய எல்லாவற்றையும் போதிப்பதில்லை. ஆக சமயத்தைப் பின்பற்றுபவர்கள் என்று கூறுபவர்கள், இதற்காகப் பல பரித்தியாகங்களைச் செய்யவேண்டும் என கொழும்பு உயர் மறைமாவட்டப் பேராயர் கர்தினால் மல்கம் றஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

கொச்சிக்கடை தூய அந்தோனியார் திருத்தலத்தின் 183வது வருடாந்தத் திருவிழா யூன் மாதம் 13ஆம் திகதி வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருவிழாவுக்கு முதல்நாள் நடைபெற்ற சிறப்பு மாலை வழிபாட்டை வழிநடத்திய கொழும்புப் பேராயர் மல்கம் றஞ்சித் ஆண்டகை தனது மறையுரையில் தொடர்ந்து கூறியதாவது;

சமயம் என்பது அரசியல் அல்ல. மனிதன் தனக்குள் எடுத்துக்கொண்டு தன் வாழ்வோடு இணைத்துக்கொள்ளும் விருப்பம்தான் சமயம். “எனது சமயம் மட்டும்தான், ஏனைய சமயங்கள் தேவையில்லை” என்று நினைப்பது பிழை. இது இலங்கை நாட்டிலும் தற்போது தோன்றியிருப்பது மிகவும் மனவருத்தத்தைக் கொடுப்பதாக உள்ளது. அடிப்படைவாதிகளைப்போல் நாம் சமயத்திற்காகப் போரிட வேண்டியதில்லை. மாறாக அச்சமயத்தின் உண்மைத் தன்மையினைப் பின்பற்றி, அதற்கான மரியாதையைக் கொடுக்கும்போது, அதன் செயற்பாடுகளை முன்னொடுக்கும்போது சமயம் மனிதனுக்கு வழிகாட்டுகிறது. இதனால்தான், “உங்களின் ஒரு கன்னத்தில் அறைபவனுக்கு மறு கன்னத்தையும் காட்டுங்கள்” என்று இயேசு கூறினார். இத்தகைய சமயத்தின் போதனையின்படி வாழ்ந்தவர்தான் தூய அந்தோனியார். இதுதான் அவரின் வாழ்வின் அழகு. எனவே புனிதர்கள் என்போர் எமக்கு முன்மாதிரிகை; எமது சமயத்தின் பலம். மனிதன் எவ்வளவு உயரத்திற்குச் செல்ல முடியும் என்பதைக் காட்டியவர்கள். எனவே அவர்களுக்கு நாம் மரியாதை செய்கின்றோம் என்றார்.

## துயர் பகிர்கின்றோம்

- மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. பிரான்சிஸ் றெஜினோல்ட் அவர்களின் அன்புத் தாயார் திருமதி யக்கோவா பிரான்சிஸ் அவர்கள் (ஆட்காட்டிவெளிப் பங்கு) கடந்த யூன் மாதம் 4ஆம் திகதி கனடாவில் இறையடி சேர்ந்தார்.

- மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்திரு. சீமான் மரியதாசன் அவர்களின் அன்புத் தந்தை திரு. செபமாலை சவிரி அவர்கள் (அளவக்கைப் பங்கு – மாவிலங்கேணி கிராமம்) கடந்த யூன் மாதம் 8ஆம் திகதி இறையடி சேர்ந்தார்.

*தமது அன்புக்குரிய பெற்றோரை இழந்து தவிக்கும் எமது குருக்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் சார்பாக மன்னா தனது ஆழ்ந்த இரங்கலையும், செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறது. இறையடி சேர்ந்த இவர்கள் இறைவனின் பேரின்ப வீட்டில் என்றும் மகிழ்ந்திருப்பார்களாக!*

## தலைமன்னார் பங்கிலிருந்து சலேசியன் சபைக்கு புதிய அருட்சகோதரி



தலைமன்னார் தூய லோறன்ஸ் ஆலயத்தை சேர்ந்த தந்தை றிச்சாட் (கணேஸ்), தாய் றெஜினா ஆகியோரின் மகளாகிய மரிய ரோகினி அவர்கள் கடந்த மே மாதம் 31ஆம் திகதி அன்று சலேசிய (டொன் பொஸ்கோ) துறவறசபை அருட்சகோதரியாக தனது முதலாவது வாக்குறுதியை இறைவனுக்கு வழங்கினார். வவுனியா இறம்பைக்குளம் தூய அந்தோனியார் ஆலயத்தில் இடம்பெற்ற திருப்பலி வேளையில் இந்த முதல் வாக்குறுதி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. தலைமன்னார் பங்கில் இச்சபையைச் சார்ந்த முதல் அருட்சகோதரியாக இவர் விளங்குகின்றார்.

சிறு வயதிலே தனது தாயை இழந்த இச்சகோதரி குடும்பத்தைப் பொறுப்பேற்று வழிநடத்தும் முதற் பிள்ளையாக இருந்தபோதிலும் இறை அழைத்தலுக்கு செவிமடுத்து தன்னை அர்ப்பணித்தமை பாராட்டத்தக்கது.

இவர் தனது பாடசாலைக் கல்வியை தலைமன்னார் தூய லோறன்ஸ் பாடசாலையிலும், தலைமன்னார் துறை அ.த.க. பாடசாலையிலும் நிறைவுசெய்தார். தொழில்நுட்பக் கற்கை நெறிக்காக முருங்கனின் உள்ள டொன் பொஸ்கோ நிறுவனத்தில் இணைந்த இவர், அங்கு இறை அழைத்தலை உணர்ந்து புனித டொன் பொஸ்கோவினால் ஆரம்பிக்கப்பட்ட சலேசிய சபை அருட்சகோதரியாகத் தன்னை அர்ப்பணிக்க முன்வந்தார்.

இவர் தனது ஆன்மீகக் கற்கைநெறியையும் துறவற உருவாக்கல் பயிற்சியையும் நொச்சியாகம தூய டொன் பொஸ்கோ இல்லத்திலும் மற்றும் இந்தியாவில் உள்ள திருச்சி, வேலூர் போன்ற இடங்களிலும் நிறைவுசெய்தார்.

இவர் ஆரம்பித்துள்ள பணி வாழ்வில் இறைவனின் பிரசன்னம் இவரோடு இருக்கவும், பணிவாழ்வில் ஏற்படும் சவால்களை இவர் துணிவோடு வென்றெடுக்கவும் தலைமன்னார் பங்கு மக்கள் இறையாசீர் கூறி வாழ்த்தி நிற்கின்றனர்.

தகவல்: செயலாளர், அருட்பணிப்பேரவை, தலைமன்னார்.


## அருட்திரு. ஜேம்ஸ் ஜெறிக் குயின்ரஸ் (க.ச) அவர்களின் குருத்துவத் திருப்பொழிவு

விடத்தல்தீவுப் பங்கைச் சேர்ந்தவரும், இந்தியாவில் உருவாக்கம் பெற்றவருமான அருட்திரு. ஜேம்ஸ் ஜெறிக் குயின்ரஸ் (க.ச) அவர்களின் குருத்துவத் திருப்பொழிவுத் திருப்பலி கடந்த யூன் மாதம் 3ஆம் திகதி காலை 10.00 மணிக்கு மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெற்றது. திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் ஜெறி அவர்களைக் குருவாகத் திருப்பொழிவு செய்தார். மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களே இத்திருப்பலியை ஒப்புக்கொடுக்கவிருந்தார். ஆயினும் அவரது உடல்நலக்குறைவு காரணமாக திருகோணமலை ஆயர் இங்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜெறி சார்ந்திருக்கும் துறவற சபையான கப்புச்சின் சபையின் மரியாள் அமைதியின் அரசி - மதுரை மறைமாநில அதிபர் அவர்கள் இந்தியாவில் இருந்து வந்து இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

## எமது இஸ்லாமிய சகோதரர்களுக்கு இனிய றம்ழான் பெருநாள் வாழ்த்துக்கள்




கடந்த யூன் மாதம் 26ஆம் திகதி றம்ழான் பெருநாளைக் கொண்டாடிய எமது அன்பிற்கினிய இஸ்லாமிய சகோதரர்களுக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றோம்.

நாம் வாழும் மண்ணிலும் உலகெங்கிலும் சமய நல்லிணக்கம் மற்றும் சகிப்புத்தன்மை வளர்ந்தோங்க அனைவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக!

## மன்னார் மண்ணின் புதல்வியர் மூவர் சலேசிய சபைக் கன்னியர்களாக அர்ப்பணம்



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மூன்று அருட்சகோதரிகள் கடந்த மே மாதம் 31ஆம் திகதி (புனித டொன் பொஸ்கோவினால் ஆரம்பிக்கப்பட்ட) சலேசிய துறவற சபைக் கன்னியர்களாக தமது முதல் வாக்குறுதியை வழங்கி இறைவனுக்குத் தங்களை அர்ப்பணித்தனர்.

அருட்சகோதரி கணேஸ் மரிய ரோகினி - தலைமன்னார் மேற்கு
அருட்சகோதரி அமிர்தசிங்கம் நிரோசா - கொக்குப்புடையான்
அருட்சகோதரி கோமஸ் பிரியதர்ஷினி - கற்கடந்த குளம்
ஆகியோரே இந்த அருட்சகோதரிகளாவர். இவர்களுக்கு மன்னார் மறைமாவட்டத்தின் நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் மன்னா தெரிவித்து மகிழ்கின்றது. (தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

## அரசரெட்னம் அடிகளார் இறையடி



அடிகளாரின் ஆன்மா அமைதிபெறச் செபிப்போம்.

மட்டக்களப்பு மறைமாவட்டக் குருவான அருட்திரு. அரசரெட்னம் அடிகளார் கடந்த யூன் மாதம் 3ஆம் திகதி தனது முதிர்ந்த வயதில் மட்டக்களப்பில் இறையடி சேர்ந்தார்.

மட்டக்களப்பில் ‘அரசப்பா’ என அன்போடு அழைக்கப்படும் இவர், மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் மூத்த குருவாகத் திகழ்ந்தார்.

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சில் கூட்டத்தொடரில் பங்கெடுத்த அருட்சகோதரி நிக்கலா தன் அனுபவங்களைப் பகிர்ந்துகொள்கிறார்









ஐக்கிய நாடுகள் சங்கத்தின் மனித உரிமைகள் கவுன்சிலின் 34வது கூட்டத்தொடர் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 24ஆம் திகதி வரை ஜெனிவாவில் இடம்பெற்றது. மனித உரிமைகள் செயற்பாட்டாளரான அன்புச் சபையின் கன்னியர் (Sisters of Charity) அருட்சகோதரி நிக்கலா இம்மானுவேல் அவர்களும் இதில் கலந்துகொண்டார்.

இக்கூட்டத்தொடரில் தற்போது ஜேர்மனில் மறைப்பணியாற்றும் யாழ் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வரும், யாழ் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் முன்னாள் அதிபரும், உலகத் தமிழர் பேரவையின் தலைவருமான அருட்தந்தை எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளாரும் கலந்துகொண்டார்.

மன்னார் மறைமாவட்டத்தின் தோட்டவெளிப் பங்குத்தந்தையும், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவரும், மனித உரிமைகள் செயற்பாட்டாளருமான அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை அடிகளாரும் இதில் கலந்துகொண்டார். இவர்களை மேலே உள்ள படத்தில் காணலாம்.

அருட்சகோதரி நிக்கலா தனது அனுபவங்களை மன்னா பத்திரிகைக்கு பகிர்ந்துகொண்டார். அதனைக் கீழே தருகின்றோம்.

### “எனது ஜெனிவா பயணம் கடவுளின் வெளிப்படுத்தல் என்பது எனது வாழ்க்கை அனுபவம்”

“எனது ஜெனிவாப் பயண அனுபவம் எனக்கு மிகவும் பயனளித்த ஒன்று. இது எனது முதல் தடவையாக இருந்தது. பல ஐ.நா. பிரமுகர்களையும் மற்றும் பல சர்வதேச நிறுவனங்களையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் ஓர் அருட்சகோதரியாக இருந்ததால் மற்றவர்களைவிட என்னை ஒரு நம்பகரமான சாட்சியாகக் கணிப்பிட்டார்கள். அதன் விளைவாக எனக்கு ஐ. நா. உயர் ஆணையாளரைச் சந்திக்கும் வாய்ப்பும் கிடைத்தது. வடக்கு கிழக்கிலிருந்து போனவர்களில் எனக்கு மட்டும்தான் இந்த வாய்ப்புக் கிடைத்தது.

மார்ச் 2ஆம் திகதி ஒரு சர்வதேச அரங்கில் பேசும் வாய்ப்புக் கிட்டியது. அதில் நான் முக்கிய பேச்சாளராக இருந்தேன். அதில் யுத்தத்தின் பாதிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர், இராணுவமயமாக்கல் மற்றும் அரசியல் கைதிகள்பற்றி விளக்கினேன். உயர் ஸ்தானிகரிடம், “இலங்கையில் நீதி சமாதானம் ஏற்பட வேண்டுமென்றால் உண்மை வெளிப்படுத்தப்படவேண்டும். அப்போதுதான் பாதிக்கப்பட்டவர்கள் நேரடியாகத் தங்கள் பிரச்சினையை வெளிக்கொணரலாம். பாதிப்புக்களை ஏற்படுத்தியவர்கள் தங்கள் பொறுப்பை ஏற்றுக்கொண்டு சமாதானப் பாதையில் காலடி எடுத்து வைக்கலாம்” என்று கூறினேன்.

எனது ஜெனிவா பயண அனுபவத்தால் ஐ.நா. உயர்ஸ்தானிகர் அலுவலகத்திலிருந்து பலர் இன்றும் என்னுடன் தொடர்பில் இருக்கிறார்கள். நாட்டு நிலைமைகளை அறிந்து கொண்டிருக்கிறார்கள். இது ஒரு மிகவும் பயனுள்ள அனுபவம் என்றே கூறவேண்டும். இதை வழிப்படுத்திய இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்” - **அருட்சகோதரி நிக்கலா**

# வங்காலைப் பங்கில் முப்பெருவிழாவும் நற்கருணைப் பவனியும்




வங்காலைப் பங்கில் இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழாவும், திருப்பாலத்துவ சபை விழாவும் பீடப்பணியாளர்களின் அர்ப்பணப் பெருவிழாவும் கடந்த 18.06.2017 ஞாயிறு திருப்பலியின்போது கொண்டாடப்பட்டன. ஏற்கனவே வங்காலைப் பங்கில் பீடப்பணியாளர்களாகப் பணிபுரிந்துவரும் 41 சிறார்களுக்கு அர்ப்பண இடுப்புக் கயிறு வழங்கல் நிகழ்வும், புதிதாகப் பீடப்பணியாளர்களாக இணையும் 10 சிறார்களுக்கு பணியாடை வழங்கலும் திருப்பலிவேளையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வை முன்னிட்டு குறிப்பிட்ட சிறார்களுக்கான கருத்தமர்வுகள், பயிற்சிகள், விளையாட்டு நிகழ்ச்சிகள், கல்கமுவ திருயாத்திரை, கலை நிகழ்ச்சிகள் போன்றவை சிறப்பான முறையில் இடம்பெற்றன. திருப்பலி நிறைவில் 51 சிறார்களுக்குமான நினைவுச்சின்னமும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அன்று மாலை பிரமாண்டமானதும் உணர்வுபூர்வமானதுமான திவ்விய நற்கருணைப் பவனியும் வங்காலைப் பங்கின் அனைத்துச் சிற்றூர்களையும் உள்ளடக்கியதாக மிகுந்த பக்திப்பரவசத்துடன் இடம்பெற்றது. நான்கு தரிப்பிடங்களில் வழங்கப்பட்ட திவ்விய நற்கருணை தொடர்பான மறையுரைகள் மிகவும் ஆழமானதாகக் காணப்பட்டன. அனைத்துப் பங்கு மக்களின் ஒத்துழைப்பும் நன்றிக்குரியது. இப்பெருவிழாவை சிறப்பான முறையில் திட்டமிட்டு செயற்படுத்திய பங்குத்தந்தை சீ. ஜெயபாலன் அடிகள், உதவிப் பங்குத்தந்தை றொசான் அடிகள் அருட்சகோதரர் ஆகியோர் நன்றியுடன் பாராட்டுக்குரியவர்கள். அருட்சகோதரி யூடிற்றா உட்பட பங்கின் அனைத்துத் திருக்குடும்ப அருட்சகோதரிகளும், பீடப்பணியாளர்களின் பயிற்சியாளர் திரு. எல். ஸ்ரீபன் குரூஸ், திருப்பாலத்துவ சபை பொறுப்பாசிரியர் திருமதி. பிரான்சிஸ் அன்னம்மா குரூஸ் (நிலா) ஆகியோரும் சிறப்புப் பாராட்டுக்குரியவர்களே.

தகவல்: எஸ். சூசைநாயகம் றெவ்வல், செயலாளர்,
ஆலய அருட்பணிப்பேரவை, வங்காலை.

**மன்னாவை**
**உடனடியாக விநியோகியுங்கள்**

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே,
உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரியவர்களுக்கு விநியோகிக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.
**- மன்னா நிர்வாகம்.**

# திருமண பந்தத்தில் இணைந்த குமார் தம்பதியரை வாழ்த்துகிறோம்



கடந்த மே மாதம் 27ஆம் திகதி திருமண பந்தத்தில் இணைந்த திரு. திருமதி. எஸ். தினேஸ் குமார் - மரிய கிறெல்லா ஆகியோருக்கு மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னாவின் மனமார்ந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம். மாந்தை புனித லூர்து அன்னை ஆலயத்தில் இடம்பெற்ற இவர்களின் திருமணத் திருப்பலியில் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர், குருமுதல்வர் மற்றும் பல குருக்கள், துறவியர், இறைமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

உயிலங்குளம் முதலைகுத்தியைச் சேர்ந்த திரு. தினேஸ் குமார் (குமார்) அவர்கள் கடந்த 17 வருடங்களாக மன்னார் ஆயர் இல்லத்தில் சிற்றூழியராக அர்ப்பணிப்போடு பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவர் ஆயர் மற்றும் குருக்களுக்கு எப்போதும் உதவிசெய்கின்றவராக நல்மனம் கொண்ட சிறந்த பணியாளராக விளங்குகின்றார். இவருடைய இல்வாழ்வு நல்வாழ்வாக அமைய இறையாசீர் வேண்டுகின்றோம்.

# மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் டிலாசால் தின விழா






மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையில் டிலாசால் தின விழாவானது கடந்த 15.05.2017 அன்று கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர். ச. இ. றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். அத்துடன் இந்நிகழ்வின்போது கடந்த வருடம் க.பொ.த. சாதாரண தரத்தில் 9A சித்திபெற்ற மாணவர்களும் அவர்களின் பெற்றோர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

# காலப்பந்தாட்டப் போட்டியில் மன் /புனித சவேரியார் ஆண்கள் கல்லூரி சாதனை









மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் 18 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணியானது மாகாண மட்டப் போட்டியில் கலந்துகொண்டு சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் 20 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணியானது மாகாணமட்டப் போட்டியில் கலந்துகொண்டு First runner upஆகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இம்மாணவர்களையும் அவர்களுக்குப் பயிற்சிகொடுத்த ஆசிரியர்களையும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பாராட்டி நிற்கின்றனர். மன்னார் மறைமாவட்டம் சார்பாக மன்னாவும் இந்த வீரர்களைப் பாராட்டி மகிழ்கின்றது. இதுபோல் எதிர்காலத்தில் இன்னும் சாதனைகள் படைக்க வாழ்த்துகிறோம்.

# மன்/ புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் பரிசளிப்பு விழா







மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவானது கடந்த 25.05.2017 அன்று கல்லூரியின் அதிபர் அருட்சகோதரர் ச. இ. றெஜினோல்ட் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக வட மாகாணக்கல்விப் பணிப்பாளர் திரு. செ. உதயகுமார் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சுகந்தி செபஸ்ரியன், மன்னார் பிரதேச செயலாளர் திரு. பரமதாஸ், மன்னார் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜெகத் பலியகார ஆகியோர் கலந்துகொண்டனர். கௌரவ விருந்தினர்களாக மடுமாதா சிறிய குருமட அதிபர் அருட்தந்தை அ. ஞானப்பிரகாசம், அவுஸ்ரேலியா நாட்டின் பழைய மாணவர் சங்கத் தலைவர் திரு. அ. லோகநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். இந்நிகழ்வுகள் யாவற்றையும் அதிபர் அவர்கள் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## மன்னார் மறைமாவட்டச் செய்திகள்

# திருச்சபை எப்படியோ அப்படியே உலகமும் இருக்கும் பொதுநிலையினர் எப்படியோ அப்படியே திருச்சபையும் இருக்கும்

### வின்சன் டி போல் சபை கல்விப் புலமைப் பரிசில் நிகழ்வில் எஸ். கே. தேவராஜா அடிகளார்

திருச்சபை எப்படியோ அப்படியே உலகமும் இருக்கும். பொதுநிலையினர் எப்படியோ அப்படியே திருச்சபையும் இருக்கும் என்று அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் குறிப்பிட்டார். கடந்த மே மாதம் 27ஆம் திகதி மன்னார் குடும்பநல பொதுநிலையினர் பணி நடுநிலையத்தில் இடம்பெற்ற மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபை கல்விப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வுக்கு தலைமைதாங்கி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டி போல் சபை ஆன்மீக இயக்குனரான அடிகளார் தொடர்ந்து அங்கு உரையாற்றும்போது கூறியதாவது,

புனித வின்சன் டி போலின் நாமத்தைக்கொண்டு, அருளாளர் பிரட்றிக் ஒசான்னாம் அவர்களால் - அவர் இளைஞராக பரிஸ் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருந்தவேளையில் அவருடைய தலைமையில் - ஒரு சிறு குழுவாக அமைக்கப்பட்ட ஓர் இயக்கமே புனித வின்சன் டீ போல் சபையாகும்.

“ஏழைகளில் இறைவனைக் காணவேண்டும்” என்னும் தாரக மந்திரத்தோடு அவர் வின்சன் டீ போல் சபையினை நிறுவினார். அது இன்று உலகமெங்கும் பரந்து விரிந்து காணப்படுகின்றது. கடைநிலை வறியவர்களுக்கு அருகே இறைவன் இருக்கிறார் என்பதுவே இச்சபையினரின் வாழ்வாகவும் பணியாகவும் சான்றாகவும் விளங்கவேண்டும்.

தனது சொத்து, சுகம், உறவுகள், பந்தம் அனைத்தையும் துறந்து ஒரு பிச்சைக்காரன் வடிவிலே தூய யோசவ்வாஸ் இலங்கைக்கு வந்து, தூர்ந்துபோன கத்தோலிக்க திருச்சபையைக் கட்டியெழுப்பியதோடு, அனைத்து விதங்களிலும் இறைவனின் இரக்கத்தை வெளிப்படுத்தும் கருவியாக வாழ்ந்தார். 24 வருடங்களாக தூய யோசவ்வாஸ் அடிகளாருடன் நெருங்கிய பொதுநிலைத் துணையாளராக அவரது பணியாளன் ஜோன் அவரது பணிவாழ்வுக்கு உதவியாக இருந்தார். தூய யோசவ்வாஸ் அடிகளாருடன் இணைந்து செபித்து வந்ததுடன்,



அவரிடமிருந்து கிறிஸ்தவ மறையைக் கற்று, அவரோடு இணைந்து ஜோண் ஒரு சிறந்த மறைபரப்பாளராகினார். ஏழைகளுக்கு உதவும் பணியில் தூய யோசவ்வாசுடன் நெருக்கமாக இணைந்து மும்முரமாக ஈடுபட்ட பொதுநிலைப் பணியாளர் ஜோன், எமது வின்சன் டீ போல் சபை உறுப்பினர்களுக்கு ஒரு சிறந்த மேல்வரிச்சட்டம்.

எனவே நாமாக முன்வந்து பணியாற்ற, மற்றவர்க்கு உதவ, உள்ளதை மட்டுமன்றி உள்ளத்தையும் பகிர்ந்துவாழ, மாணவச் செல்வங்களுக்கு இன்றைய நாளில் அழைப்பு விடுக்கிறேன். உங்களுக்கு உதவுகிற இந்த வின்சன் டீ போல் சபையின் பணிகளில் பங்கெடுங்கள். கிடைக்கின்ற கல்விக்கான இந்தச் சிறிய உதவியை கல்வித் தேவைக்காக மட்டுமே பயன்படுத்துங்கள். நீங்கள் பெற்றுக்கொண்ட உதவியை மற்றவரும் பெற்றுப் பயடைய உதவி செய்யுங்கள். ஏனென்றால் சின்னஞ்சிறிய சகோதரருக்கு இவற்றை நீங்கள் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள் என்கிறார் ஆண்டவன் இயேசு.

## தூய வின்சன் டீ போல் மத்திய சபையின் கல்விப் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு

மன்னார் மறைமாவட்ட புனித வின்சன் டீ போல் மத்திய சபையினால் வருடந்தோறும் தேவையிலுள்ள மாணவர்களுக்கென வழங்கப்பட்டுவருகின்ற கல்விக்கான புலமைப்பரிசில் உதவித்தொகை வழங்கும் நிகழ்வானது, கடந்த மே மாதம் 27ஆம் திகதி குடும்பநல பொதுநிலையினர் பணி நடுநிலையத்தில் காலை 9.30 மணிக்கு இயக்குனர் அருட்தந்தை எஸ். கே. தேவராஜா அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினர்களாக அருட்திரு. ஜெறோம் லெம்பேட் (அ.ம.தி) அடிகளாரும், டிலாசால் இல்ல முதல்வர் அருட்சகோதரர் யோகன் அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 18 பங்குகளிலுள்ள பாடசாலை மற்றும் வளர்ந்தோர் பந்திகளிலிருந்து 87 தேவையிலுள்ள பாடசாலை மாணவர்கள் தம் பெற்றோர் மற்றும் பொறுப்பாசிரியர்கள் சகிதம் இந்நிகழ்விற்கு பாடசாலைச் சீருடையில் சமுகமளித்திருந்தனர்.

மறைமாவட்ட வின்சன் டீ போல் மத்திய சபை தலைவர் திரு. தோமஸ் மரியதாஸ் அவர்களால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டது. தொடர்ந்து புனித வளனார் தாழ்வுபாடு பாடசாலை மாணவர்களது வரவேற்பு நடனம் மற்றும் வங்காலை புனித ஆனாள் பாடசாலை மாணவியரது நடனம் ஆகியன அரங்கை அலங்கரித்தன. மன்னார் மறைமாவட்ட வின்சன் டீ போல் சபை ஆன்மீக இயக்குனர் அருட்திரு. எஸ். கே. தேவராஜா அடிகளார் தலைமையுரையாற்றினார். 29 பந்திகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 87 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதி வழங்கப்பட்டது.

அருட்பணி. ஜெறோம் லெம்பேட் அடிகளார் உரையாற்றும்போது திருத்தந்தையின் கருத்துக்களை முன்வைத்துப் பேசினார். திருத்தந்தையோடு சேர்ந்து நாமும், ஏழ்மையை ஒழிக்க முயல்வோம் என்றும் கூறி உரையாற்றினார்.

உபசெயலாளர் திருமதி. பி. கிறிஸ்பி குரூஸ் நன்றியுரை வழங்கினார். உதவிபெற்ற மாணவர்களின் தாய் அல்லது தந்தை, பொறுப்பாசிரியர், புனித வின்சன் டீ போல் சபையின் நிர்வாக உறுப்பினர்கள், பொதுநிலைப்பணியாளர்கள் என 200க்கும் மேற்பட்டோர் இவ்விழாவில் கலந்துகொண்டார்கள். பகல் 12.30 மணியளவில் புனித வின்சன் டீ போல் கீதத்துடன், குருக்களின் சிறப்பு ஆசீருடன் இந்த வைபவம் மகிழ்வுடன் நிறைவெற்தியது.

## தலைமன்னார் பங்கில் உறுதிப்பூசுதல்



தலைமன்னார் பங்கில் கடந்த யூன் மாதம் 25ஆம் திகதி 111 பிள்ளைகளுக்கு உறுதிப்பூசுதல் திருவருட்சாதனம் வழங்கப்பட்டது. மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை இந்த உறுதிப்பூசுதல் அருட்சாதனத்தை வழங்கிவைத்தார்.

தலைமன்னார் பங்கைச் சேர்ந்த தலைமன்னார் மேற்கு, தலைமன்னார் துறை, தலைமன்னார் ஸ்ரேசன் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பிள்ளைகளே இந்த அருட்சாதனத்தைப் பெற்றனர். இவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக இந்த அருட்சாதனத்தைப் பெற ஆயத்தம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தலைமன்னார் பங்குத்தந்தை அருட்திரு. தி. நவரெட்னம் அடிகளார் இந்நிகழ்வை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

**தகவல் : அருணா, தலைமன்னார் மேற்கு.**

## வவுனியா புனித சதாசகாய மாதா கியூரியாவின் ஆச்சஸ் விழா



வவுனியா (இறம்பைக்குளம்) பங்கின் புனித சதாசகாய மாதா கியூரியாவின் ஆச்சஸ் விழா கடந்த 03.06.2017 அன்று காலை 8.30 மணிக்கு வவுனியா, இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணியாளர் சத்தியராஜ் அடிகளார் தலைமையில் இடம்பெற்றது.

வவுனியாக் கியூறியாவின்கீழ் இயங்கும் 6 பிரசீடியங்களின் சேனையாளர்கள் இவ்விழாவில் பங்கேற்றனர். ஆச்சஸ் விழாவின் நிகழ்ச்சி நிரல் ஒழுங்கிற்கேற்ப நிகழ்வுகள் இடம்பெற்றன. சேனைக் கைநூலை ஆதாரமாகக்கொண்டு வவுனியாப் பங்கின் ஆன்ம இயக்குனர் ஒவ்வொரு சேனையாரையும் தொடக்கூடிய வழியில் மறையுரை ஆற்றி மரியன்னைக்கு எம்மை இவ்வாண்டு முழுவதும் அர்ப்பணிக்கவைத்தார்.

தொடர்ந்து நீலநிற உடையணிந்த சேனையார் தம்மை மரியன்னையிடம் அர்ப்பணித்த நிகழ்வு அருமையாக இருந்தது.

தொடர்ந்து நற்கருணைப் பிரசன்னத்தில் சேனையார் தம்மை முழுவதும் கையளித்து அருட்பணியாளரின் வழிகாட்டலில் ஒன்றித்திருந்தனர். நற்கருணை ஆசீரைத் தொடர்ந்து சேனையார் பங்குப் பணிமனையில் ஒன்றுகூடினர். இந்த ஒன்றுகூடலில் உதவிப் பங்குத்தந்தை அருட்பணி. பெய்லன் குரூஸ் அவர்களும் கலந்துகொண்டார்.

சேனையின் அங்கத்தவர்கள் தொகை அதிகரிக்கப்பட சேனையார் ஒவ்வொருவரும் முயற்சி எடுக்க வேண்டும் என்றும் மற்றும் சேனையார் செய்யும் பணிகள் பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

சிற்றூண்டி மற்றும் தாகசாந்தி அளிப்பு இடம்பெற்று, 11.30 மணியளவில் உதவிப்பங்குத்தந்தையின் ஆசீருடன் விழா இனிதே நிறைவுபெற்றது.

**தகவல்:** இராஜேஸ்வரி விக்டர், வவுனியா கியூறியாத் தலைவி.

## சின்னப்பண்டிவிரிச்சான் புனித சவேரியார் ஆலயத் திருவிழா

பண்டிவிரிச்சான் பங்கின் துணை ஆலயமாகிய சின்னப்பண்டிவிரிச்சான் கிராமத்தின் பாதுகாவலராம் புனித பிரான்சிஸ்கு சவேரியார் ஆலயத் திருவிழா கடந்த 15.05.2017 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

20.05.2017 அன்று இறுதி நாள் திருவிழாக் திருப்பலியை மடு மறைக்கோட்ட முதல்வரும், மடுத்திருத்தலப் பரிபாலகருமான அருட்பணி. எஸ். எமியானுஸ்பிள்ளை அடிகளார் தலைமையேற்று ஒப்புக்கொடுத்தார். புனிதரின் வாழ்வை சுருங்கக்கூறி மறையுரையாற்றியதுடன் திருச்சுரூப ஆசீரையும் வழங்கினார். திருவிழா ஏற்பாடுகளை பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்பணி. சவுல்நாதன் அடிகளார் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

19.05.2017 அன்று இரவு நடத்த நற்கருணை வழிபாட்டில் கிராமத்தின் மைந்தன் துரைசிங்கம் ரவி அவர்களின் பண உதவியுடனும், கிராமத்து இளைஞர்களின் பங்களிப்புடனும் ஆலய வளாகத்தில் நிரந்தரமாக அமைக்கப்பட்ட மின்னொளிப் பாதையினூடாக நற்கருணை ஆண்டவர் பவனி வந்தமை மக்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

**தகவல்: சி. வின்சன் யோட்ஸ், சின்னப் பண்டிவிரிச்சான்.**

## ஆட்காட்டிவெளிப் பங்கில் செபமாலை மாதாவின் தேர்ப்பவனியும் புனித சவேரியார் திருச்சுரூப ஸ்தாபகமும்





ஆட்காட்டிவெளிப் பங்கில் மாதாவின் தேர்ப்பவனி சிறப்பாக இடம்பெற்றது. கடந்த 28.05.2017 அன்று மாலை 5.00 மணிக்கு கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இந்தத் தேர்ப்பவனி மாலை 7.30 மணிக்கு ஆள்காட்டிவெளி புனித சவேரியார் ஆலயத்தை வந்தடைந்தது. மாலை 7.30 மணியளவில் ஆட்காட்டிவெளி ஆலயத்தில் அருட்பணி. எவ். றெஜினோல்ட் அடிகளாரினால் சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

திருப்பலியைத் தொடர்ந்து ஆட்காட்டிவெளி புனித சவேரியார் ஆலயத்திற்கு முன்பாக புனித சவேரியாரின் திருச்சுரூபம் ஸ்தாபகம் செய்யப்பட்டு அருட்தந்தையினால் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளவு பங்கு மக்கள் கலந்துகொண்டனர்.

# உள்ளத்து அனையது உயர்வு

- அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம் -

### இரு சாராரும் விதிவிலக்கல்ல:

இன்று பலர் மகிழ்ச்சியையே மறந்து, வேலை வேலை என்று அலைந்து திரிகின்றனர். இவர்கள் வாழ்வில் எது முக்கியம் என்பதை மறந்து சொத்துக்களைக் குவிப்பதிலேயே கண்ணும் கருத்துமாயுள்ளனர். இந்நுகர்வுக் கலாசாரத்தின் ஈர்ப்புகளுக்கு எவருமே விதிவிலக்கல்ல. எங்கள் திருஅவையிலும் திருநிலையினர், பொதுநிலையினர் இரு சாராருக்கும் இவை பொருந்தும்.

"வெள்ளத்து அனையது மலர்நீட்டம் - மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு" என்றார் பொய்யா மொழிப்புலவர் வள்ளுவர்.

### இரு பரிமாணங்கள்:

அனைத்து முன்னேற்றங்களும் இரு பரிமாணங்கள் கொண்டவை. மனிதன் மனிதனாக வாழ்வதற்கு பயனுள்ளதென்றால் அது அவசியமானது. பொருள்தான் எல்லாம், அதுவே 'தெய்வம்' என்று எண்ணினால் அது அவனது தொலைநோக்கை தொலைத்து அவனை அடிமையாக்கிவிடும். இதன் விளைவாக மனம் மரத்து, இதயங்கள் இறுகி அவன் தன் உறவுகளையும், நண்பர்களையுமே தேடாது விடுகிறான். அப்படித் தேடினாலும் சுய தேவைக்கே தேடி, அதன் விபரீத விளைவுகளைச் சந்திக்கிறான்.

### மனித முன்னேற்றம்:

"பேராசையோடு சொத்தைத் தேடுதல் தனிமனிதனின் தன்நிறைவுக்கும் மனித மாண்புக்கும் பெரும் தடையாக அமையும். பேராசைதான் அறநெறி வளர்ச்சியின்மையின் தெளிவான அடையாளம்" என்கிறது 'மனித முன்னேற்றம்' என்னும் சுற்றுமடல். செல்வம் என்னும் சொல்லே அது சென்றுவிடும் அல்லது நிலையற்றது என்பதையே சுட்டிநிற்கிறது.

### அறிவற்ற செல்வன்:

நாம் சேர்த்துவைக்கும் பொருட்கள் அனைத்தையும் ஒருநாள் இழக்கவேண்டும். அறிவற்ற செல்வனின் உவமையில் (லூக்.12:16-20) இன்றைய மனிதனின் நுகர்வுக் கலாசாரத்தை இயேசு தெளிவாகக் காட்டுகிறார். இரவும் பகலும் அவனது சிந்தனை எவ்வாறு செல்வத்தைக் குவிக்கலாம், கட்டிக்காக்கலாம் என்பதே. ஆனால் கடவுள் அவனிடம் 'அறிவிலியே, இன்றிரவே உன் உயிர் பிரிந்துவிடும். அப்பொழுது நீ சேர்த்து வைத்தவை யாருடையவையாகும்?' என்று கேட்டார் (லூக்.12:20). பலருடைய வாழ்வில் இவை இடம்பெறுவதை நாம் பார்த்தபின்பும் இவை எமக்குச் சுடலை ஞானமாகவே நின்றுவிடுகிறது. அதாவது அந்த கணத்தோடேயே நின்றுவிடுகின்றது.

### இரவில் செயலாற்ற முடியாது:

நாம் செய்த நன்மை தீமைகளே நம்மைப் பின்தொடர்பவை. "ஆம், அவர்கள் தம் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுவார்கள். ஏனெனில் அவர்களின் செயல் அவர்களைப் பின்தொடரும்" (திருவெளி 14:13). நிலைவாழ்வுக்குரிய சொத்தைச் சேகரிக்கும் சந்தர்ப்பம் இறப்போடு முடிந்துவிடும். "பகலாய் இருக்கும்வரை என்னை அனுப்பியவரின் செயலை நாம் செய்ய வேண்டியிருக்கிறது. இரவு வருகிறது. அப்போது யாரும் செயலாற்ற இயலாது" (யோவான்.9:4). இறக்கும் நேரத்தில் நன்மையையோ தீமையையோ, இறையன்பையோ இறை இரக்கத்தை நிராகரிப்பதையோ முடிந்த முடிவாகத் தீர்மானிக்கிறோம். இப்படியான எண்ணம் மோட்சமும் நரகமும் முடிவற்றவை என்பதை நமக்குத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.



### இறுதி வார்த்தைகள்:

இறக்கும் ஒரு மிகப்பெரிய கோடீஸ்வரனின் இறுதி வார்த்தைகள்: "உலக வர்த்தகத்தின் உச்சநிலையை அடைந்தேன். அனைவரின் பார்வையில் நான் வெற்றியின் இலக்கணம். என் வாழ்வில் இருந்ததோ நிறைந்த வேலை; அற்ப மகிழ்ச்சி. மரணம் என்னை அண்மித்தபோது, நோயுற்று நான் படுத்திருந்து என் வாழ்வை மீள்நோக்கினேன். பெருமையென நான் நினைத்த என் பெயரும் பொருளும் மங்கி அர்த்தமற்றவையாகத் தோன்றின. பணத்தை மட்டுமே வாழ்வில் குவித்த அதேவேளை வேறு முக்கியமானவைகளைக் கைநெகிழ்ந்துவிட்டேன் என்பதை உணருகிறேன். உறவுகளையும், வாழ்வின் ஏனைய விழுமியங்களையும் நான் தேடியிருக்க வேண்டும்". சொத்துக்களின் தொடர் தேடல் ஒருவரின் தொலைநோக்கையே தொலைத்துவிடும். ஆழமாக அன்பு செய்யும் இதயத்தை இறைவன் தந்தார். ஏன்? என் வாழ்வின் இறுதியில் என்னுடன் கூடவருவது என் அன்புச் செயல்களைத் தவிர வேறு எவை? "அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்".

### இவர் யாரோ?

இழந்தவற்றில் எதையும் மீளப்பெற்றுக்கொள்ளலாம். ஆனால் வாழ்வை....? காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டும். உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம். இறப்பின்போது இவ் இறுதி வார்த்தைகளை உதிர்த்த உதடுகள் யாருடையவை என்று வியக்கிறீர்களா? இவர் ஒரு மறைபோதகரோ மெய்யியலாளரோ அல்லது ஆன்மீகவாதியோ அல்ல. Macintosh கணனி, Apple கணனி, i Phone, i Pad, i Pod என்பவற்றைக் கண்டுபிடித்த கோடீஸ்வரர் ஸ்ரீவ் ஜோப்ஸ். இவரது வார்த்தைகள் வாசகர் உள்ளங்களை ஊடறுத்து செல்லுகின்றனவல்லவா? அன்பை அடித்தளமாகக் கொண்ட ஆன்மீகம் இல்லாமல் வெறும் உலக செல்வம் எம்மைப் பின்தொடருமோ?

இவற்றையே இன்றைய திருத்தந்தை கூறும்போது: "வாழ்வில் நிலைக்கும் விழுமியங்கள் இறைவனும் அயலவரும். இறைவனை நேசிப்பதும் தேவையில் உழல்வோருக்கு உதவுவதுமே ஆன்மீக செல்வத்தைத் தேடும் வழிகள்" என்றார். இவற்றைத் தேடினால் நாம் கண்களை மூடும்போது கடவுள்முன் வெறுங்கையராக நிற்கமாட்டோம்.

*"வெள்ளத்து அனையது மலர்நீட்டம் - மாந்தர்தம் உள்ளத்து அனையது உயர்வு"* மனத்தூய்மையோடு வாழ்வுக்குத் தேடவேண்டியவற்றைத் தேடும்போது உள்ளம் உயரும்; வாழ்வும் உயரும். அன்றேல் நுகர்வுக் கலாசாரத்துள் மூழ்கி மடிய வேண்டிவரும்.

# அன்பிய வாழ்வில் வளர....

அருட்சகோதரி. மேரி றுவீனா. தி.கு.க.மடம். வங்காலை

திருத்தூதர்பணி நூல் 2:42-47இல் அன்பியத்தின் அடிப்படைக் கூறுகள் இடம்பெற்றிருக்கின்றன. அன்பிய வாழ்வின் அடிப்படைக் கூறுகள் அன்பு, பகிர்வு, மன்றாட்டு (செபம்) என்பவையாகும்.

### 1. அன்பு :

இறைவார்த்தையை வாசிக்கும்போது இறைவனுடைய அன்பின் தன்மையை, அதன் ஆழ நீளத்தை ஓரளவு நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. "தாய்கு அன்பு வற்றிப்போகுமா?" (எசா 49:15), "உள்ளங்கையில் உன்னை நான் பொறித்து வைத்துள்ளேன்" (எசா 49:16), "நீ என் அருமை மகன் அல்லவா? நீ என் அன்புக்குழந்தை அல்லவா?"(எரே 31:20) போன்ற வார்த்தைகளின் வழியாக ஆண்டவர் தன் அன்பை நாம் உணரும்படி செய்கின்றார்.

இறைத்தந்தையின் இந்த அன்பை வாழ்ந்தவர் இயேசு. அவரே விண்ணிலிருந்து மண்ணுலகிற்கு வந்தவர். அவருடைய பிறப்பு அன்பின் அடையாளம்; அவருடைய புதுமை, போதனைகள் அன்பின் அடையாளம்; அவருடைய பாடுகள், மரணம், உயிர்ப்பு அனைத்துமே அன்பின் அடையாளமாகும்.

லூக்கா 6:27இல் "உங்கள் பகைவரிடம் அன்புகூருங்கள். உங்களை வெறுப்போருக்கு நன்மை செய்யுங்கள்" என்று கூறியதன் மூலம் அன்பை யார் யாருக்கெல்லாம் நாம் கொடுக்க வேண்டும் என்று இயேசு சுட்டிக்காட்டுகின்றார்.

யோவான் 2:1-11இல் காணாவூர்த் திருமண நிகழ்வு கூறப்பட்டிருக்கிறது. மரியாளுடைய அன்பும் கரிசனையும், இயேசுவின் அன்பும் இரக்கமும் இந்த நிகழ்வில் வெளிப்படுகின்றன. உரோமர் 13:8இல் "ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதே நீங்கள் செலுத்தவேண்டிய ஒரே கடனாய் இருக்கட்டும்" என்று பவுலடியார் கூறுகிறார். கிறிஸ்துவின் இந்த அன்பை வாழ்ந்த, அன்பின் அடையாளமாகத் திகழ்கிறார் அன்னை திரேசா.

### 2. பகிர்வு :

எமது பகிர்வு எத்தகையதாக இருக்கவேண்டுமென்பதை லூக்கா 10: 30-35இல் நல்ல சமாரியன் உவமை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. நாம் இறைவார்த்தையைப் பகிர்ந்துகொண்டால் மாத்திரம் போதாது. எமது பகிர்தல் வாழ்வாக்கப்பட வேண்டும். பொருளாகவோ, பணமாகவோ, நேரமாகவோ எதுவானாலும் பகிரப்பட வேண்டும். நல்ல சமாரியன் குற்றுயிராக இருந்தவனுடைய அருகில் செல்கிறான்; இரக்கப்படுகிறான்; காயங்களைக்கட்டி தேவையான அனைத்தையும் செய்கிறான். எனவே பகிர்தல் இத்தகையதாக அமைய வேண்டும்.

### 3. செபம் (மன்றாட்டு):

குடும்பத்தில் இணைந்து செபிக்காமல் அன்பியத்தில் செபிக்க முடியாது. உன்னதமான உயர்ந்த புனிதமான செபம் திருப்பலி. இறைவார்த்தை வழியாக, நற்கருணை வழியாக ஆண்டவருடைய பிரசன்னம் திருப்பலியில் இருக்கிறது.

எபிரேயர் 4:12இல் இறைவார்த்தை உயிருள்ளது, ஆற்றல் வாய்ந்தது எனச் சொல்லப்பட்டுள்ளது. இந்த வார்த்தை கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ நம்மை வழிநடத்திச் செல்கின்றது.

கலாத்தியர் 2:20இல் "வாழ்பவன் நானல்ல, என்னில் கிறிஸ்துவே வாழ்கிறார்" எனக் கூறப்பட்டுள்ளது. என்னுடைய கண்களில் இயேசு இருக்க வேண்டும்; என்னுடைய காதுகளில் இறைவார்த்தை ஒலிக்க வேண்டும்; என்னுடைய வாயில் இயேசுவின் பாடல் ஒலிக்க வேண்டும். சாட்சிய வாழ்வு என்பது இயேசுவை அப்படியே பிரதிபலிப்பது. இயேசுவைப்போல வாழ்ந்தவர் புனித பவுலடியார். அவருடைய பேச்சு இயேசுவைப்போல் இருந்தது. அவருடைய மூச்சு இயேசுவைப்போல் இருந்தது. ஆகையினால்தான் "என்னுடைய பலவீனத்தில் ஆண்டவருடைய பலம் இருக்கிறது" என்று அவர் கூறினார்.

இயேசுவை முழுமையாகப் பிரதிபலிப்பதாக எமது வாழ்வு இருக்க வேண்டுமெனில்;

01. இயேசுவை நாம் அறிய வேண்டும்.
02. இயேசுவை நாம் அனுபவிக்க வேண்டும்.
03. இயேசுவை வாழ்வால் அறிவிக்க வேண்டும்.

01. இயேசுவை நாம் அறிய வேண்டும்.

இயேசுவை அறிய, இறைவார்த்தையை நாளும் வாசிக்க வேண்டும். மத்தேயு 16:16இல் "இவரே மெசியா" - என பேதுரு அறிக்கையிடுகின்றார். லூக்கா 18:39இல் "தாவீதின் மகனே" - என பார்வையற்றவர் இயேசுவை அழைக்கின்றனர். மத்தேயு 27:19இல் "இவர் நேர்மையாளர்" - என பிலாத்துவின் மனைவி கூறுகிறாள். திருப்பலிக் கொண்டாட்டத்தில் இறைவார்த்தைப் பகுதி இயேசுவை அறிவிக்கிற நேரம். எனவே இயேசுவை அறியவேண்டுமென்றால் முழுத்திருப்பலியில் பங்குபெற வேண்டும்.

02. இயேசுவை நாம் அனுபவிக்க வேண்டும்.

திருப்பாடல் 34:4இல் "துணை வேண்டி நான் ஆண்டவரை மன்றாடினேன்; இவர் எனக்கு மறுமொழி பகர்ந்தார்" எனக் கூறப்பட்டுள்ளது. விடுதலைப்பயண நூல் 14:13இல் செங்கடலைக் கடந்த நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. இதில் மோயீசன் "ஆண்டவருடைய கரம் என்னோடு இருந்தது" என்று கூறுகிறார். எனவே நாம் இறைவார்த்தையை அறிவுபூர்வமாக மட்டும் நோக்காமல் அதை எமது வாழ்வில் சுவைக்க வேண்டும், அனுபவிக்க வேண்டும்.

3. இயேசுவை வாழ்வால் அறிவிக்க வேண்டும்.

நாம் எமது வாழ்வில் இயேசுவை அறிந்து அவரை அனுபவித்தால், அதாவது இவை இரண்டும் இருந்தால் நமது வாழ்க்கை மாறும். நாமும் இயேசுவாக வாழலாம். நமது வாழ்க்கையின் மகிழ்ச்சி சாட்சியமான வாழ்வே. சாட்சிய வாழ்வினால் நாம் இயேசுவை அறிவிக்கலாம். இப்படியான வாழ்வே அன்பியமாக மலரும், வளரும்.

# சிதம்பரபுரத்தில் இறை இரக்கப் பெருவிழாவும், நற்கருணைப் பவனியும்









கோமரசன் குளம் பங்கிற்கு உட்பட்ட சிதம்பரபுரம் திருஇருதய ஆண்டவர் ஆலயத்தில் முதற் தடவையாக இறை இரக்கப் பெருவிழாவும், நற்கருணைப் பவனியும் கடந்த 23.04.2017இல் அருட்தந்தை கிறிஸ்டி (CRM) அடிகளார் தலைமையில் கோமரசன்குளம் பங்குத்தந்தை இ. அகஸ்டின் புஸ்பராஜ் அடிகளாரின் வழிநடத்தலில் நடைபெற்றது.

கிறிஸ்டி அடிகளாரின் மறையுரையில், "நாம் செய்யும் ஆடம்பர செலவுகளைத் தவிர்த்து நாளாந்தம் வறுமையில் வாழ்வோரின் துயர் போக்குவதே மேலான செபமாகும்" என்று ஒரு ஆழமான சிந்தனையைத் தெளிவுபடுத்தினார். இவ்விழாவானது, கோமரசன்குளம் பங்கில் வரலாறு காணாத பெருவிழாவாக, வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பங்குத்தந்தையின் அறிவுரை, பங்குச்சபை, பங்கு மக்கள் அனைவரின் அயராத உழைப்பு, அருட்சகோதரிகளின் வழிநடத்தல் போன்றவை காரணமாக ஆலயம் சிறப்புற அழகுபடுத்தப்பட்டு புதுப்பொலிவுடன் இறைவன் வாழும் இல்லமாகக் காட்சியளித்தது. எனவே அனைத்து இறைமக்களும், இவ்விழாவில் பங்குகொண்டு இறை இரக்கத்தின் பேரன்பையும் நற்கருணையின் அளவில்லா இரக்கத்தையும் பெற்றிட இது வழிசமைத்தது. பங்குத்தந்தை இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். இறுதியாக நற்கருணைப் பவனியும், நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது. அனைவருக்குமான சிறப்பான விருந்துபசாரத்துடன் இவ்விழா இனிதே நிறைவுபெற்றது.

தகவல் : ஜ. இருதய மேரி

**புனித யோசவ்வாஸ் ஆண்டு சிறப்புக் கட்டுரை**

# இலங்கையின் ஆரம்பத் திருச்சபை வரலாறும் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் வாழ்க்கைப் பயணமும்

திரு. ஜெயதாஸ் மிராண்டா - வங்காலை

போர்த்துக்கேயரிடமிருந்து இலங்கை மக்களுக்குக் கிடைத்த மாபெரும் கொடை கத்தோலிக்க விசுவாசமாகும். போர்த்துக்கேயர் 1505ஆம் ஆண்டு எதிர்பாராதவிதமாக திடீரென இலங்கையில் முதல்முறையாகக் காலடிவைத்தனர். கொழும்பு துறைமுகத்தருகே கட்டப்பட்ட புனித லவுறேஞ்சியார் சிற்றாலயமே இலங்கையில் கட்டப்பட்ட முதல் கத்தோலிக்க வழிபாட்டுத்தலமாகும். போர்த்துக்கேயருடன் இலங்கைக்குவந்த அருட்திரு. பிறேவிசென்ரே அடிகளாரே இலங்கையில் முதல் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். 1543இல் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த ஆறு குருக்கள் அடங்கிய குழுவே இலங்கைக்கு வந்த முதல் மறைபரப்புப் பணியாளர் குழுவாகும்.

1550ஆம் ஆண்டுக்குமுன் கோட்டையிலும், கொழும்பிலும் பரவியிருந்த கிறிஸ்தவ மதம் பின்பு கரையோர நகரங்களிலும் ஆரம்பிக்கப்பட்டு தேவாலயங்கள் நிறுவப்பட்டன. அக்காலத்தில் இலங்கைத் திருச்சபை முழுவதும் இந்திய கொச்சின் மறைமாவட்ட ஆயரின் நிர்வாகத்தின்கீழ் அமைந்திருந்தது.

1602ஆம் ஆண்டில் இயேசுசபைக் குழுவினர் இலங்கையில் மறைபரப்புப்பணியிலே பங்கெடுக்க வந்தனர். பிரான்சிஸ்கன் சபை குருக்களும், இயேசுசபை குருக்களும் போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் ஆர்வத்துடன் பணிசெய்து பல்லாயிரக்கணக்கான மக்களை கத்தோலிக்க திருச்சபையில் சேர்ந்தனர்.

1605இல் பிரான்சிஸ்கன் சபையினருக்கும் இயேசு சபையினருக்கும் உதவிசெய்ய புனித சாமிநாதர் சபையையும், புனித அகுஸ்தினார் சபையையும் சேர்ந்த குருக்களும் வரவழைக்கப்பட்டனர். இவ்வாறு இச்சபைகளைச் சேர்ந்த மறைபரப்பாளர்களின் அயராத உழைப்பினால் நற்செய்தி எங்கும் போதிக்கப்பட்டு திருச்சபை வளர்ந்தது.

அவர்கள் பல நோயாளர்களைக் குணமாக்கி அவர்களுக்காகச் செபித்து அசுத்த ஆவிகளை விரட்டி மக்களின் நன்மதிப்பைப் பெற்றனர். நீர்கொழும்புக்கும் காலிக்கும் இடைப்பட்ட கடலோரப் பகுதிகளில் இருந்த கிறிஸ்தவர்கள் போர்த்துக்கேயரின் பாதுகாப்பைப் பெற்றிருந்தமையால் இப்பிரதேசங்கள் வெகு முன்னேற்றமடைந்தன. பல பங்குகளும், துறவற மடங்களும், பக்திச்சபைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இலங்கைக்குவந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் யாழ்ப்பாணப் பகுதிகளிலும் மறைமுகமாகப் பணியாற்றினர்.

அக்காலத்தில் யாழ்ப்பாண அரசை சங்கிலி அரசன் ஜெகராச சேகரன் என்ற பெயரில் நல்லூரிலிருந்து ஆண்டுவந்தான். 1543ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்திற்குள்வந்த பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் இரகசியமாக நற்செய்தியை போதித்து பலரை மனந்திருப்பினர். இவ்வாறு அவர்கள் மாதோட்டத்திலும், யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பணிபுரிந்தனர். சங்கிலி அரசன் தனது அரசில் கிறிஸ்தவம் போதிக்கப்படுவதை முற்றாக எதிர்த்தான். அக்காலத்தில் மன்னார் யாழ்ப்பாண அரசின் ஒரு பகுதியாகவே இருந்தது.

மன்னார் மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவிய செய்தியைக் கேள்வியுற்ற சங்கிலியன் கோபமும் பயமும் அடைந்தான். சங்கிலியன் ஒரு மனிதப்பண்பற்ற கொடியவன். எனவே சங்கிலியன் 5000 படைவீரர்களைத் திரட்டி மன்னாருக்குச் சென்றான். மன்னார் கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் இருந்தனர். இதனால் சங்கிலியன் கட்டளைப்படி சங்கிலியனின் படைவீரர்களால் ஏறக்குறைய 700 பேர் 1544ஆம் ஆண்டு மார்கழி மாதம் தோட்டவெளி என்னுமிடத்தில் மிகக்கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இவர்களையே நாம் 'மன்னார் மறைசாட்சிகள்' என அழைக்கின்றோம். மறைசாட்சிகளின் இரத்தம் விசுவாசத்தின் வித்தாக முளைத்தது. மன்னார் புண்ணிய பூமியாக மாறியது. மன்னாரில் குடியேறி வாழ்ந்த மக்கள் ஆயிரக்கணக்கில் திருமுழுக்குப்பெற்று கிறிஸ்தவத்தைத் தழுவினர்.

1657ஆம் ஆண்டில் போர்த்துக்கேயர் கத்தோலிக்க திருச்சபையைச் சார்ந்தவர்களாகவும், ஒல்லாந்தர் புரொட்டஸ்தாந்து கல்வனிஸ்ற் சபையைச் சார்ந்தவர்களையும் இருந்தபடியால் இரு நாடுகளுக்குமிடையே ஆரம்பத்திலிருந்து போட்டியும், பூசலும் இருந்துவந்தன. கீழைத்தேச வர்த்தக ஏகபோக உரிமையைக் கைப்பற்றுவதற்காக ஒல்லாந்தர் போர்த்துக்கேயரோடு போர் செய்து இலங்கையைக் கைப்பற்றினர். இதனால் போர்த்துக்கேயர் இலங்கையைவிட்டு வெளியேறினர். போர்த்துக்கேயரின் ஆட்சியின் முடிவில் ஏறக்குறைய 200,000 கத்தோலிக்கரும், 125 ஆலயங்களும், 100 பங்குகளும், 120 குருக்களும் இருந்தனர்.

ஒல்லாந்தர் இலங்கையிலிருந்து கத்தோலிக்க மதத்தை முற்றாக அழிப்பதற்கு வேண்டிய திட்டங்களை நடைமுறைப்படுத்தினார்கள். கத்தோலிக்க மதம் நாட்டில் முற்றாகத் தடைசெய்யப்பட்டது. ஒல்லாந்தரின் புரட்டஸ்சாந்து சபை பரப்பப்பட்டது. அனைத்துக் கத்தோலிக்க ஆலயங்களும், பாடசாலைகளும் பறிமுதல் செய்யப்பட்டன. சில ஆலயங்கள் அழிக்கப்பட்டன. அங்கிருந்த திருச்சுரூபங்கள் உடைக்கப்பட்டன. கத்தோலிக்க பாடசாலைகள் அனைத்தும் கல்வினிஸ்ற் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. எல்லாக்கத்தோலிக்க குருக்களும், மறைபரப்பாளர்களும் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டனர். கத்தோலிக்க மக்கள் இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ ஒன்றுகூடி கத்தோலிக்க ஆராதனைகளை நடத்துவது தண்டனைக்குரிய குற்றமாக அறிவிக்கப்பட்டது. ஒல்லாந்தர் கத்தோலிக்க சமூகங்களை கல்வினிஸ்ற் சமூகங்களாக மாற்றுவதிலேயே தம் முழுக்கவனத்தையும் செலுத்தினர்.



ஒல்லாந்தரின் துன்புறுத்தலினால் சில கத்தோலிக்கர் தங்கள் பழைய பௌத்த அல்லது இந்து மதங்களுக்கு மீண்டும் திரும்பிச்சென்றனர். ஆனால் கடலோரப்பகுதிகளில் வாழ்ந்தவர்கள் தங்கள் விசுவாசத்தில் உறுதியாய் நின்று கத்தோலிக்க சமயத்தை காப்பாற்றினர்.

ஒல்லாந்தரிடமிருந்து தாம் காப்பாற்றிக்கொண்ட திருச்சுரூபங்களை வீடுகளில் மறைவாக வைத்து வணங்கினர். ஞாயிறு தினங்களில் அவர்களுக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்க குருக்கள் இல்லாமையால் மூப்பரைத்தலைவராக தெரிவுசெய்து ஒரு இடத்தில் கூடி பூசைத்தியானங்கள், பிரார்த்தனைகளை வாசித்து செபித்தனர். இவ்வாறு ஒல்லாந்தரின் ஆட்சியின்கீழ் பல இன்னல்கள், இடையூறுகள், துன்பங்களோடு வாழ்ந்துவந்த சில கத்தோலிக்கர்கள் மக்கள் வாழ்ந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து அமைதியும் பாதுகாப்புமுள்ள வேற்றிடங்களைத் தேடிச்சென்றனர்.

இவ்வாறு மாந்தைப்பகுதியில் வாழ்ந்த சில கத்தோலிக்கர்கள் தாங்கள் இரகசியமாக வணங்கிவந்த பல அற்புதங்களைச் செய்த மாதா சுரூபத்தையும் எடுத்துக்கொண்டு அடர்ந்த காடுகள் சூழ்ந்த மடு என்னுமிடத்திற்குச் சென்றனர். அங்கு அவர்கள் தம் கத்தோலிக்க விசுவாசத்தைக் கடைப்பிடித்து அமைதியுடன் வாழ்ந்தனர். இதுவே மருதமடுத்திருப்பதியின் ஆரம்ப வரலாறாகும். ஒல்லாந்தரின்மேல் கோபம் கொண்டிருந்த கண்டி அரசன் ஒல்லாந்தரினால் துன்புறுத்தப்பட்ட கத்தோலிக்கர்களுக்கு பாதுகாப்பு அளித்து அவர்களை சீதவாக்கை ருவான்வெல, வாகக்கோட்டை, கல்கமுவ முதலிய இடங்களில் குடியமர்த்தினான். இறைவனின் திட்டத்தின்படி ஒல்லாந்தரின் கலாபனையினால் இலங்கை திருச்சபை சுத்திகரிக்கப்பட்டு, புதிதாய் தாபிக்கப்பட்டு, புத்துயிருடன் பிரகாசமாய் வளரவேண்டுமென்று இறைவன் விரும்பினார்.

அத்துடன் யாவராலும் கைவிடப்பட்டு அனாதைகளாகயிருந்த இலங்கைக் கத்தோலிக்கருக்கு பணிபுரிய தம் வாழ்க்கையை முற்றாக அர்ப்பணிக்கும்படியாக எளிமையான ஓர் இளம் இந்திய குருவை ஏவினார். அவர்தான் நாம் "இலங்கையின் அப்போஸ்தலர்" என இன்று அன்போடு அழைக்கும் புனித யோசவ்வாஸ் அடிகளார்.

இவர் 1651ஆம் ஆண்டு சித்திரை மாதம் 21ஆம் திகதி இந்தியாவின் கோவாவிலுள்ள ஓர் உயர்ந்த கொங்கனி பிராமணர் குடும்பத்தில் கிறிஸ்தோப்பர் வாஸ், மரிய மிராண்டா எனும் பக்திமிக்க பெற்றோருக்குப் பிறந்தார். இவர் தனது சிறுபராயத்திலிருந்தே கூர்மையான அறிவும், மிகுந்த தேவபக்தியும் நிறைந்தவராக விளங்கினார். தம் வாழ்வை இறைபணிக்கென அர்ப்பணிக்க விரும்பி குருத்துவப் பயிற்சி பெற்றார். 1676இல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சுதேச துறவற சபையான ஒரற்றோரியன் சபையில் இணைந்தார். 1681ஆம் ஆண்டில் கோவைக்கு தெற்கேயிருந்த கன்னடத்திற்கு குருமுதல்வராக அனுப்பப்பட்டு பணிபுரிந்தார்.

கன்னடம் அப்பொழுது இலங்கையிலிருந்த ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழிருந்தது. அங்கிருக்கும்பொழுது இலங்கையைத்தரிசித்த சில குருக்கள் மூலமாக அங்கு வாழும் பெருந்தொகையான கத்தோலிக்க மக்களின் குருக்கள் உதவியற்ற பரிதாப நிலையைப்பற்றி அறியவந்தார். இலங்கை மக்களுக்கு ஆன்மீகப் பணிபுரிய ஒரு குருவும் இல்லாததையிட்டு மிகவும் மனக்குழப்பமடைந்து கவலைப்பட்டார். அங்கு சென்று குருக்களின்றித்தவிக்கும் அம்மக்கள் மத்தியில் பணிபுரிய வேண்டும் என்ற ஆசை அவர் மனதில் உதித்தது.

அதனால் வேதகலாபனை நடந்துகொண்டிருக்கும் இலங்கைக்குள் இரகசியமாக நுழையும் வழிமுறைகளை அறிந்துகொண்டார். எனவே புனித யோசவ்வாஸ் அடிகளார் தன்னுடைய விசுவாசமுள்ள யோன் எனும் பணியாளனுடன் இரகசியமாக தூக்குக்குழுக்கு வந்து, கூலியாள் போன்ற வேடத்தில் 1687இல் இலங்கைப் பயணத்தை தொடர்ந்தார். கடலின் புயலில் அகப்பட்டுக்கொண்ட அச்சிறிய வள்ளம் அலைகளால் அடித்துச்செல்லப்பட்டு இறுதியாக மன்னாரிலுள்ள சவுத்பார் என்ற இடத்தில் கரை ஒதுங்கியது. பின் தன் பணியாளன் யோனுடன் வாஸ் அடிகளார் யாழ்ப்பாணத்திற்கு தரைமார்க்கமாக கால்நடையாகச் சென்றார். "புறப்பட்டுப் போங்கள், ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச்செல்லவேண்டாம்" (லூக். 10: 3-4) என்று கூறிய இயேசுவை அவ்வாறே பின்பற்றி, இடர் துன்பங்களால் துன்புற்ற மக்களைக் காக்க தன்னை முழுமையாக அர்ப்பணித்தார். 30 ஆண்டுகளாகக் குருக்களின் உதவியின்றி வாழ்ந்துவந்த யாழ்ப்பாண கத்தோலிக்கர்கள் ஒல்லாந்தருக்குப் பயந்து புற மதத்தினரைப் போலவே வாழ்ந்துவந்தனர்.

புனித யோசப்வாஸ் அடிகளார் கழுத்தில் ஒரு பெரிய செபமாலையை அணிந்துகொண்டு பிச்சைக்காரனைப்போல வீடுவீடாகச் சென்று, சிலுவை அடையாளம் வரைந்து, செபமும் சொல்லிக்கொண்டு பிச்சை கேட்டுவந்தார். மூப்பருடைய வீட்டில் முப்பது ஆண்டு இடைவெளிக்குப்பின் முதல் தடவையாக திருப்பலி ஒப்புக்கொடுத்தார். பின்பு அடிகளாரின் பாதுகாப்பை முன்னிட்டு சில்லாலை என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தார். சில்லாலைக் கிராம மக்கள் கத்தோலிக்க விசுவாசத்திலும் ஒழுக்க வாழ்விலும் சிறந்து விளங்கினர். இதனால் சில்லாலைக் கிராமம் "சின்ன உரோமை" என அழைக்கப்பட்டுவந்தது.

யோசப்வாஸ் அடிகளாரின் முன்மாதிரிகையான வாழ்க்கையும், கிறிஸ்தவப் பண்புகளும் மக்களை வெகுவாகக் கவர்ந்தது. இரவு வேளைகளில் மக்களின் வீடுகளில் இல்ல வழிபாடுகளும், செபங்களும், செபமாலைப் பிரார்த்தனைகளும், பக்திப்பாடல்களும் கேட்கத்தொடங்கின. இதனால் ஆத்திரமடைந்த ஒல்லாந்தர் படைவீரர்களை அனுப்பி கத்தோலிக்கர்களை அடித்து உதைத்து கைதுசெய்து சிறையிலடைத்தனர்.

படைவீரர்கள் வீடுவீடாகச் சென்று புனித யோசப்வாஸ் அடிகளாரைத் தேடினர். இறைபராமரிப்பினால் ஒல்லாந்தரின் கைகளினின்று தப்பிய அடிகளார் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பது ஆபத்தென்பதை உணர்ந்தார். மூன்று ஆண்டுகளின்பின் அங்கிருந்து புறப்பட்டு தன் பயணத் தோழன் யோனுடன் மாறுவேடத்தில் கால்நடையாக பூநகரி வழியாக வன்னிப்பிரதேசத்துக்குச் சென்றார். அங்கிருந்து கண்டி அரசனுடைய ஆட்சியின்கீழிருந்த புத்தளம் நகருக்குச் சென்றார்.

ஒல்லாந்தரின் துன்புறுத்தலுக்குப் பயந்தோடிய ஆயிரக்கணக்கான கத்தோலிக்கர்கள் அந்நகரில் தஞ்சம் அடைந்தனர். அவர்கள் மத்தியில் ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து அவர்களுக்கு நற்செய்தியைப் போதித்து அவர்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி, திருப்பலி ஒப்புக்கொடுத்து திருவருட்சாதனங்களை வழங்கினார்.

புனித யோசப்வாஸ் அடிகளார் கன்னடத்தில் அவருடன் பணிபுரிந்த நண்பனான அருட்திரு யுவான் டி பிறகான்சா என்ற குருவிடம் புத்தளம், மன்னார் மாதோட்டம், யாழ்ப்பாண பகுதியை ஒப்படைத்துவிட்டு 1692இல் கண்டிக்குச் சென்றார். போர்த்துக்கேயரின் உளவாளி எனத் தப்பான செய்தி கண்டியை ஆண்டுவந்த இரண்டாவது விமலதர்ம சூரிய மன்னனுக்கு தெரிவிக்கப்பட்டது. இதனால் கோபமடைந்த அரசன் அடிகளாரை கைதுசெய்து சிறையில் அடைத்தான். சில நாட்களுக்குப்பின் அடிகளாரை நேரடியாக விசாரணை செய்த அரசன், அவர்மேல் சுமத்தப்பட்ட குற்றங்களெல்லாம் ஆதாரமற்றவையெனக் கண்டு, அவரையும் அவரது பயணத்தோழரான யோனையும் விடுதலை செய்து சுதந்திரமாக நடமாட அனுமதித்தான்.

சிறையில் இருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சிங்கள மொழியைக்கற்று தம் வருங்காலப் பணிக்கு ஆயத்தம் செய்தார். எவ்வித தடையுமின்றி செபிக்கவும், திருப்பலி ஒப்புக்கொடுக்கவும் அடிகளாரை கத்தோலிக்க மக்கள் வந்து சந்திக்கவும் அனுமதி வழங்கப்பட்டது. வீடு வீடாகச் சென்று நோயாளர்களையும், வயோதிபர்களையும் சந்தித்து அவர்களுக்கு திருவருட்சாதனங்களைக் கொடுத்தார்.

இதற்கிடையில் 1696ஆம் ஆண்டின் இறுதியில் கண்டி இராச்சியத்தில் மழையில்லாது கடும் வரட்சியுண்டாகி, நாடெங்கும் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. அடிகளார் நகரின் சதுக்கத்தில் ஒரு பீடத்தை அமைத்து அதன்மேல் சிலுவையை வைத்து முழந்தாட்படியிட்டு செபித்தார். சிறிது நேரத்துக்குள் வானத்தில் மழை முகில்கள் உருவாகி இருட்டியது. பேரிரைச்சலுடன் பெரும் மழை பெய்தது. ஆனால் அடிகளார் முழந்தாட்படியிட்டிருந்த இடத்தில் ஒரு துளி மழைதானும் விழவில்லை. இதனால் அடிகளாரின் ஆற்றலும் புகழும் எங்கும் பரவியது.

கொச்சின் ஆயரின் அனுமதியின்படி இலங்கையிலுள்ள தியான சம்பிரதாயச்சபைக் குருக்களுக்கு சிரேஷ்ராக நியமனம் பெற்றார். தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி மறைப்பரப்பு பணியை ஒழுங்குசெய்து அதற்குரிய சில ஒழுங்குவிதிகளையும் ஏற்படுத்தினார்.

யாழ்ப்பாணம், பூநகரி மாதோட்டம், மன்னார், வன்னிப்பகுதிகள் பேதுருபெர்நாவோ அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. புத்தளம், சிலாபம், நீர்கொழும்புப் பகுதிகள் யோசேப் டெ மெனெசெய் அடிகளாரிடம் ஒப்படைக்கப்பட்டன. கண்டி நகரை தனது பொறுப்பில் வைத்துக்கொண்டார். இடையிடையே மற்ற நகரங்களையெல்லாம் தரிசித்து குருக்களுக்கு ஆலோசனை வழங்கி ஊக்குவித்த மக்களை விசுவாசத்தில் உறுதிப்படுத்தி நல்வழிப்படுத்திவந்தார்.

1697ஆம் ஆண்டு நடுப்பகுதியில் கண்டி நகரிலும், அதன் அயலிலும் கொடிய தொற்றுநோயான அம்மை நோய் பரவியது. நோயாளிகளைப் பராமரிப்பதற்கு எவரும் இருக்கவில்லை. இந்நிலையில் யோசவ்வாஸ் அடிகளாரும், கார்வாலோ அடிகளாரும் கிறிஸ்தவ அன்பினால் தூண்டப்பெற்றவர்களாய், தங்கள் சுகத்தைப் பொருட்படுத்தாமல், சாதிமதபேதமின்றி நோயாளிகளைத் தரிசித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர்.

நோயாளிகளின் புண்களைக் கழுவி, மருந்து கட்டி, உணவு, குடிநீர், ஆடைகளைக் கொடுத்தும், இறந்தவர்களை அடக்கம் செய்தும் உதவினர். தம்முடைய ஆலயத்துக்கு அருகாமையில் ஒரு வைத்தியசாலையை அமைத்து நோயாளிகளை வைத்து பராமரித்தனர். அடிகளாரின் தன்னலம் கருதாப் பிறர் நலப்பணிகளைக் கண்ட பிறசமயத்தினர் வியப்படைந்து கத்தோலிக்க மதத்தின்மீது மிக வெகுவாகக் கவரப்பட்டனர். கண்டி அரசன் விமலதர்மசூரிய அடிகளாரின் அன்புப் பணிகளைப் பாராட்டினான். அவர் அனைத்துப் பிறமதங்களையும் நாட்டின் கலாச்சாரம் பரம்பரைப் பழக்கவழக்கங்களையும் மதித்து நடந்தார். அடிகளார் தமிழில் பல செபங்களையும், மறைக்கல்வி நூல்களையும், பிரார்த்தனைகளையும் எழுதினார்.

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

## பலத்த மழை, வெள்ளம் மற்றும் மண்சரிவு பாதிப்புக்கள் தொடர்பாக

# இலங்கை ஆயர் மன்றம் ஆழ்ந்த கவலை

கடந்த மாதத்தில் இலங்கையின் பல மாவட்டங்களில் ஏற்பட்ட பலத்த மழை, வெள்ளம், மண் சரிவு பாதிப்புக்கள் தொடர்பாக இலங்கை ஆயர் மன்றம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதன் விபரம் வருமாறு:

“எமது நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் பெய்துவரும் பலத்த மழையின் காரணமாக வெள்ளத்தினாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட எம் அன்புச் சகோதர, சகோதரிகளுக்கும், பிள்ளைகளுக்கும் எமது துயரத்தை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இதன்விளைவாக பல குடும்பங்களில் தங்கள் அன்பு உறவுகளை இழந்தவர்களுக்காக எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களுடைய ஆன்மா சாந்தியடையவும் நாம் பிரார்த்திக்கின்றோம்.

இலங்கையிலுள்ள அனைத்துக் கத்தோலிக்க குழுக்களையும் வேண்டிக்கொள்வது யாதெனில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு தேவையான உதவிகளை மனிதாபிமான முறையில் செய்துகொள்ள, மறைமாவட்ட கரித்தாஸ், அரசாங்க சேவை அமைப்புக்கள், சமூகசேவை அமைப்பின் ஊடாக இவர்களுக்கு உதவிபுரிய தங்கள் ஆதரவை அளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். இச்சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தாங்கள் தனிமையாய் விடப்பட்டவர்களல்ல, தங்களுக்கும் உறவுகள் உண்டு என்பதை உணரச்செய்ய, நிதி சார்ந்த உதவி, ஆடைகள், மனிதாபிமான ஆதரவை - உறவுகளை, நிலபுலங்களை இழந்த மக்களுக்கு வெளிக்காட்டி அவர்களைத் திடப்படுத்தவும் கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்ந்தும் எங்களுடைய செபத்தில் இவர்களுக்காகச் செபிப்பதோடு, இவர்கள் ஆன்மீக மனவலிமையைப் பெறவும், இடர்பாடான இச்சூழலிலிருந்து விடுபட்டு வாழவும் ஆசீரும் அருளும் வேண்டுகின்றோம்.

*மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து SSS*
*தலைவர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை*
*மேதகு ஆயர் டி. வலன்ஸ் மெண்டிஸ்,*
*பிரதம செயலாளர், இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை*

## பெரிய தம்பனை
## புதிய ஆலயத் திறப்பும் திருப்பொழிவும்







### அருட்திரு. ஜேம்ஸ் ஜெறிக் குயின்ரஸ் ....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

ஏற்கனவே தந்தையை இழந்த இவருடைய தாயார் இந்தியாவில் இருக்கின்றார். அகதியாக கடல்மார்க்கமாக இவர் இந்தியா சென்றபடியால் தன் மகனுடைய குருத்துவ திருப்பொழிவு விழாவுக்கு அவரால் இலங்கைக்கு வரமுடியவில்லை. புதிய குரு ஜெறி அவர்கள் தன் முதல் திருப்பலியை தன் தாய் மற்றும் உறவுகளோடு இணைந்து இந்தியாவில் ஒப்புக்கொடுத்தார். பரமனின் அழைப்பிற்குச் செவிமடுத்து, புனித பிரான்சிஸ் அசிசியின் எளிய வழியில் குருத்துவப் பணிக்கு தன்னை அர்ப்பணித்துள்ள அருட்திரு. ஜேம்ஸ் ஜெறிக் குயின்ரஸ் (கப்புச்சின் சபை) அவர்களுக்கு மன்னாவின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

## மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் தெரிவு தொடர்பாக
## சமூக வலைத்தளத்தில் வெளியாகிய செய்திக்கு திருத்தந்தையின் பிரதிநிதி மறுப்பு

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயர் தெரிவு தொடர்பாக “ஆதவன் தமிழ் செய்தி முகவர்’ (Athavan Tamil News Agency) என்ற சமூக வலைத்தளத்தில் மன்னாரின் புதிய ஆயராக யாழ் மறைமாவட்டத்தின் குருமுதல்வர் அருட்திரு. ஜெபரெட்னம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஒரு செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் திருத்தந்தையின் இலங்கைக்கான பிரதிநிதியின் கவனத்திற்கு இச்செய்தியைக் கொண்டுவந்திருந்தார்.

இதற்கு திருத்தந்தையின் பிரதிநிதி அவர்கள் அப்போஸ்தலிக்க பரிபாலகருக்கு பதில் கடிதம் அனுப்பியிருந்தார். அதில் இச்செய்தியை அவர் முற்றாக மறுத்ததுடன் மன்னார் மறைமாவட்டத்திற்கான புதிய ஆயர் தொடர்பான இறுதி முடிவு இன்னும் எடுக்கப்படவில்லை என்றும் இதற்காகத் தொடர்ந்தும் செபிக்கும்படி குருக்கள் மற்றும் இறைமக்களிடம் கேட்டுக்கொள்ளும்படியும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

சமூக வலைத்தளங்களில் இதுபோன்ற உண்மைக்கு புறம்பான செய்திகள் வெளியிடப்படுவதும் அவற்றின் மூலம் குறிப்பிட்ட செய்தி வலைத்தளங்கள் தமது பெயரைப் பிரபல்யப்படுத்த முனைவதும் தற்போது பரவலாக இடம்பெற்று வருகின்றது.

பல மாதங்களுக்கு முன்னர் ஒரு சமூக வலைத்தளச் செய்தியில் இளைப்பாறும் மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை தள்ளாடி இராணுவ முகாமில் தேனீர் அருந்திய பின்னர்தான் நோய்வாய்ப்பட்டார் என்று ஒரு செய்தியை வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. இந்தத் தவறான செய்திக்கு மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அப்போது மறுப்புத் தெரிவித்து அறிக்கை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே இதுபோன்ற சில பொறுப்பற்ற சமூக வலைத்தளங்கள் வெளியிடும் உண்மைக்குப் புறம்பான செய்திகள் தொடர்பில் இறைமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என மன்னார் மறைமாவட்டத் திருச்சபை கேட்டுக்கொள்கிறது.

## திருவுளப் பணியாளர் சபைக் குரு அருட்பணியாளர் கிறிஸ்ரி இறைபதம்

திருவுளப்பணியாளர் சபைக் குரு அருட்பணியாளர் கிறிஸ்ரி செல்வராசா அடிகளார் கடந்த யூன் மாதம் 22ஆம் திகதி நீர்கொழும்பில் இறையடி சேர்ந்தார். இவருடைய நல்லடக்கச் சடங்குகள் 24ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து யாழ் கொஞ்சேஞ்தி மாதா சேமக்காலையில் இவரது உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் மிருசுவில்லைப் பிறப்பிடமாகக் கொண்ட கிறிஸ்ரி அடிகளார் தனது குருத்துவ வாழ்வில் 32 வருடங்களை நிறைவுசெய்தவராவார். பல ஆண்டுகளாக இவர் நரம்புத்தளர்ச்சி நோயினால் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அன்னாரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிப்போம். இவரின் பிரிவால் துயருறும் அனைவருக்கும் மன்னா தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றது.

## கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் மெசஞ்சர் பத்திரிகைக்கு புதிய ஆசிரியர்

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இருந்து வெளிவரும் ‘The Messenger’ என்ற ஆங்கில கத்தோலிக்க வாரப் பத்திரிகைக்கு புதிய ஆசிரியர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை டொன் அன்டன் சமன் ஹெட்டியாராய்ச்சி அடிகளாரே இதன் புதிய ஆசிரியராவார். இவர் விவிலிய அப்போஸ்தலிக்க பணியகத்தின் செயலாளராகவும், தெஹிவளை கத்தோலிக்க திரித்துவ ஆலயத்தின் பொறுப்பாளராகவும், புனித யோசவ்வாஸ் குழுவின் செயலாளராகவும், கொழும்பு தெற்கு மறைக்கோட்ட ஆங்கில மறைக்கல்வி மற்றும் விவிலிய அப்போஸ்தலிக்க பணியின் ஒருங்கமைப்பாளராகவும் பணியாற்றுகின்றார்.

கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் இருந்து இரு வாரத்திற்கு ஒரு முறை ‘ஞான ஒளி’ என்ற தமிழ் கத்தோலிக்க பத்திரிகை வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## திருச்சிலுவைக் கன்னியர் சீத்தா பிரான்சிஸ் இறைபதம்

முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக்கொண்ட திருச்சிலுவைக் கன்னியர் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரி சீத்தா பிரான்சிஸ் கடந்த யூலை மாதம் 2ஆம் திகதி இறைபதம் அடைந்தார்.


இவரின் இறுதிச் சடங்கு மற்றும் திருப்பலி என்பவை யூலை மாதம் 4ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் கடற்கரை வீதியில் உள்ள திருச்சிலுவைக் கன்னியர் இல்லச் சிற்றாலயத்தில் இடம்பெற்றது. பின்னர் இவரது உடல் யாழ்ப்பாணம் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அருட்சகோதரியின் ஆன்ம இளைப்பாற்றிக்காக செபிப்போம்.


## முரளி அடிகளார் உயர் கல்வியைக் கற்பதற்காக உரோம் நகர் சென்றடைந்தார்

மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் யூட்ஸ் முரளிதரன் அவர்கள் தனது உயர் கல்வியைக் கற்பதற்காக கடந்த யூன் மாதம் 16ஆம் திகதி உரோம் நகரைச் சென்றடைந்தார்.

மன்னார் மறைமாவட்ட ஆயரின் செயலாளராகப் பணியாற்றிய இவர் உரோமமைக்குச் செல்லும் முன்னர் இத்தாலி மொழி படிப்பதற்காக கம்பளையில் உள்ள இத்தாலிய அருட்சகோதரிகளின் இல்லத்தில் தங்கியிருந்து இத்தாலி மொழியைப் படித்தார். முரளி அடிகளாரின் உயர் கல்வி சிறப்பாக அமைய மன்னார் மறைமாவட்டத் திருச்சபையின் வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவிக்கின்றோம்.

## மணற்குளம் புனித அந்தோனியார் ஆலயம் திருப்பொழிவு, 150வது ஆண்டு நிறைவு விழா
## சில நிழற்படப் பதிவுகள்







# தாழ்வுபாடு மக்களின் மனங்கவர்ந்த தனிப்பெரும் குரு

# அருட்தந்தை அன்று சேர்ப்கா (அமதி) அடிகளார்

ஆங்கில மூலம் : அருட்திரு. இயேசுதாசன் (அமதி); தமிழ் வடிவம் : அருட்திரு. தமிழ் நேசன்



| | | |
|---|---|---|
| 1984ஆம் ஆண்டு சேர்ப்கா அடிகளாருக்கு தாழ்வுபாட்டில் எழுப்பப்பட்ட உருவச் சிலை. | இளமையில் போலந்து தேசம்விட்டு நற்செய்திக்காய் தன்னை அர்ப்பணித்த சேர்ப்கா அடிகளார். | சேர்ப்கா அடிகளாரோடு தாழ்வுபாடு பங்குப் பணியில் தோள்கொடுத்த அமரர் செல்வி பாக்கியம் அக்கா (1948 - 2018). |

போலந்துக்காரரான சிறுவன் அன்று சேர்ப்கா போலந்து நாட்டில் உள்ள பொஸ்னான் மறைமாவட்டத்தில் டெபின்கா என்ற கிராமத்தில் 28ஆம் திகதி நவம்பர் மாதம் 1905ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தையார் வலன்ரின் சேர்ப்கா, தாயார் கத்தறின் வுனுசாக் என்பவர்கள் ஆவர்.

சேர்ப்கா பொஸ்னானில் உள்ள ஒஸ்ரோ கல்லூரியில் கல்வி பயின்றார். நல்ல உயரமும் அழகும் நிறைந்த 23 வயது ஆண் மகனாக இருக்கும்போதே இவர் அப்போஸ்தலிக்க பணியார்வம் மிக்கவராக விளங்கினார். 1925இல் இவர் அமலமரித்தியாகிகள் சபையில் சேர்ந்து, தனது நவசந்நியாசப் பயிற்சியை போலந்தில் உள்ள மார்க்கோவிஸ் என்ற இடத்தில் பெற்றுக்கொண்டார். 15ஆம் திகதி ஓகஸ்ட் மாதம் 1926ஆம் ஆண்டு இவர் தனது முதலாவது துறவற வாக்குறுதியை வழங்கினார்.

ஒரு நவசந்நியாசியாக தனது சொந்த நாட்டைவிட்டு 21ஆம் திகதி டிசம்பர் மாதம் 1928ஆம் ஆண்டு தனது குருத்துவக் கல்வியைத் தொடர்வதற்காக இவர் இலங்கைக்கு வந்தார். இலங்கைக்கு வந்த இவர், யாழ்ப்பாணத்தில் பணியாற்றிக்கொண்டிருந்த அமலமரித்தியாகிகள் மிசனறிமாருடன் தன்னை இணைந்துகொண்டார். மூன்று வருடங்களுக்குப் பின்னர் தனது இறையியல் கல்வியை நிறைவுசெய்த பின் அன்றைய யாழ் ஆயர் கியோமர் ஆண்டகையினால் 17ஆம் திகதி யூன் மாதம் 1931ஆம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

தனது சொந்த மொழியான போலிஸ் மொழியைவிட பிரெஞ்ச், ஜேர்மன் ஆகிய மொழிகளை இவர் அறிந்திருந்தார். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளையும் இவர் இலகுவாகக் கற்றிருந்தார். இசைத்துறையில் ஆற்றல் வாய்ந்தவராகவும், கலை ஆர்வம் நிறைந்தவராகவும், அழகியல் உணர்வு மிக்கவராகவும் விளங்கிய இவர், மின்சார வேலைகள், இயந்திரங்களைத் திருத்தும் வேலைகள் போன்றவற்றிலும் நடைமுறைசார்ந்த அறிவுமிக்கவராகத் திகழ்ந்தார்.

புனித கோல்பே போன்ற புனிதர்களையும், புனித வென்சஸ்லஸ் போன்ற அரசர்களையும் உருவாக்கிய வீரம் நிறைந்த கத்தோலிக்க போலந்து நாட்டில் இருந்து வந்த இவர், இயற்கையான, பண்பாடு சார்ந்த திறமைகளைக் கொண்டு விளங்கி தனது 50 வருட பொன்னான மறைப்பணியை ஆரம்பித்தார்.

அவருடைய மென்மையான பேச்சு, பிரகாசமான புன்னகை, மற்றவர்களை மகிழ்வூறச்செய்யும் நகைச்சுவை, அனுதாபம்மிக்க அணுகுமுறை போன்றவற்றால் அவர் பணிசெய்த ஒவ்வொரு பங்கிலும் உள்ள அனைவருடைய அன்பையும், அபிமானத்தையும், ஆச்சரியத்தையும் பெற்றுக்கொண்டார்.

1932 யூலை மாதம் முல்லைத்தீவில் இவர் உதவிப் பங்குத்தந்தையாகத் தன் பணியை ஆரம்பித்தார். 1933 ஜனவரி மாதம் கடினமான மறைப்பணித்தளமாக விளங்கிய அரிப்புக்கு இவர் இடமாற்றம் செய்யப்பட்டார். பின்னர் இவர் பங்குத்தந்தையாக இளவாலை (1936), கொழும்புத்துறை (1936 - 1937), பரித்தித்துறை (1937 - 1939) மீண்டும் (1952 - 1956), முல்லைத்தீவு (1956 - 1967) மீண்டும் (1968 - 1975), பள்ளிமுனை (1961 - 1967) மீண்டும் 1968 - 1975), தாழ்வுபாடு 1976 - 1982) ஆகிய பணித்தளங்களில் பணியாற்றினார்.

அவர் எங்கெல்லாம் பணிசெய்யச் சென்றாரோ அங்கெல்லாம் தனது கலையாற்றலைப் பயன்படுத்தி ஆலயங்களைப் புனரமைத்து அழகுபடுத்தினார். ஆலயத்திற்கும் பங்குப் பணிமனைக்கும் மின்சார வசதியை ஏற்படுத்தினார். பரித்தித்துறையில் உள்ள புலோலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இவர் கட்டிய முகப்பு, அங்கு வைக்கப்பட்டுள்ள மக்கோனாவில் செய்யப்பட்ட பீடம் ஆகியவை இவருடைய கலைத்திறமைக்கு சான்று பகர்கின்றன.

யாழ்ப்பாணக் கத்தோலிக்க அச்சகத்தின் முகாமையாளராக (1939 - 1951) இவர் பணியாற்றியதால் தனது அற்புதமான திறமைகளை இன்னும் அதிகமாக அங்கு பயன்படுத்த முடிந்தது. அச்சகத்தின் இயந்திரங்களை நவீனமயமாக்கியதன் மூலம் அதற்கு அழகையும், அதன்பால் மக்களுக்கு ஈர்ப்பையும் ஏற்படுத்தினார். வேலைகள் செழிப்படைந்தன, அச்சகத்தின் அந்தஸ்து உயர்ந்தது. 1939ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பிரமாண்டமான நற்கருணைப் பேரணியின்போது கண்கவர் சுவரொட்டிகள் (போஸ்ரர்கள்), கவர்ச்சியான துண்டுப் பிரசுரங்கள், அழகான படங்கள், வகை வகையான நினைவுச் சின்னங்கள் போன்றவற்றை அச்சிட்டு வெளியிட்டார்.

பாடசாலைத் தளபாடங்களுக்காக அச்சகத்தில் தச்சுவேலையை ஆரம்பித்தார். தெரிவுசெய்யப்பட்ட தேவைகளுக்காக மேசன் வேலையையும் ஆரம்பித்தார். இந்த முயற்சிகள் பலம் மிக்கவையாக வளர்ந்து வந்தன. யாழ்ப்பாணக் கத்தோலிக்க அச்சகத்தின் பொற்காலமாக இது விளங்கியது.

அருட்தந்தை சேர்ப்கா அடிகளார் பணி செய்ய அதிகம் விரும்பிய பங்குகள் மன்னாரில் உள்ள பள்ளிமுனை மற்றும் தாழ்வுபாடு என்பவை ஆகும். அனுபவமுள்ளவர்கள் இந்தப் பங்குகளை முட்படுக்கை என்றே சொல்வார்கள். ஆனால் அருட்தந்தை சேர்ப்கா அடிகளார் இவற்றை மலர்ப்படுக்கையாக மாற்றி பதினான்கு வருடங்கள் இங்கு பணியாற்றினார். அவர் எப்படி இதைச் செய்தார் என்பது ஆச்சரியத்திற்குரியது.

சேர்ப்கா அடிகளார் சிறந்த உழைப்பாளியாக விளங்கினார். வேட்டையாடுதல் அவருக்கு விருப்பமான பொழுதுபோக்கு. எப்போதெல்லாம் அவருக்கு வாய்ப்புக் கிடைக்கின்றதோ அப்போதெல்லாம் அவர் ஒருநாள் விடுமுறை எடுத்துக்கொண்டு முழு நாளும் காட்டிலேயே செலவிடுவார்.

போலந்துக்காரரான கர்தினால் வொய்ரில்லா அவர்கள் 'இரண்டாம் அருள் சின்னப்பர்' என்ற பெயரோடு திருத்தந்தையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்ற செய்தியை வானொலி அறிவித்தபோது அந்த நாள் சேர்ப்கா அடிகளாருக்கு பெருமைமிகு நாளாக விடிந்தது. என்னே பரவசம்! போலந்துப் பாப்பரசர் காந்தத்தைப் போன்று உலகத்தைக் கவர்ந்தார். திருச்சபைக்கு உறுதியை வழங்கினார். அண்மைக்காலத் திருத்தந்தையர்களில் இவர் மிகவும் பெரியவராக முன்னணியில் திகழ்கின்றார்.

ஊக்கம் நிறைந்த அடிகளாருடைய பணிகள் அவருடைய உடல் ஆரோக்கியத்தில் பாதிப்பைக் கொண்டுவந்தது. மன்னாரில் உள்ள தாழ்வுபாடு என்ற சிறிய மீன்பிடிக் கிராமமே அவர் இறுதியாகப் பணியாற்றிய பங்குத்தளமாகும். அப்பங்குத்தளத்தை அவர் இலகுவாகக் கையாள்வார் என்று கருதியே அங்கு அனுப்பப்பட்டார். ஆனால் அவரால் அவ்வாறு இலகுவாகக் கையாள முடியவில்லை. இப்பங்குத்தளமே அவருடைய மணிமுடியாக அமைந்திருந்தது. அவர் காணிகளை வாங்கினார், கிராமத்தை விரிவுபடுத்தினார், நவீன வீடுகளைக் கட்டினார், வீதிகளை அமைத்தார். அவர் மின்சாரத்தையும் குழாய் நீரையும் கிராமத்திற்குக் கொண்டுவந்தார். தமது கிராமம் அடைந்த மாற்றத்தைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்களுடைய இந்தச் சிறிய கிராமம் ஒரு நகரமாக மாறியது. அவர்களுடைய மகிழ்ச்சியின் உச்சநிலையில், தமது அன்புக்குரிய 'சுவாமி'யைக் கௌரவிக்கும் வகையில் தமது கிராமத்தின் ஒரு சிற்றூருக்கு 'சேர்ப்கா புரம்' என்ற பெயரிட்டார்கள்.

சில மாதங்களின் பின்னர் சேர்ப்கா அடிகளார் நோய்வாய்ப்பட்டு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சில நாட்களுக்குள்ளேயே கவலைக்குரிய அவருடைய மரணச் செய்தி வந்தது. ஆம், அவர் 24.06.1982இல் தன்னைப் படைத்த இறைவனிடம் தன் இன்னுயிரைக் கையளித்தார். அடுத்தநாள் அவருடைய உடல் யாழ்ப்பாணத்தில் நல்லடக்கம் செய்யப்படும் என்ற செய்தியையும் வானொலி திடீரென அறிவித்தது.

அன்றைய மன்னார் மறைமாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் தாழ்வுபாடு பங்கு மக்களுடன் பஸ்கள், கார்கள், வான்கள் சகிதம் உடனயாக யாழ்ப்பாணம் சென்றார். யாழ்ப்பாணம் சென்ற இவர்களுடைய ஒரேயொரு கோரிக்கை தமது 'சுவாமி' மன்னாரில் தமது மத்தியில் நல்லடக்கம் செய்யப்படவேண்டும் என்பதாகும். அவர்களுடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாண பேராலயத்தில் இடம்பெற்ற இரங்கல் திருப்பலியைத் தொடர்ந்து மன்னாரை நோக்கிய அடிகளாரின் திருவுடல் தாங்கிய பவனி புறப்பட்டது.

முழு மன்னாரையும் சேர்ந்த, என்றுமில்லாத சனத்திரள் அடிகளாரின் திருவுடலின் வருகைக்காகக் காத்திருந்தது! → மன்னார் என்றுமே காணாத உணர்வுபூர்வமான காட்சியாக அது இருந்தது! இறந்த மாவீரனுக்குரிய வரவேற்பை சேர்ப்கா அடிகளார் பெற்றுக்கொண்டார். இரங்கல் திருப்பலி மற்றும் நல்லடக்கச் சடங்குகளைத் தொடர்ந்து அவருடைய திருவுடல் மன்னார் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

- நன்றி - 'Our Tribue'

## தாழ்வுபாட்டில் சேர்ப்கா அடிகளாரின் 35ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள்

அருட்தந்தை அன்று சேர்ப்கா அடிகளார் இறைபதமடைந்த 35ஆவது ஆண்டு (1982 - 2017) நினைவு நிகழ்வுகள் கடந்த யூன் மாதம் 24ஆம் திகதி தாழ்வுபாடுக் கிராமத்தில் மத்தியில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு முன்னால் இடம்பெற்றது.



தாழ்வுபாடு பங்குத் தந்தை கா. சுகுணராஜ் அடிகளார்


அன்றைய தினம் மாலை 6.00 மணிக்கு முதல் நிகழ்வாக தாழ்வுபாடு பங்குத்தந்தை அருட்பணி. கா. சுகுணராஜ் குரூஸ் அடிகளார் சேர்ப்கா அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தார். தொடர்ந்து அவ்விடத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. தாழ்வுபாட்டின் முன்னாள் பங்குத்தந்தையும் தற்போதைய பள்ளிமுனை பங்குத்தந்தையுமான அருட்பணி. செ. ஸ்ரீபன்ராஜ் தலைமையில் இடம்பெற்ற இத்திருப்பலியில் அருட்பணி. அல்பன் இராஜசிங்கம் (அமதி) மற்றும் அருட்பணி. கா. சுகுணராஜ் ஆகியோரும் இணைந்துகொண்டனர். திருப்பலியைத் தொடர்ந்து அடிகளாரின் திருவுருவப் படத்திற்கு அருட்தந்தையர்கள் ஜெரோம் லெம்பேட் (அமதி), அல்பன் இராஜசிங்கம் (அமதி), எஸ். ஸ்ரீபன்ராஜ், தேவராஜா (அமதி) ஆகியோர் மாலை அணிவித்தனர். தொடர்ந்து ஜெரோம் லெம்பேட் அடிகளார் சிறப்புரை ஆற்றினார். இதில் சேர்ப்கா அடிகளாரின் நினைவுகளை அவர் இரைமீட்டிப் பேசினார். பின்னர் ***'சேர்ப்கா ஓர் சகாப்தம்'*** என்ற பெயரைக்கொண்ட சிறிய மலர் வெளியிடப்பட்டது. இம்மலரில் இடம்பெற்றுள்ள கட்டுரையே இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலயப் பாடகர் குழாமினரின் பாடல்கள் மற்றும் கவிதைகளும் இடம்பெற்றன. நன்றியுரையுடன் இந்நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது.

## பிச்சகுளம் செபமாலை அன்னை ஆலய திருப்பொழிவு விழாவும் அவிதப்பர் அடிகளாரின் 2ஆம் ஆண்டு நினைவும்

## நினைவுப் பதிவுகள் சில





# அதிர்வுகள் .....!

## அருட்பணியாளர் செ. அன்புராசா, அ.ம.தி எழுதும்

சமகால சமூக அரசியல் ஆன்மீகம் சார்ந்த தொடர் 65

# கொலுவேறியவர்கள் தம் மக்களை கழுவேற்றல் ஆகாது !

### *கடவுள் நம்மோடுதானா?*

இரண்டாம் உலகப் போர் நடைபெற்றபோது பிரித்தானியாவின் படைகள் பல பின்னடைவுகளைச் சந்தித்துக்கொண்டிருந்தன. அவ்வேளையில் பிரித்தானிய இராணுவத் தளபதிகளில் ஒருவர் பிரித்தானிய நாட்டின் பிரதமராக இருந்த வின்சன் சேர்ச்சிலிடம், “நமது படைகள் தொடர்ந்து பின்னடைவுகளையே சந்தித்த வண்ணமாக இருக்கின்றன! உண்மையில் கடவுள் நம்மோடுதான் இருக்கிறாரா என்ற சந்தேகம் எனக்கு எழுகிறது!” எனத் தன் மனக் கிடக்கையை வெளிப்படுத்துகிறார். உடனே வின்சன் சேர்ச்சில், “தளபதியே, கடவுள் நம்மோடு இருக்கிறாரா இல்லையா என்ற சந்தேகம் எனக்கில்லை! எனது பயம் எல்லாம் நாம் கடவுளோடு இருக்கிறோமா என்பதுதான்!” என்றாராம்.

தமது வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தமக்கு நல்லதைச் செய்வார்கள் என சாதாரண மக்கள் காத்துக் கிடக்கிறார்கள். ஆனால், மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், மக்களோடு இருக்கிறார்களா? மக்களுக்காகத் தமது பதவிகளைப் பயன்படுத்துகிறார்களா? மக்களுக்கான பணிகளை ஆற்றுகிறார்களா? என்பது போன்ற கேள்விகளை இன்றைய அரசியல், சமூக, சமய சூழலைப் பார்க்கிறபோது எழுப்பவேண்டிய தேவை எழுகிறது.

வீடுவீடாகச் சென்று பிச்சை எடுத்தவர்கள் பணக்காரர்களாகியதாக வரலாறுகள் கிடையாது! ஆனால், வீடுவீடாக வந்து வாக்குப் பிச்சை எடுத்தவர்களில் பலர் இன்று பெரும் பலவான்களாக - தனவான்களாக இருப்பது புரியும். மக்கள் நலன் புறந்தள்ளப்பட்டு தங்கள் நலன் முதன்மை பெறும்போது மக்கள் நலன் - பொது நலன் - விளிம்புக்கு வீசப்படுகிறது! மக்களின் பிரதிநிதிகள் தம் மக்களின் சார்பாக நின்று செயற்படாதபோது அவர்கள் மக்களுக்குத் துரோகம் செய்பவர்களாகவே கருதப்படுவார்கள் என்பதை அவர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆக, மக்களின் பிரதிநிதிகள் மக்களோடு – மக்களுக்காக இருக்கிறார்களா என்பதை அவர்கள் எப்போதும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

### *எதற்கெடுத்தாலும் பயமா ஐயா?*

அண்மையில் ஒரு மின்னஞ்சல் ஒன்றினை நண்பர் ஒருவர் அனுப்பியிருந்தார். அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. சம்மந்தன் ஐயா அவர்களின் பயங்களைப்பற்றி ஒருவர் குறிப்பிட்டிருந்தார். தென்னாலிராமன் படத்தில் கமலதாசனின் பயம் பற்றிய ஒரு நீண்ட உரையாடலை இது நினைவுபடுத்துவதுபோல் இருந்தது. இதில், ‘சொல்லுங்க ஆர். சம்பந்தம், என்னென்னதுக்கு உங்களுக்கு பயம்?’ எனக் கேள்வியை எழுப்பிவிட்டு திரு. சம்மந்தன் ஐயா பதில் கூறுவதுபோல அமைந்திருந்தது: “எல்லாம் சிவமயம் எண்டு எல்லாரும் சொல்லுவினம், எனக்கோ எல்லாம் பயமயம்! தனிய நடக்கப் பயம், நடக்கேக்க விழுந்துடுவனோ எண்ட பயம்! ஆரேனும் பிடிச்சு நடந்தாலும் பயம், அவை கையை விட்டுடுவினம் எண்ட பயம்!

எதிரில யாராச்சும் வணக்கம் சொன்னாப் பயம், சொல்லாட்டிலும் பயம்! எதிர்க்கட்சி எண்டு சொன்னா பயம், தலைவர் எண்டு சொன்னாலும் பயம்! வீடு பயம், வீட்டுல உள்ள கதவும் பயம், திறந்த கதவு பயம், மூடின கதவும் பயம்! வெளில போடுவாங்கள் எண்ட பயம், வீடு உடைஞ்சுடும் எண்ட பயம்! சம்பூர் பயம், சனங்கள் பயம்! யாராச்சும் கேள்வி கேட்டாலும் பயம்!


ஊர் பயம், உறவு பயம், முத்தம் பயம், பிறகு முன்பக்க செய்தி பயம்! நந்திக்கடல் பயம், மக்கள் பயம், நடுவில குழப்பினா பயம், காணாமல் போனவர் பயம், அவயின்ர உறவுகள் பயம் எனக்கு. காணி கேட்டா பயம், அரசியல் கைதிகளும் பயம். வெளிநாடு பயம்! வெளி நாட்டில தமிழர் பயம்!

சுமந்திரன் கதைச்சா பயம், சுமந்திரன் சும்மா இருந்தாலும் பயம். மோடி சேர் பயம், கேடி பயம் (உங்களை சொல்லல சேர்), தாடி பயம், தாடி குத்திடும் எண்ட பயம், ரணில் பயம், சந்திரிக்கா பயம், சிவாஜி பயம், கஜேந்திரன் பயம், டக்லஸ் பயம்! ஆமி பயம், ஆளுநர் பயம், ஆமத்துறுவும் பயம் - இவள் ஆனந்தியும் பயம் எனக்கு!

இப்படி கதைச்சா நாவறண்டு போமெண்ட பயம்!...இப்ப புதுசா விக்கி பயம் எனக்கு! விக்கி இருந்தா பயம், விக்கி போனாலும் பயம்! இருந்தா பதவி எப்ப போகும் எண்ட பயம், போனா வீடு போடும் எண்ட பயம்! எல்லாம்... பயமயம்! பயமயம்!...”எனக் குறிப்பிட்டிருந்தார்.

### *கொலுவில் ஏற்றியவர்கள் கழுவில் ஏற்றப்பார்க்கிறார்களா?*

ஆனித்திங்களின் இறுதி வாரத்தில் சந்திப்பு ஒன்றுக்காகச் சென்றிருந்தவேளை மன்னா வாசகரான ஒருவர், “2013இல் வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்கும்படி சமூக – சமயத் தலைவர்கள், புத்தி ஜிவிகள் கூட்டாக வேண்டி நின்றார்கள். அவ்வரிசையில் கூட்டமைப்பினரை ஆதரிக்கவேண்டி நீங்களும் எழுதித் தள்ளினீர்கள்! மக்களும் தம் வாக்குகளை தாராளமாய் அள்ளிக்கொடுத்து ஆதரித்தார்கள். ஆனால் நடக்கிறதைப் பார்த்தால் இவங்கள என்ன செய்யிறது என்டே தெரியல்ல!




பிலாப்பழத்தைப் பாத்த பேயன் மாதிரி சனம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் செயற்பாடுகளால் அதிர்ச்சி அடைந்துபோய் நிக்குதுகள்! முதலமைச்சர் விவகாரத்தோடு கூட்டமைப்பின் கூத்துக்கள் முடிவடையுமா அல்லது நம்முடைய தமிழ்நாட்டு நாடக ‘சீரியல்’கள்போல தொடருமா?” என்ற கேள்வியை அங்கிருந்த என்னிடம் எழுப்பியபோது பதிலாக என்ன கூறுவதென்று தெரியாமல் மௌனமாய் நின்றேன்.

### *அகிம்சை வழியிலும் ஆயுத முனையிலும்*

இலங்கைக்கு 1948இல் சுதந்திரம் கிடைக்கப்பெற்றது என்று சொல்லப்பட்டாலும் இச்சுதந்திரத்தினால் பெரும்பான்மையின மக்கள் நன்மை அடைந்தார்களே தவிர சிறுபான்மையின மக்கள் பல்வேறு வகைகளில் ஓரம்கட்டப்பட்டார்கள். குறிப்பாக தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தாயகக் கோட்பாடுகள் புறந்தள்ளப்பட்டன. எனவே, தமிழர் தம் அபிலாசைகளை அடைவதற்கு அகிம்சை வழியில் பல அறவழிப் போராட்டங்கள் மிக நீண்ட காலமாக முன்னெடுக்கப்பட்டன.

மாதக்கணக்காக மாவட்டச் செயலகங்களுக்கு முன்னால் சத்தியாக்கிர போராட்டங்கள், உண்ணாவிரதங்கள், அறவழி யாத்திரைகள் எனப் பல வகைப்பட்ட அறவழிப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தங்களும் உடன்பாடுகளும் செய்யப்பட்டு பின்னர் ஒப்பந்தங்களையும் உடன்பாடுகளையும் ஏற்படுத்தியவர்களே அவற்றைக் கிழித்தெறிந்தனர். இதற்கிடையில் திட்டமிடப்பட்ட இனப்படுகொலைகள் காலத்திற்குக் காலம் அரசாங்கத்தின் அனுசரணையில் - ஆதரவில் கட்டவிழ்த்து விடப்பட்டன.

இதன் பின்னணியிலேயே ஆயுதப் போராட்டம் உருப்பெற்றது. ஏறக்குறைய 03 தசாப்த காலம் நீடித்த ஆயுதப் போராட்டம், போர் விதிகளைமீறி காட்டுமிராண்டித்தனமாக ஒடுக்கப்பட்டு தமிழர் தரப்பின் பலம் சிதைக்கப்பட்டு சின்னாபின்னமாக்கப்பட்டது. குறிப்பாக, இறுதி யுத்தத்தில் நாற்பதாயிரம் (40,000) அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் சபையின் உள்ளக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. மேலும், 2009இல் முள்ளிவாய்க்கால் யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டபோது பொதுமக்களில் சுமார் ஒரு இலட்சம் பேரும் (100,000), போராளிகளில் ஐம்பதாயிரம் பேரும் (50,000) கொல்லப்பட்டதாகத் தெரிகிறது.

‘நிரந்தர அரசியல் தீர்வைக் காண புலிகள்தான் தடையாக இருக்கிறார்கள்!’ எனக் கூறிவந்தவர்கள் போர் முடிந்து எட்டு (08) ஆண்டுகள் கடந்த நிலையிலும் இந்நாள்வரை தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை எட்டாக் கனியாகவே வைத்திருக்கிறார்கள்.

### *13வது அரசியல் திருத்தம்*

இலங்கை அரசியலில் 1978ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 13வது அரசியலமைப்பு திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்படுகிறது. தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பூர்வீக வாழ்விடங்களான வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் 1988இல் முதன் முதலாக உருவாக்கப்படுகிறது.

ஆயினும் பதினெட்டு (18) ஆண்டுகளின் பின்னர் 2006இல் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருந்த வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தனித்தனி அலகுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்ட மாகாண சபை முறைமை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான வழியாக ஒருபோதும் அமையாது என்பது தமிழர்களின் - தமிழ்த் தலைவர்களின் ஒட்டுமொத்த பட்டறிவாகும்.

ஆயுதப் போராட்டம் வலுப்பெற்றிருந்த காலங்களில் சமஸ்டி, 13க்கு மேல் (13பிளஸ்) என சர்வதேச அழுத்தங்களின் பேரில் உறுதிமொழிகளை மாறிமாறி ஆட்சியைக் கைப்பற்றிய அரசாங்கங்கள் வழங்கி வந்தன. ஆனால், முள்ளிவாய்க்கால் இறுதிப் போரின் பின்னர் 13வது அரசியலமைப்புத் திருத்தத்தையே இல்லாமலாக்க ஒரு கூட்டம் கங்கணம் கட்டி நிற்க, மற்றய கூட்டம் மாகாண சபை அரைகுறை அதிகாரங்களையே அமுல்படுத்தமுடியாதவாறு தம் ஆளுகைக்குள் வைத்திருக்க முனைகின்றன.

‘தனி நாடு’ அல்லது ‘தமிழீழம்’ எனத் தொடங்கிய நீண்ட அகிம்சைவழிப் போராட்டமும் ஆயுதமுனைப் போராட்டமும் பின் இணைப்பாட்சி, சமஸ்டி, 13க்கு மேல் (13பிளஸ்) எனக் கொஞ்சம் கொஞ்சமாக இறங்கு வரிசையில் கீழிறங்கி, இப்போது 13இல் (13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில்) வந்து நிற்கிறது! 13ஆவது இனி எங்கு இறங்குமோ என்றும் எண்ணவேண்டி இருக்கிறது. இது தமிழர்கள்மீதும் தமிழ்த் தலைவர்கள்மீதும் திட்டமிடப்பட்டுச் செய்யப்பட்ட அரசியல் சதி என்பதைத் தவிர வேறொன்றும் கூறுவதற்கில்லை. காலத்தை இழுத்தடித்து, இழுத்தடித்து கடைசியில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக தமிழர்களாயிருக்கிற நம்முடைய நிலை மாறி இருப்பதை இன்றைய நம் தலைவர்கள் எப்போதுதான் உணரப் போகிறார்களோ?

இந்திய அரசும் சர்வதேச சமூகமும், நேர்மையுடனும், நீதியுடனும் நடந்துகொள்ளத் தவறியதால் ஏற்பட்டதன் விளைவே இது. இப்போது, வலுவிழந்த மாகாண சபை அதிகாரங்களையாவது தக்கவைத்துக்கொள்ள வேண்டிய சூழலுக்குள் தமிழ் மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள் என்றால் தமிழர்களின் தற்போதைய நிலமை கவலைக்கிடமானது என்பதைத்தவிர வேறெதனைச் சொல்லமுடியும்!

### *2013 மாகாண சபைத் தேர்தல்*

இச்சூழலில்தான் வடமாகாண சபைத் தேர்தல் 2013இல் இடம்பெற்றபொழுது மாகாண சபை இருக்கைகளை பிடிப்பதற்கு தனி நபர்களாகவும் கட்சி சார்ந்தவர்களாகவும் என 36 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கு 906 பேர் போட்டியிட்டார்கள். இங்குதான் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினரும் ஏனைய பலருடன் தேர்தலில் இணைந்துகொண்டார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இணைந்துகொள்ள வேண்டும்; ஏனெனில் இருப்பதையாவது தக்கவைக்கவேண்டிய நிலமை என்றுமில்லாத அளவுக்கு ஏற்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தேர்தலில் நின்றதும் சரி, தேர்தலில் வெற்றிபெற பயன்படுத்திய சுலோகங்களும் சரி! தேர்தலில் அமோக வெற்றியைப் பெற்றதும் சரி! ஆனால், வெற்றிபெற்றவர்கள் ஆரம்பத்திலேயே அமைச்சுக்களுக்கு அடிபட்டார்கள்! அது ஒருவாறாக முடிவுக்குவந்து அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு பல குழப்பங்களுக்கு மத்தியில் நான்கு ஆண்டுகளாக இயங்கி வந்தது.

அமைச்சர்களின் ஊழல் குற்றச்சாட்டு விசாரணை அறிக்கையோடும் அதனைத் தொடர்ந்து முதலமைச்சர் எடுத்த முடிவுகளோடும் முதலமைச்சருக்கு எதிராக ஒரு குழு, முதலமைச்சரை ஆதரித்து ஒரு குழு என மாகாண சபை இரண்டுபட்டுக் கிடந்தது. முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானம் நிறைவேற்றுகிற அளவுக்கு நிலமை உருவாகி ஒருவாறு இப்போது அடங்கிப்போய் கிடக்கிறது. மீண்டும் எப்போது இது உருக்கொள்ளுமோ என எம் மாகாண சபை உறுப்பினர்களையும் (பாராளுமன்ற உறுப்பினர்களையும்) பரிதாபத்தோடு பார்த்துக்கொண்டு இருக்கவேண்டி இருக்கிறது.

### *முதலமைச்சர் சீ.வீ.விக்கினேஸ்வரன் ஐயாவுக்கு!*

இச்சூழலில், முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் ஐயா அதிவிவேகத்தோடு செயற்பட வேண்டும். ஏனெனில் தெற்கில் அவரை வீழ்த்துவதற்கு ஏற்கனவே திட்டங்கள் தீட்டப்பட்டு விட்டன. இந்நிலையில் வடக்கிலும் இவ்வாறான ஒரு நிலை உருவாக அவர் வழிவகுக்கக்கூடாது. தமிழ் மக்கள் முதலமைச்சர்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். அந்நம்பிக்கைக்கு பிரமாணிக்கமாக அவர் இதுவரை நடந்துவந்திருக்கிறார் என்றுதான் மக்கள் நம்புகிறார்கள். அந்நம்பிக்கையை முதலமைச்சர் காப்பாற்றுவார் என்பதில் இன்னும் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் தமிழ் மக்கள்!

எனவே, இக்கட்டத்தில் மக்களின் அரசியல் பிரதிநிதிகளை மட்டுமல்ல; மக்களின் நன்மதிப்பைப் பெற்று நல் ஆலோசனைகளைத் தரக்கூடியவர்களை, ஆக்கபூர்வமான செயற் திட்டங்களை வகுக்கக்கூடியவர்களை உள்வாங்கிச் செல்லவேண்டிய தேவை எழுந்திருக்கிறது!

முதலமைச்சர் இதுவரை காலமும் நீதிமன்ற அமைப்பு முறைமைக்குப் பழக்கப்பட்டவர் என்றபடியினால் கொஞ்சம் நீதிமன்ற விவகாரங்களைக் கவனிப்பது போன்று வடமாகாண சபை அரசியல் விடயங்களையும் பார்ப்பதனால் வந்த விளைவுகளே முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மான விவகாரமோ எனப் பார்க்கவேண்டி இருக்கிறது. கொசுவைப் பிடிச்சி கோவணம் கட்டி அனுப்பியதுபோல விவகாரங்களை ஊதிப் பெருபிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டியது அவரது கடமையும்கூட. அதேவேளை, முழுப் பூசணியை சோற்றில் மறைப்பதாகவும் தீர்வுகள் அமையக்கூடாது. எனவே, முதலமைச்சர் கொஞ்சம் கவனமாக – விவேகமாக - பொறுமையாக –நிதானமாக விடயங்களை கையாள்வது மிக நல்லது. இனிச் செய்வார் என எதிர்பார்க்கலாம்!

### *தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்க்கு!*

‘எங்கள் கட்சிதான் பெரிய கட்சி!’, ‘எங்கள் கட்சிதான் பழைய கட்சி!’, ‘எங்கள் கட்சிதான் ஜனநாயக வழியில் நின்ற கட்சி - நிற்கும் கட்சி!’, ‘எங்கள் கட்சிதான் அதிக வாக்குப் பலம் கொண்ட கட்சி!’ என்றெல்லாம் ஓதிக்கொண்டு இருக்காமல் எவ்வாறு எல்லாரும் ஒருமனப்பட்டு சேர்ந்து செயற்பட முடியும் என்பதை சிந்திக்கவேண்டும்.

‘நாம்தான் பெரிது!’, ‘நாம்தான் போராட்டத்தை வளர்த்தவர்கள்!’ என ஆயுதப் போராட்ட காலங்களில் செயற்பட்டு எத்தனை எத்தனை சகோதரப் படுகொலைகளைப் புரிந்து கடைசியில் யாருக்கும் எதுவும் இல்லாமல்போன வரலாறுகளை நம் கண்முன்னே கண்டிருக்கிறோம். இந்நிலை மீண்டும் வராமல் பார்த்துக்கொள்வதற்கு ஒன்றுபட்டிருந்தல் மிக இன்றியமையாதது.

சில ஊடகங்களும், சில கட்டுரையாசிரியர்களும், சில கட்சியின் ஆலோசகர்களும் தமிழரசுக் கட்சி முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை கொண்டுவர இருந்த காலகட்டத்திலிருந்து ‘தனித்து இயங்குவதா அல்லது கூட்டினைத் தொடர்ந்து தக்கவைப்பதா என்பதுபற்றி தமிழரசுக் கட்சி சிந்திக்க வேண்டும்!’ என எழுதிவருவதும் - கூறிவருவதும் தமிழர்களின் அரசியல் நகர்வுக்கு எவ்வகையிலும் ஆரோக்கியமாக அமையாது!

(தொடர்ச்சி 15ஆம் பக்கம்)

# குடும்பம், மனிதர்களுக்குக் கிடைத்த உன்னதமான மிகச்சிறந்த பரிசு ஆகும்

## - திருத்தந்தை பிரான்சிஸ் -



குடும்பங்கள் மனிதர்களுக்குக் கிடைத்த மிகச்சிறந்த பரிசு. இவ்வுலகை மனிதாபிமானம் மிக்கதாக, உடன் பிறந்த உணர்வுகொண்டதாக மாற்றுவதற்கு, குடும்பங்களே தலைசிறந்த புளிக்காரமாகச் செயலாற்ற வேண்டும் எனத் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

ஐரோப்பிய கத்தோலிக்க குடும்பக் கழகங்கள் ஒருங்கிணைப்பின் (FAFCE) பிரதிநிதிகளைச் சந்தித்தவேளை அவர்களுக்கு வழங்கிய உரையிலேயே திருத்தந்தை இவ்வாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறியதாவது; அரசியல், பொருளாதாரம், மதநம்பிக்கை ஆகிய உலகங்கள் உறுதியாக நன்னெறி வழிகளில் செயலாற்ற, குடும்பங்களில் நிலவும் சூழல்கள் உதவியாக இருக்க வேண்டும். குடும்பங்களை அன்பின் அடிப்படையில் கட்டியெழுப்பாமல், வெளி உலகின் கட்டுமானங்களை உறுதிப்படுத்த முடியாது.

குடும்பம் என்ற அடிப்படைக் கட்டுமானம் சிதைந்து வருவது, ஐரோப்பிய நாடுகள் சந்திக்கும் பெரும் சவால் என்றும், குடிபெயர்தல், வேலைவாய்ப்பு மற்றும் கல்வி ஆகியவை ஐரோப்பிய சமுதாயம் அவசரமாகத் தீர்க்கவேண்டிய நெருக்கடிகள் என்பதையும் திருத்தந்தை தன் உரையில் எடுத்துரைத்தார்.

## துன்புறுபவரோடு இணைந்து துன்புறுவதே, கருணையின் செயல்

### – திருத்தந்தை பிரான்சிஸ் –

கருணையின் செயல்பாடுகள் என்பவை, நம் மனச்சான்றை சமாதானப்படுத்துபவைகளாக அல்ல, மாறாக மற்றவர்களின் துன்பங்களைப் பகிர்பவைகளாகவும் அதில் பங்குபெறுபவைகளாகவும் இருக்க வேண்டும் என சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் கடந்த யூன் 5ஆம் திகதி காலை நிறைவேற்றிய திருப்பலியில் மறையுரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார். தோபித்து நூலிலிருந்து எடுக்கப்பட்ட முதல் வாசகத்தையொட்டி தன் கருத்துக்களைத் திருத்தந்தை பகிர்ந்துகொண்டார்.

நாடு கடத்தப்பட்ட யூதர்களுக்கு, தோபித்து ஆற்றிய பணிகள், தன்னிடம் இருப்பதை மற்றவர்களுடன் பகிர்வதாக மட்டும் இல்லை, மாறாக அவர்களின் துன்பங்களைத் தனதாக்கி, அவர்களோடு பகிர்வதைக் குறிப்பதாக உள்ளது என்றார் திருத்தந்தை.

ஒருவரின் மனச்சான்றை சாந்தப்படுத்துவதற்காக ஆற்றுவதல்ல கருணையின் செயல், மாறாக, துன்புறுபவரோடு இணைந்து துன்புறுவதே உண்மையான கருணையின் செயல் என்றார்.

தன்னிடம் இருப்பதைப் பகிர்ந்த தோபித்து, மற்றவர்களின் துன்பங்களில் பங்குகொண்டதோடு, மற்றவர்களுக்கு உதவுவது ஆபத்து நிறைந்தது என்பதை அறிந்திருந்தும் துணிந்து செயற்பட்டார் என்ற திருத்தந்தை, யூதர்களைச் சாவிலிருந்து காப்பாற்ற திருத்தந்தை 12ம் பயஸ் உட்பட எண்ணற்றோர் பல்வேறு ஆபத்து நிறைந்த செயல்களை ஆற்றினர் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

நோயுற்றிருக்கும் நண்பரை சந்திக்க விருப்பமின்றி, தொலைக்காட்சிமுன் நேரத்தைச் செலவிடும் இன்றைய மனித குலம், நமக்காக சுகங்களை விட்டுக்கொடுத்து, துன்பங்களை அனுபவித்து சிலுவை மரணம்வரை சென்ற இயேசுவை நினைத்துப் பார்க்கவேண்டும் எனவும் திருத்தந்தை பிரான்சிஸ் கேட்டுக்கொண்டார்.

## அருட்பணியாளர்கள் எங்கும் பணியாற்ற எப்போதும் தயாராக இருக்க வேண்டும்

### - திருத்தந்தை பிரான்சிஸ்

தான் பணியாற்றும் இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்ல எப்போதும் தயாராக இருப்பவராக ஒவ்வொரு அருள்பணியாளரும் இருக்கவேண்டும். ஏனெனில் வரலாற்றின் மையம் அவரல்ல என்றும், அவர் சுதந்திரமானவர் என்பதை அவர் அறிவார் என்றும் திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லத்தின் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, மறையுரை வழங்கிய திருத்தந்தை, எந்தத் தீமைகளோடும் உடன்பாடு கொள்ளாமல், இறைவன் அனுப்பும் இடத்திற்குப் பணியாற்றச்செல்ல தான் எப்போதும் தயாராக இருக்க வேண்டும் என்று, தன் மந்தையிடமிருந்து தனக்கான எவ்வித எதிர்பார்ப்புமின்றி வாழும் சுதந்திர மனிதராகிய மேய்ப்பருக்குத் தெரியும் என உரைத்தார்.

அன்றைய திருப்பலியின் முதல் வாசகமாகிய திருத்தூதர் பணிகள் நூலில், புனித பவுல், தூய ஆவியாரின் கட்டளைக்கிணங்க தான் எருசலேமுக்குச் செல்வதாகக் கூறியதைத் தன் மறையுரையில் சுட்டிக்காட்டிய திருத்தந்தை, ஒவ்வொரு மேய்ப்பரின் பணியும் எப்போதும் முழுமையடைந்ததாக இருக்கவேண்டும், பாதியில் விட்டுச்செல்வதாக அல்ல, என்றார்.

மந்தையுடன் ஒரு மேய்ப்பர் கொள்ளும் பிணைப்பு, இயேசுவின் சிலுவையால் சுத்திகரிக்கப்பட்டதாக இருக்கும்போது, அதனை விட்டுவிட்டு மற்றொரு இடத்திற்குப் பணியாற்றச்செல்வது இலகுவானதாக இருக்கும் என்றார்.

எந்த ஒரு மேய்ப்பரும், தீயவைகளோடு உடன்பாடு கொள்ளாதவராகவும், அனுப்பப்படும் இடங்களுக்கு எவ்வித கேள்வியும் இன்றி கீழ்ப்படிதலுடன் செல்பவராகவும், தன் வாழ்வுக்கு முக்கியத்துவம் தராதவராகவும் செயல்படவேண்டும் என மூன்று விதிகளைத் தன் மறையுரையில் முன்வைத்த திருத்தந்தை அவர்கள், நம் மேய்ப்பர்களாகிய அருள்பணியாளர்கள், ஆயர்கள், திருத்தந்தை என அனைவருக்காகவும் செபிப்போம் எனவும் கேட்டுக்கொண்டார்.

## றம்ழான் பெருவிழாவிற்கான திருஅவையின் வாழ்த்துச் செய்தி



அன்பின் இஸ்லாமிய சகோதர சகோதரிகளே, உங்களது றம்ழான் பெருவிழாக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நீவீர் எடுக்கும் உபவாச தவமுயற்சியில், நமது செபத்தோடு இணைந்து ஆதரவையும் நல்கி, அமைதி, மகிழ்வோடிணைந்த ஆத்மீக நிறைவும் உங்களது ஆக வாழ்த்துகின்றோம்.

இவ்வாண்டின் நம் வாழ்த்துச் செய்தியானது மிகப்பொருத்தமானதாகவும், முக்கியம் வாய்ந்ததாகவும் அமைகின்றது. ஏனெனில் பல்சமயங்களுக்கிடையிலான உரையாடல் ஆலோசனைச் சபை உருவாக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவாகின்றது (1967 – 2017). அதற்கு 3 ஆண்டுகளுக்குமுன் பாப்பிறை 6ம் சின்னப்பர், 1967 வைகாசித் திங்கள் 19ஆம் திகதி இந்நிகழ்வு சார்பான தமது முதலாவது வாழ்த்துச் செய்தியை வெளியிட்டிருந்தார். தொடர்ந்து வந்த ஆண்டுகளில், குறிப்பாக இரண்டு செய்திகள் தனித்துவம் வாய்ந்தவையாக உள்ளன. அதாவது, 1991ஆம் ஆண்டில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் வெளியிட்ட “விசுவசிப்போரின் பாதையே, அமைதியை நோக்கிய பாதை” என்னும் செய்தியும், 2013ஆம் ஆண்டில் திருத்தந்தை பிரான்சிஸ் வெளிக்கொணர்ந்த “கல்வியினூடாக, பரஸ்பர கௌரவத்தை உருவாக்கல்” என்னும் செய்தியுமாகும்.

இவ்விரண்டு செய்திகளும் திருத்தந்தையினரால் கையொப்பம் இடப்பட்டுள்ளது. இஸ்லாமிய மக்களுடன் கலந்துரையாடல்வழி உறவை ஆதரிக்கும் மதஉரையாடலுக்கான திருத்தந்தையின் ஆணைக்குழுவின் பல்வகையான செயற்பாடுகளில் “இதுல் பித”யை நோக்கிய றம்ழான் செய்தியானது, உலகளாவிய அளவில், நீடித்து பயன்பாடுள்ளதாகவும், முக்கியம் வாய்ந்ததாகவும் அமைக்கிறது. இச்செய்தியானது பலரையும் சென்று அடையக்கூடியதாக அமைய, பங்குத்தள கத்தோலிக்க சமூகங்களும் ஒவ்வொரு நாட்டிலும் பாப்பிறையின் பிரதிநிதிகளும் பல்சமயங்களுக்கிடையிலான உரையாடல் ஆலோசனைச் சபைக்கு (P.C.I.D - Pontifical Council for Inter Religious Dialogue) உறுதுணையாகச் செயற்படுகின்றனர்.

அனுபவரீதியாக இவ்விரு சமய சமூகத்தினரும், தம் அயல்வாழ் கிறிஸ்தவ, முஸ்லீம் மக்களிடையே பரஸ்பர உறவை ஸ்த்திரப்படுத்த, இச்செய்திகள் வழியாக நாம் பெறும் அக்கால கட்டங்களுக்கேற்ற தகவல்கள், மதிப்பீடுகள் என்பன பெரிதும் தமக்கு உறுதுணையாக இருப்பதாக உறுதிப்படுத்துகிறார்கள். “உலகம் நமது சொந்த வீடு” எனும் கருப்பொருளுக்கமைய, இயற்கையோடு ஒன்றிணைந்து, அதனைப் பராமரித்து வாழ விடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் “எல்லாப் புகழும் உமக்கே” (Iaudato si) எனும் சுற்று நிருபத்துக்கமைவானதாகவே இவ்வருடத்து P.C.I.Dயின் மையக்கருப்பொருள் அமைந்துள்ளது. இவை கொடுத்து நிற்கும் விழுமியங்கள் கத்தோலிக்க, கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்லாது, முழு மானிட சமூதாயத்துக்குமானதாக விளங்குகின்றது.

நமது வாழ்க்கை முறைகள், திட்டங்கள் என்பன நாம் வாழும் இயற்கைச் சூழல், ஏன் நமக்கும் நம் அயலவர்களுக்கும் தீமையான தாக்கங்களை விளைவிப்பனவாக விளங்குகின்றது என்பது மட்டில் திருத்தந்தை பிரான்சிஸ் நமது கவனத்தை ஈர்த்துள்ளார். உதாரணமாக சில தத்துவ கலாசார முறைமைகள், சமய நடவடிக்கைகள், இயற்கையோடு, மனிதகுலம் கொண்டிருக்க வேண்டிய நல்உறவுக்குத் தடையாக உள்ளது. எனவே சமயத்தால் பிளவுபடாது நாம் அனைவருமே ஒன்றிணைந்து இச்சவாலை மேற்கொள்ள வேண்டியவர்கள் ஆகின்றோம்.

“உலகம் நமது பொது இல்லம்” எனும் சுற்றுமடலின் தலைப்பு, இவ்வுலகமானது அதனகத்தே வாழும் அனைவரினதும் வசிப்பிடமாகும் என்பதைக் கூறுகிறது. (தொடர்ச்சி 15ஆம் பக்)

## புனித அந்தோணி மரிய சக்கரியா

குரு - (கி.பி. 1503 - 1539)



மாதமொரு புனிதரை அறிந்துகொள்வோம்

# புனிதர்களின் பாதையில்

மார்ட்டின் லூத்தர் ஒரு கத்தோலிக்க, அதுவும் ஒரு துறவற சபைக் குருவாக இருக்கும்போது, திருச்சபையில் நிலவிய பலவித தீமைகளைச் சுட்டிக்காட்டித் திருச்சபையைவிட்டு வெளியேறினார். இதே அலங்கோலங்களைக் கண்ணுற்ற, லூத்தரின் காலத்தில் வாழ்ந்த புனித அந்தோணி மரிய சக்கரியா திருச்சபைக்குள் இருந்துகொண்டே தம் ஈகை இரக்கச் செயல்களாலும், தமது புனித வாழ்க்கையாலும் பலரை மனந்திரும்பியது மட்டுமின்றி, ஆண்களுக்கு ஒன்றும் பெண்களுக்கு ஒன்றுமாகத் துறவற சபைகளை நிறுவினார். இவ்வாறு திருச்சபையின் அவலங்களை நீக்கும் முயற்சியில் ஈடுபட்டு மாபெரும் வெற்றியும் கண்டார். இக்கண்ணோட்டம்தான் அன்றும் இன்றும் என்றும் இன்றியமையாது வேண்டப்படுகிறது.

இவரின் தாய் இவருக்கு 18 வயது நடக்கும்போது விதவையானார். அப்போதிருந்து அவர் புனிதரின் ஆன்மீக வாழ்வில் அக்கறை செலுத்தினார். நோயினால் தாக்கப்பட்ட ஏழை எளியோரை குணப்படுத்தும் நோக்குடன் சக்கரியா பதுவைப் பல்கலைக்கழகத்தில் மருத்துவக்கலை பயின்று பட்டம் பெற்றார். மக்களின் உடல்நிலையை மட்டுமல்லாது, உள்ளத்து நோய்களையும் குணமாக்க வேண்டும் என எண்ணி வேதக்கலையும் படித்தார். கிறிஸ்தவக் கோட்பாடுகளை மக்கள் அனைவருக்கும் கற்றுக்கொடுக்கத் திட்டமிட்டார்.

இவருக்குக் கி.பி. 1530இல் குருப்பட்டம் கொடுக்கப்பட்டது. உடனே புனித பர்ணபாஸ் ஆலயத்தில் இவர் தமது அலுவலகத்தை அமைத்துக்கொண்டதால் அப்பெயரைத் தமது சபைக்குக் கொடுத்தார். இவரது தூண்டுதலின்பேரில், லூயிசா டொரெல்லா என்ற ஒரு செல்வ மகள் “ஏஞ்சலிக்கல்ஸ்” என்ற மகளிர்க்கான துறவற சபையை நிறுவினார். இச்சபையின் சிறப்பு நோக்கம், தவறிச்சென்று பள்ளத்தில் விழுந்து கிடக்கும் பெண்களை மீட்பதும், அவர்களுக்குப் புதிய சிந்தனைகளையும் உயரிய கண்ணோட்டங்களைக் கொடுப்பதுவுமே ஆகும். இத்தகைய அரும்பெரும் பணிகளிடையே சக்கரியா தமது 36ஆம் வயதில் விண்ணகம் சென்றார். அடிக்கடி திவ்விய நன்மை வாங்குவது, 40 மணி நேரம் திவ்விய நற்கருணை திருமணி ஆராதனை போன்ற ஆன்மீக முயற்சிகளையும் இவர் தோற்றுவித்தார்.

***சிந்தனைக்கு:***

“நமக்குக் கிடைத்த தேவ அழைத்தலின் வழியாக இறைவன் எவ்வளவு நம்மிடம் எதிர்பார்க்கின்றார் பாருங்கள். திருத்தூதர்களையும், மறைசாட்சிகளையும் பின்பற்ற நாம் முன்வந்துள்ளோம். ஆனால் அவர்களுக்கும் நமக்குமுள்ள இடைவெளியைக் கவனியுங்கள். அவர்களடைந்த வேதனைகளை நாம் ஒதுக்கிவிட முயலுதல் கூடாது”. இ∴து புனிதர் தம் சபையினருக்குத் தந்த அறிவுரை.

# கலை இலக்கியச் சாளரம்

## சிந்தனைக் கதை


# வீட்ட போவோமா?

*சி. அஜந்தன், புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி, யாழ்ப்பாணம்.*

நீங்கள் எப்போதாவது விடுதியில் தங்கியிருந்து படித்திருக்கிறீர்களா? விடுமுறை நாட்களில் ஒரு திருவிழாச் சந்தோசம் நெஞ்செல்லாம் நிறைந்து கிடக்க, வீடு முழுக்க ஓடித்திரிந்து சிரித்துக் களைத்து நிமிர்கையிலே, நாளை விடுமுறை முடிகிறதென நாட்காட்டி சொல்லும். இரவு அம்மாவின் கையை இழுத்து அணைத்தபடி, தூக்கமில்லாத இரவில் நாளையை நினைத்து நிகழும் துயரம் காலை விடுமுறை முடிந்து விடுதி செல்கையிலே வாசலிலே வந்து நிற்கும் அம்மா, அப்பா, தங்கச்சி, தம்பி, கூட்டுக்குள் இருந்து எட்டிப்பார்க்கும் நீங்கள் கதைக்கப் பழகிய கிளி, எல்லோரிடமும் "போய் வருகிறேன்" என கையசைத்துப் பிரிகையிலே நெஞ்சுக்குள் ஏதோ ஒன்று கனக்குமே, தொண்டைக் குழிக்குள் ஏதோ ஒன்று வந்து அடைக்குமே, அது வீட்டோடு பின்னிக்கிடக்கும் உயிர், பிரிந்து வரமறுக்கும் கணம்! வீட்டைக் கடைசியாய் திரும்பிப் பார்த்துப் புறப்பட்ட வெளிநாட்டுப் பயணங்கள் நெஞ்சில் இன்னும் ஈரமாய் நிற்கும்.

வீடுகூட ஒரு கருவறைதான். வீடு எம் வாழ்வின் வேர்ப்பகுதி, என் வீட்டை நினைக்கையில் இதயத்தில் எச்சியூறவைக்கும் எத்தனை ஞாபகங்கள் இலவம் பஞ்சாய் வெடித்துக் காற்றில் மிதந்து வருகின்றன.

நான் முதல் முதலாய் உடும்பு பிரட்டியதாய் அம்மா சொன்ன சாமியறை மூலை, மைனாக் குஞ்சுபோல தத்தித் தத்தி நடை பழகி விழுந்தபோது தாங்கிய விறாந்தை, அப்பாவின் மார்பில் படுத்திருந்து தூங்கிப்போகும் மண் திண்ணை, அம்மா நிலாக்காட்டிச் சோறூட்டும் ஜன்னலோரம், பாடப்புத்தகத்துக்குள் மறைத்துவைத்த மயிலிறகு குட்டி போட்டிருக்கா என அடிக்கடி எட்டிப்பார்க்கும் சின்ன அறையின் புத்தகப் பரண். தம்பியோடு ஓடிப்பிடிச்சு விளையாடுகையில் தலையில் அடித்த கதவு, அந்தக் கதவில் என் இரத்தம் ஒட்டிக்கிடந்த இடம். என் எழுத்துக்களை நேசிக்கும் ஒருத்தியின் முகவரி போடாமல் வந்த கடிதம், அவளின் தூரத்துக் கைதட்டல்களாய் காற்றில் படபடத்தபடி கிடக்கும் நான் படிக்கும் மேசை, இப்படி பல பல... நினைத்துப் பார்க்கையில் நெஞ்சிலே தேன் ஊறவைக்கும் ஞாபகப் பொக்கிஷங்கள், எம் வீட்டு நினைவுகளாய் நிறைந்திருக்கும். வீடு வெறும் கட்டிடமல்ல, அது ஒரு உறவு.



"ஆண்டவரே வீட்டைக் கட்டவில்லையெனில். அதைக் கட்டுவோரின் உழைப்பு வீணாகும்" (தி.பா. 127:1). குடும்பம் கடவுளின் அழகிய கனவு. குடும்பம் ஒரு அழகிய தூக்கணாங் குருவிக் கூடுபோல, மின்மினிப் பூச்சிகளாய் ஒவ்வொருவரும் வீட்டுக்கு விளக்கெரிப்போம். 'அன்பு' என்ற எண்ணை குடும்பத்தில் குறையாமல் பாருங்கள். "நான்தான் பெரியவன், நான் சொல்வதை நீ கேள்" என்று கத்தும் ஆணவக் குரங்கு எங்கள் அழகிய கூட்டை பிய்த்தெறிய வீடாதீர்கள்.

விட்டுக்கொடுத்து தெய்வங்களாகுங்கள். குடும்பம் கோவிலாகும். இங்கே வாழ்வது மனிதர்கள் ஆகையால், குறைகள் பல இருக்கும். ஒருபோதும் நூறுவீதம் எதிர்பார்க்காதீர்கள். இன்பமாய் இருப்பதே மனிதனின் இயற்கை. வீட்டில் சின்னச் சின்னதாய் ஏதாவது கொண்டாடுங்கள். பிறந்த நாள், திருமண நாள், குழந்தைகளின் சின்னச் சின்ன வெற்றிகளை சும்மா கடந்துபோக விடாதீர்கள். விரலுக்கேற்ற வீக்கமாய்க் கொண்டாடுங்கள்; வாழ்க்கை வடிவாகும்.

தொலைக்காட்சி நாடகங்கள், எம் குடும்பங்களின் அழகான தருணங்களைக் கொன்றுவிட்டன. நாம் ஒன்றாய் இருந்து நிலாச்சோறுண்டு, வயிறுகுலுங்கச் சிரித்து மகிழ்ந்த முற்றத்துச் சந்தோசங்கள் இல்லாது போய்விட்டன. எங்கள் கதைகள் சோகங்களைச் சொல்ல யாருமின்றி நெஞ்சுக்குள் புதைத்து சுமந்து திரிகிறோம்.

புகையிரதத்தில் பாய்ந்து இரண்டு துண்டாக இறந்து கிடந்த இளம் பெண்ணின் அருகே கிடந்த இரத்தம் நனைந்த கடிதத்தில் "அம்மாகூட என்னை அன்பு செய்யவில்லை" என்ற சோகமும், குடும்பத்தில் அன்பு கிடைக்காத பிணமாய் வாழ்வதிலும் சாவது நிம்மதி... என்றவளின் மரணக் குரல் கேட்கும் ஒவ்வொரு முறையும் மனசு படபடக்கிறது... நாளை எந்தக் குடும்பத்துப் பிள்ளையோ...?

# மருத்துவக் குணங்கள் நிறைந்த வெங்காயம்



- நாலைந்து வெங்காயத்தை தோலை உரித்து, அதோடு சிறிது வெல்லத்தைச் சேர்த்து, அரைத்துச் சாப்பிட பித்தம் குறையும்; பித்த ஏப்பம் மறையும்.
- வெங்காயச்சாறு, கடுகு எண்ணெய் இரண்டையும் சம அளவில் எடுத்து சூடாக்கி இளம் சூட்டில் காதில்விட, காது இரைச்சல் மறையும்.
- வெங்காய நெடி சில தலைவலிகளைக் குறைக்கும். வெங்காயத்தை வதக்கிச் சாப்பிட உஷணத்தால் ஏற்படும் ஆசனக் கடுப்பு நீங்கும்.
- வெங்காயத்தைச் சுட்டு, சிறிது மஞ்சள், சிறிது நெய் சேர்த்து, பிசைந்து மீண்டும் லேசாக சுடவைத்து உடையாத கட்டிகள்மேல் வைத்துக் கட்ட, கட்டிகள் உடனே பழுத்து உடையும்.
- வெங்காயச் சாறு சில வயிற்றுக் கோளாறுகளை நீக்கும். இதை மோரில் விட்டுக் குடிக்க இருமல் குறையும்.
- வெங்காயச் சாற்றையும், வெந்நீரையும் கலந்து வாய் கொப்பளித்து, வெறும் வெங்காயச் சாறை பஞ்சில் நனைத்து பல் ஈறுகளில் தடவிவர பல்வலி, ஈறுவலி குறையும்.
- வெங்காயத்தை அவித்து தேன், கற்கண்டு சேர்த்து சாப்பிட உடல் பலமாகும்.
- வெங்காயத்தை வதக்கி வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- படை, தேமல் உள்ள இடங்களில் வெங்காயச் சாற்றை பூசிவர மறைந்துவிடும்.
- திடீரென மூர்ச்சையானால் வெங்காயத்தை கசக்கி முகரவைத்தால் மூர்ச்சை தெளியும்.
- வெங்காயச்சாற்றையும் தேனையும் கலந்து அல்லது வெங்காயச்சாற்றையும், குல்கந்தையும் சேர்த்து சாப்பிட்டால் சீதபேதி நிற்கும்.
- வெங்காய ரசத்தை நீர் கலந்து குடிக்க, நன்கு தூக்கம் வரும்.
- பனைமர பதநீரோடு வெங்காயத்தை நறுக்கிப்போட்டு சூடுபடுத்தி குடித்துவர மேகநோய் நீங்கும்; அல்லது வெங்காயம், அவரை இலை இரண்டையும் சம அளவு எடுத்து அரைத்துச் சாப்பிட மேகநோய் குறையும்.
- வெங்காயம் குறைவான கொழுப்புச்சத்து உள்ளது. எனவே குண்டானவர்கள் தாராளமாக வெங்காயத்தைப் பயன்படுத்தலாம்.
- பச்சை வெங்காயம் நல்ல தூக்கத்தைத் தரும். பச்சை வெங்காயத்தை தேனில் கலந்து சாப்பிடுவது நல்லது.
- வெங்காயம் வயிற்றிலுள்ள சிறுகுடல்பாதையை சுத்தப்படுத்துகிறது. ஜீரணத்துக்கும் உதவுகிறது.
- வெங்காயம் ரத்த அழுத்தத்தை குறைக்கும்; இழந்த சக்தியை மீட்கும்.
- தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் வெங்காயச்சாற்றை நாள் ஒன்றுக்கு அரை அவுன்ஸ் வீதம் மூன்றுவேளை சாப்பிட்டுவர நுரையீரல் சுத்தமாகும்.
- வெங்காயச் சாற்றுடன், கடுகு எண்ணெய் கலந்து கீல் வாயு காரணமாக மூட்டுக்களில் ஏற்படும் வலி நேரத்தில் தடவிவர வலி குணமாகும்.
- வெங்காயச் சாற்றோடு சிறிது உப்பு கலந்து அடிக்கடி சாப்பிட்டுவர, மாலைக்கண் நோய் சரியாகும்.

# கொஞ்சம் சிரிங்க

**கஸ்டமர்:** உங்க ஹோட்டல்ல நல்ல வசதி இருக்கா?
**முதலாளி :** நிச்சயமா சார். உங்க வீடுமாதிரி நீங்க பீல் பண்ணலாம்!
**கஸ்டமர் :** அட கஷ்ட காலமே! இங்கேயும் அதே பிரச்சினையா? இதுக்கு நா வீட்டிலேயே தங்கிடுறது நல்லது.

..................................

**ரவிக் பொலிஸ்:** எந்த தைரியத்திலடா நீ லையிசன்ஸ் இல்லாம வந்தாய்?
**வந்த நபர்:** நூறு ரூபா இருக்கு என்ற தைரியத்திலதான்.

..................................


**நீதிபதி:** பொலிஸ் வீட்டில் ஏன் நீ இரண்டு தடவைகள் திருடினாய்?
**கள்ளன்:** ஐயா, நான் முதல் தடவை திருடிவிட்டு வாசல்படியை பார்க்கும்போது, "நன்றி மீண்டும் வருக" என்று எழுதியிருந்துச்சு.

......................................

**சுமதி:** உனக்கு எப்போது காக்காய் வலிப்பு வரும்?
**யேந்தி:** பீரோவின் சாவியை எப்போதெல்லாம் என் மாமியார் இடுப்பில் சொருவிக்கொண்டு திரிகிறாரோ அப்போதெல்லாம்.

.....................................

**ராஜா:** நான் எழுதிய கதையைப் படிச்சியா?
**கமல்:** படித்தேன், ஜீரணிக்கவே முடியவில்லை!
**ராஜா:** உன்னைப் படிக்கத்தானே சொன்னேன். சாப்பிடவா சொன்னேன்?



**விமல்:** கலியான வீட்டில் தவறுதலா 500 ரூபாய்க்கு பதிலாக 1,000 ரூபாய் மொய் எழுதிட்டேன்.
**கமல்:** அடடா அப்புறம் என்னாச்சு?
**விமல்:** நா விடுவனா? கலியாண வீட்டிலிருந்து ஒரு புது ஜோடி செருப்பை போட்டுகிட்டு வந்திட்டேன்.

..................................

**டாக்டர்:** உங்க மனைவிக்கு ஒரு பல் பிடுங்க நூறு ரூபாய் ஆகும்.
**கணவர்:** ஆயிரம் ரூபாய் தாறேன். அவட நாக்கையும் சேர்த்து பிடுங்குங்க டாக்டர்.

..................................

**பண்ணையார்:** நம்ம தோட்டமெல்லாம் எப்படி இருக்கு?
**வேலைக்காரர்:** உங்க மனசுபோல இருக்கு முதலாளி
**பண்ணையார்:** எப்படி?
**வேலைக்காரர்:** ஈரமே இல்லீங்க!

..................................

**ராமு:** சோதிடர் என் திருமணத்திற்கு பிறகு தோஷமெல்லாம் நீங்கிவிடும் என்று சொன்னது ரொம்ப சரியாப் போச்சு.
**ரமேஸ்:** தோஷமெல்லாம் நீங்கிடுச்சா?
**ராமு:** ஆமாம் சந்தோஷமெல்லாம் நீங்கிருச்சு.

# மன்னா விளம்பரப் பலகை

நீ பாவம் செய்ய விரும்பவில்லையா? அப்படியானால் கோபத்திற்கு உன் உள்ளத்தில் இடம்கொடுக்காதே.

நெருப்பை கரையான் அரிக்க முடியாததுபோல் நேர்மையாளனைப் பழியும், பாவமும் நெருங்க முடியாது.

........................

வாழ்க்கை என்பது இறைவன் வரைந்த ஓவியம்; வாழ்வது என்பது இறைவன் படைக்கும் காவியம்.

........................

சாதனையாளர்கள் இறுதியில் கிடைக்கும் வெற்றியினைப் பார்க்கின்றனர். சோதனையாளர்கள் வழியினில் வரும் வேதனையை கண்ணோக்குகின்றனர்.

நல்லதை எண்ணுவது அறிவு, எண்ணியதை முடிப்பதே முயற்சி, மகிழ்ச்சியும் ஒன்றித்த உழைப்புமே வாழ்நாளை அதிகரிக்கும்.

........................

"கீழே விழுவது தோல்வியின் அறிகுறியல்ல; விதை கீழே விழுவதாலே முளைக்கின்றது. தோல்வியைக்கண்டு மனமுடையலாகாது; உதிர்ந்த மரமும் ஒருநாள் தளிர்விடும்"

........................

வாழ்க்கையை வெறுக்கின்றவனால் இறைவனை உணர முடியாது.

இறைவன் உனக்குள்ளேயே இருக்கும்போது அவரை நீ எங்கேயும்போய்த் தேடவேண்டாம். உன்னை நீ அறியும்போது உன்னுடைய ஆற்றலையும் உணர்ந்துகொள்கிறாய்.

"வாழ்வு ஒரு கல்வி நிலையம். அன்புசெய்யக் கற்றுக்கொள்பவர்கள் மேலான பட்டம் பெறுகின்றனர்"

# சமையல் குறிப்பு

## பீட்ரூட் மில்க் ஷேக்

**தேவையானவை:**



பீட்ரூட் - 1
தேங்காய் - அரைமூடி
நாட்டுச் சர்க்கரை - 3 டீஸ்பூன்
பேரிச்சம்பழம் - 4
ஏலக்காய் - 2
குங்குமப்பூ - சிறிதளவு

**செய்முறை :**

பீட்ரூட்டைத் தோல் சீவி, துருவி அதனுடன் ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து மிக்ஸியில் அரைத்து வடிகட்டுங்கள். தேங்காயைத் துருவி, அரைத்துப் பாலெடுத்துக் கொள்ளுங்கள். பீட்ரூட் சாறு, தேங்காய்ப் பால், நாட்டுச் சர்க்கரை, பேரிச்சம் பழம், ஏலக்காய் அனைத்தையும் மிக்ஸி ஜாரில் போட்டு விப்பர் மோடில் சுற்றுங்கள். விரும்பினால் ஐஸ் கட்டிகளைச் சேர்த்து, ஜில்லென்று பரிமாறுங்கள்.

# திருவழிபாடு

## திருவழிபாடு பற்றிய கேள்வி பதில்களும் இறையியல் விளக்கங்களும்

### தொடர் 19 -

**4.2.3 தவக்காலமும் புனித வாரமும்**

**366. தவக் காலம் என்றால் என்ன?**

இயேசு பாலைநிலத்திற்குச் சென்று செபம், தவம் செய்ததை நாம் கண்டு உணர்ந்து கடைப்பிடிக்கவும், நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்புப்பெற்று பாஸ்காத் திருவிழாவைக் கொண்டாடத் தக்க தயாரிப்பு செய்யும்படியாகவும் திருச்சபையால் ஏற்படுத்தப்பட்ட காலம் ஆகும்.

**367. பாஸ்கா விழாவிற்கான தயாரிப்பு நாள்கள் எத்தனை? எதன் அடிப்படையில் உருவாகியது?**

நாற்பது நாள்.

**இதன் பின்னணி:**

- நோவா காலத்துப் பெருவெள்ளம் 40 நாள்கள்:
- இஸ்ரயேல் மக்களின் பாலைநிலப் பயணம் 40 ஆண்டுகள்:
- எலியா இறைவாக்கினரின் உண்ணா நோன்பு 40 பகலும் 40 இரவும்:
- மோசே சீனாய் மலையில் உண்ணா நோன்பு 40 நாள்கள்:
- நினிவே மக்களின் தவம் 40 நாள்கள்:
- இயேசுவின் பாலைநில அனுபவம் 40 நாள்கள்.

**368. தவக்காலம் என்று ஆரம்பமாகிறது?**

திருநீற்றுப் புதன் அன்று.

**369. திருநீற்றுப் புதன் அன்று எவ்வாறு திருநீறு பூசும் பழக்கம் உருவாகியது?**

திருநீறு (சாம்பல்) பூசுவதற்கான வரலாற்றுப் பின்னணியை விவிலியத்தில் (யோனா 3:1-6: மத் 11:21) நாம் காண்கிறபோது, கிறிஸ்தவர்கள் இந்தப் பழக்கத்தை யூதர்களிடமிருந்து பெற்றுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. இது தவத்தின் அடையாளம். தொடக்கத்தில் இது தனித் தவத்தின் அடையாளமாக இருந்தது. நாளடைவில் பொதுத் தவத்தின் சடங்கில் ஒரு பகுதியாக மாறியது. நான்காம் நூற்றாண்டிலிருந்து இது தவக்காலத்தில் இடம்பெற்றது. பாவம் செய்தோர் தவத்தை மேற்கொண்டு, தவத்தின் இறுதியில், அதாவது பெரிய வியாழனன்று மீண்டும் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இது நாளடைவில் மறைந்து, ஒவ்வொருவரும் பாவியே என்பதால், ஒவ்வொருவரும் தவம், ஒறுத்தல் செய்ய வேண்டும் என்ற கருத்து மேலோங்கியது.

எனவே திருத்தந்தை உர்பான் II (1088 – 1099) அவர்கள் எல்லாரும் திருநீறு பெறுவதை பரிந்துரைத்தார்: ஆண்கள் தலையிலும் பெண்கள் தலையைத் துணியால் மூடிக்கொள்வதால் நெற்றியிலும் பெறுவர். 11ஆம் நூற்றாண்டில் திருநீறைப் புனிதப்படுத்துவதற்கான மன்றாட்டு உருவாகியது: 12ஆம் நூற்றாண்டில் குருத்தோலையிலிருந்து திருநீறைத் தயாரிக்கும் நிலை உருவாகியது.

**370. திருநீறு எதிலிருந்து தயாரிக்கப்படுகிறது?**

கடந்த வருடம் குருத்து ஞாயிறன்று மந்திரிக்கப்பட்ட குருத்தோலைகள் இப்பொழுது சுட்டெரிக்கப்படுகின்றன. அவற்றின் சாம்பல் மந்திரிக்கப்பட்டு திருநீறாகப் பயன்படுத்தப்படுகிறது.

**371. இன்று இச்சடங்கு எவ்வாறு நிறைவேற்றப் - படுகிறது?**

புனிதப்படுத்தப்பட்ட திருநீறு ஒவ்வொருவருடைய நெற்றியிலும் பூசப்படுகிறது. அப்போது 'மனிதா, நீ மண்ணாக இருக்கிறாய்: மண்ணுக்கே திரும்புவாய்: நினைவில் கொள்' அல்லது 'மனந்திரும்பி, நற்செய்தியை நம்பு' என்ற வாய்ப்பாடு பயன்படுத்தப்படுகிறது.

**372. திருச்சபை ஏன் இந்தச் சடங்கை ஏற்படுத்தியது?**

நாம் தவம் செய்யவும் மனம் திரும்பவும்.

**373. தவக்காலத்தில் நம்மைத் தவம் செய்யத் தூண்டும்படியாகத் திருச்சபை திருவழிபாட்டில் செய்துள்ள மாற்றங்கள் என்ன?**

மகிழ்ச்சிக்குரிய செயல்களை, அதாவது பீடத்தை அலங்கரித்தல், வானவர் பாடல், அல்லேலூயா போன்றவைகளைத் தவிர்க்க திருச்சபை அழைக்கிறது.

**374. தவக்காலத்தின் இறுதி வாரம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

திருச்சபை இயேசுவினுடைய திருப்பாடுகளைப்பற்றி சிறப்பான விதமாய் துயரத்துடன் தியானிப்பதனாலும் நாம் கடவுளின் மகனாகிய இயேசுக் கிறிஸ்துவின் மிக மேலான மறைநிகழ்வுகளையும் அவற்றின் மறைபொருளையும் கொண்டாடுவதாலும் திருப்பாடுகளின் வாரம்/ புனித வாரம் என்று அழைக்கப்படுகிறது.

**375. புனித வாரத்தின் தொடக்க நாள் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**

'திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு' என்று அழைக்கப்படுகிறது.

**376. திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு அன்று நடைபெறும் மிகச்சிறப்பான சடங்குகள் என்ன?**

குருத்தோலைகளை மந்திரித்து பவனியாக வருவதும், இயேசுவின் திருப்பாடுகள் அடங்கிய நற்செய்திப் பகுதியை முழக்கமிடுவதும்.



**377. திருப்பாடுகளின் குருத்து ஞாயிறு அன்று நடைபெறும் சடங்குகள் எதை நம் கண்முன் கொண்டுவருகின்றன?**

எருசலேம் நகருக்குள் நம் ஆண்டவர் ஆடம்பரமாய் நுழைந்ததும், அவர் பட்ட திருப்பாடுகளும் நம் கண்முன் தோன்றுகின்றன.

**378. இந்தப் புனித வாரத்தில் நடைபெறுகின்ற பிற சடங்குகள் எவை?**

அ) அருளடையாளக் கொண்டாட்டங்களுக்கான எண்ணெய் புனிதப்படுத்தப்படும் திருப்பலி:

ஆ) காலடிகளைக் கழுவும் சடங்கு:

இ) ஆண்டவர் இயேசுவின் இறுதி இராவுணவுக் கொண்டாட்டம்:

ஈ) திருச்சிலுவை ஆராதனைச் சடங்கு:

உ) பாஸ்கா திருவிழிப்புச் சடங்கு.

**379. திருத்தைலத் திருப்பலி (Chrism Mass) என்பது என்ன?**

கிறிஸ்தவ நம்பிக்கையாளரின் அருள்வாழ்வுக்குத் தேவையான, அதாவது அருளடையாளக் கொண்டாட்டங்களுக்குத் தேவையான எண்ணெய்கள் புனிதப்படுத்தப்படும் சடங்கு ஆகும்.

**380. எந்தெந்த எண்ணெய் புனிதப்படுத்தப் - படுகின்றது? அர்ச்சிக்கப்படுகிறது?**

அ) ஆயத்த நிலையினரின் எண்ணெயும்

ஆ) நோயாளிகளின் எண்ணெயும் புனிதப்படுத்தப்படுகின்றன.

இ) கிறிஸ்மா தைலம் அர்ச்சிக்கப்படுகிறது.

**381. இத்திருப்பணியை நிறைவேற்றுவது யார்?**

மறைமாவட்ட ஆயர். (விதிவிலக்காக, அவசரக் காலத்தில்), ஆயரால் புனிதப்படுத்தப்பட்ட எண்ணெய் இல்லாதபொழுது, அவசியமாயின் அருள்பணியாளர் நோயாளிக்கான எண்ணெயையும் ஆயத்த நிலையினருக்கான எண்ணெயையும் அவ்வற்றிற்குரிய சடங்குமுறைகளைப் பின்பற்றி புனிதப்படுத்தலாம். ஆனால் கிறிஸ்மா தைலம் ஆயரால் மட்டுமே அர்ச்சிக்கப்படும்.

**382. திருத்தைலத் திருப்பலி எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?**

திருவழிபாட்டு ஒழுங்குபடி, புனித வாரத்தில் இறுதி இராவுணவுக் கொண்டாட்டத்தின் நாளின் காலையில் இப்பலி இடம்பெறும். இருப்பினும் அருள்பணியாளர்களின் வசதிக்காக இதற்கு முந்தின திங்கள், செவ்வாய், புதன் இவற்றின் ஒரு நாளில் கொண்டாடவும் திருச்சபை அனுமதிக்கிறது.

**383. முப்பெரும் விழாக்கள் (Triduum) என்பது என்ன?**

**'திருவழிபாட்டு ஆண்டின் சிகரம்'** ஆக விளங்கும் பாஸ்காவின் முப்பெரும் விழாக்கள்:

- **முதல் நாள்:** புனித வியாழன் மாலையிலிருந்து புனித வெள்ளியின் மாலைவரை:
- **இரண்டாம் நாள் :** புனித வெள்ளி மாலையிலிருந்து புனித சனி மாலைவரை:
- **மூன்றாம் நாள் :** புனித சனி மாலையிலிருந்து பாஸ்கா ஞாயிறு மாலைவரை

**384. இறுதி இராவுணவுக் கொண்டாட்டம் எந்த நாளில் கொண்டாடப்படுகிறது? அது வெளிப்படுத்துவது என்ன?**

- புனித வியாழன் அன்று
- **இயேசுக் கிறிஸ்து**

அ) அன்புக் கட்டளையைக் கொடுத்தது: சீடரின் காலடிகளைக் கழுவியது:

ஆ) நற்கருணையை ஏற்படுத்தியது:

இ) குருத்துவத்தை நிறுவியது ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது.

**385. புனித வியாழன் திருவழிபாட்டுக் கொண்டாட்டத்தின் சிறப்பு அம்சங்கள் என்ன?**

- மகிழ்ச்சியின் அடையாளமாக இன்று பீடம் அழகாய் அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. நற்கருணைப் பேழையைச் சுற்றியுள்ள துணியும் வெள்ளை நிறமானது; அருள்பணியாளரும் வெள்ளை நிற திருஉடைகளை அணிந்துகொள்வார்.

- நற்கருணைப் பேழை வெறுமனே இருக்க வேண்டும். அதாவது, ஏற்கெனவே அர்ச்சிக்கப்பட்ட நற்கருணை அதன் பேழைக்குள் இருக்கக்கூடாது. அது திருப்பண்ட அறையில் ஒரு தகுதியான பாதுகாப்பான இடத்தில் வைக்கப்பட வேண்டும்.

- இயேசு நற்கருணையை உண்டாக்கி, அதை தமது திருத்தூதர்களுக்குத் தனது இறுதி இரவுணவாகக் கொடுத்த நேரத்தை மிகச்சிறப்பாகச் சுட்டிக்காண்பிக்கும்படியாக, ஒரு கோவிலில் ஒரு திருப்பலிதான் நடைபெற வேண்டும்.

- திருப்பலியின்போது வானவர் பாடல் பாடப்படும். அந்நேரத்தில் கோவில் மணிகள் அடிக்கப்படும். அதன் பிறகு மரமணிகள் தான் பாஸ்கா திருவிழிப்புச் சடங்குவரை பயன்படுத்தப்படும்.

- இன்றும் மறுநாளுக்கும் (புனித வெள்ளி) தேவையான அப்பங்கள் அர்ச்சிக்கப்படுகின்றன. புனித வியாழன் திருப்பலி முடிவுற்றதும் மீதமுள்ள நற்கருணையை ஆடம்பரமாக வேறொரு நற்கருணைப் பேழை அமைக்கப்பட்டிருக்கும் இடத்திற்குப் பவனியாக அருள்பணியாளர் எடுத்துச் செல்வார்.

- பீடத்தில் உள்ள சிலுவை வெள்ளைத் துணியால் மூடப்படும். பிற சிலுவைகளோ திருஉருவங்களோ அகற்றப்படும். இல்லையெனில் ஊதா நிறத் துணியால் மூடப்படும்.

**386. புனித வியாழன் அன்று திருப்பலி முடிந்ததும் பீடத்தின்மேல் உள்ள துணி அகற்றப்படுவது எதைக் குறிக்கிறது?**

கிறிஸ்து தன்னை முழுவதுமாக பலியாக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறார். இந்நேரத்தில் பலி ஒப்புக்கொடுக்கப்படும் பீடத்திற்கு இடமில்லை. எனவே பலிப்பீடத் துணிகள் அகற்றப்படுகின்றன.

**387. பாதம் கழுவும் சடங்கு எப்படி நடைபெறுகிறது?**

நம் ஆண்டவர் தம் திருத்தூதர்களுடைய பாதங்களைக் கழுவியதைப்போன்று அருள்பணியாளர் தம் இடையில் வெள்ளைத் துணி கட்டிக்கொண்டு, இருப்பிடத்தில் அமர்ந்திருக்கும் பன்னிரண்டு பேர்களிடம் சென்று, ஒவ்வொருவர் முன்னும் முழந்தாள்படியிட்டு, வலது காலைக் கழுவித் துடைக்கிறார்.

**388. புனித வெள்ளிக் கிழமை நமக்குத் தரும் மறை உண்மைகள் என்ன?**

நம் மீட்பரின் திருப்பாடுகளையும் அவரது சிலுவைச் சாவையும் நமக்கு இந்த நாள் நினைவூட்டுகிறது. புனித வெள்ளிக்கிழமை துயர நாளாகையால் பீடம் யாதொரு அலங்காரமுமின்றி வெறுமனே இருக்கும். திருச்சிலுவை ஊதா / வெள்ளைத் துணியால் மூடப்பட்டிருக்கும், நற்கருணைப் பேழை வெறுமையாகவும் திறந்தும் இருக்கும்.

**389. புனித வெள்ளிக்கிழமைக் கொண்டாட்டம் எத்தனை பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது?**

**மூன்று பாகங்கள்:-**

1. வார்த்தை வழிபாடு 2. திருச்சிலுவை ஆராதனை
3. திருவிருந்துச் சடங்கு

**390. வார்த்தை வழிபாட்டில் இடம்பெறுகின்ற பொது மன்றாட்டுகளைப்பற்றி குறிப்பிடவும்?**

**பத்து மன்றாட்டுகள் இடம்பெறுகின்றன.**

1. தூய திருச்சபைக்காக
2. திருத்தந்தைக்காக
3. திருச்சபையில் பல்வேறு நிலையில் உள்ளவர்களுக்காக
4. திருமுழுக்குபெறத் தயாரிப்பு செய்வோர்க்காக
5. கிறிஸ்தவர்களின் ஒற்றுமைக்காக
6. யூத மக்களுக்காக
7. கிறிஸ்துவில் இன்னும் நம்பிக்கை கொள்ளாதவர்களுக்காக
8. கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களுக்காக
9. நாடுகளை ஆள்வோர்க்காக
10. துன்புறுவோர்க்காக

**391. திருச்சிலுவை ஆராதனைச் சடங்கு எப்படி நடைபெறுகிறது?**

பவனியாகக் கொண்டுவரப்படும் பாடுபட்ட திருச்சிலுவையை அருள்பணியாளர் ஏற்று, இறைமக்கள் பக்கமாகத் திரும்பி, முதலில் சிலுவையின் உச்சியையும் பின் வலக்கையையும் இறுதியாக, திருஉருவம் முழுவதையும் திறந்து காண்பிக்கிறார். இவ்வாறு செய்யும்பொழுது ஒவ்வொரு முறையும் முன்னைய விதத்தைவிட அதிகமாய் சிலுவையை உயர்த்தியும் குரலை ஏற்றியும் "திருச்சிலுவை மரம் இதோ, இதிலேதான் தொங்கினார், உலகத்தின் மீட்பர்" என்று பாடுவார். "வருவீர் ஆராதிப்போம்" என இறைமக்கள் பதில்மொழி கூறி திருச்சிலுவைக்கு வணக்கம் செலுத்துவர்.

பின் திருச்சிலுவையை பீடத்தின் அடியில் பீடப்பணியாளர்கள் பிடித்துக்கொள்ள, முதலில் அருள்பணியாளர் அதற்கு வணக்கம் செலுத்துவார். அவரைத் தொடர்ந்து இறைமக்கள் சிலுவைக்கு வணக்கம் செலுத்துவர் அல்லது அனைவரும் அந்தந்த நாட்டு பழக்கத்திற்கேற்ப வேறு வகையில் உதாரணமாக முத்தம் செய்தோ கைகளால் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டோ வணக்கம் செலுத்துவர்.

**392. திருவிருந்து சடங்கின் தனித்தன்மை என்ன?**

புனித வெள்ளிக்கிழமை நடைபெறுவது ஒரு திருச்சடங்கு மட்டுமே என்பதால் புனித வியாழன் அன்று அர்ச்சிக்கப்பட்ட திருஅப்பத்தை இன்றைய நாளில் திருவிருந்துச் சடங்கின்போது இறைமக்கள் பகிர்ந்துகொள்கின்றனர்.

(அடுத்த இதழிலும் தொடரும்)

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.180

## சீராக் ஞானம் 1-30 அதிகாரங்கள்

உங்கள் விடைகளை ஓகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பிவைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ❖ | 03 | 01 | | 13 | | | | | 02 |
| | | 17 | 14 | | | | | | |
| 11 | | | | | | | 12 | | |
| ❖ | | | | | | 08 | | | |
| | | 09 | | 22 | | | | | |
| | | 05 | 07 | ❖ | ❖ | | | | |
| | | | | | | | 04 | 18 | |
| | | | | | | | | ❖ | |
| | | | | | | | | ❖ | |
| 10 | 21 | ❖ | | 15 | | 19 | | 20 | 16 |

உங்கள் விடைகளை, *குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 116/3, சென். ஜோசப் வீதி, பெற்றா, மன்னார்* என்ற முகவரிக்கு அனுப்பவும்.

( ___ என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறைவார்த்தையின் இடைச்சொற்கள் என்பதை கவனத்தில் கொள்ளவும்)

### இடமிருந்து வலம்

1. .............. உழைப்பின் பயனைப் பிறருக்கு விட்டுவிடுவதில்லையா?
11. .............. வீழ்ச்சி திடீரென்று ஏற்படும்.
12. நீ திண்ணமாய் சாவாய் என்பதே .......... நெறிமுறை.
13. ............. அவர்கள்மீது கேட்டறியாய் —
14. ............ அவன் உன்னத இறைவனின் —
22. ............ அவருடைய அன்பைப் பெற்றுத் தருகிறது.

### வலமிருந்து இடம்

4. ஞானத்திற்கு ............. வாழ்விற்கும் அன்பர்.
8. ............. பலரை அழித்திருக்கிறது.
9. மூன்றாவது ............ பலரை நிலைகுலையச் செய்தது.
17. நானே தூய அன்பு. அச்சம், ........... தூய நம்பிக்கை —
20. ஞானியர் தக்க நேரம் வரும்வரை ............... காப்பார்.

### மேலிருந்து கீழ்

2. தம் வியத்தகு செயல்கள்பற்றி .......... —
3. நீ ........... கேட்டு உன்னை கவனித்தோர் —
4. ஒவ்வோர் உயிரும் தன் இனத்தின்மீது ............ பாராட்டுகிறது.
5. பாவிகள் .......... கொள்ளைப் பொருளுடன் —
6. பரந்த ............... வே முதியோருக்கு மணிமுடி.
7. ............ செயல்கள் அனைத்தையும் அவர் அறிவார்.
12. கொலைசெய்ய அதிகாரம் கொண்டவர்களை விட்டுத்.............. இரு

### கீழிருந்து மேல்

7. .............. வெளிவேடம் போட வேண்டாம்.
10. மூடரோடு பேசுவோர் தூக்கக் கலக்கத்தில் உள்ளவரோடு ............. ஒப்பாவார்.
15. வெடுக்கென்று பேசும் நாவைக் கொண்டவளை எல்லோரும் உணர்ந்து ...............
16. தக்க பருவத்தில் ............. அவளது அழகிய —
18. ........... செயல்களைக் கண்டு வியப்பு அடையாதே.
19. தீயவர்களின் வீழ்ச்சி .............. ஏற்படும்.
21. ஆண்டவரின் வியத்தகு .......... கூட்டவோ —

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி இல. 178

## சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசுபெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்:




**முதலாம் பரிசு:**
A. றொசாணி,
உயிலங்குளம்,
மன்னார்.

**இரண்டாம் பரிசு:**
ம. கொன்சலா,
எழுத்தூர்,
மன்னார்.

**மூன்றாம் பரிசு:**
இ. புஸ்பாகரன்,
சின்னப்பண்டிவிரிச்சான்,
மடு.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 76 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 68 பேர்.**

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல. 178ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

01. ஜெகநாதன், இல: 161, மடுக்கரை, நானாட்டான்.
02. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
03. சு. மீரா, பள்ளிமுனை கிழக்கு, மன்னார்.
04. சி. மேரி ஆன் சபீனா, அச்சுவேலி, யாழ்ப்பாணம்.
05. கெ. ஜன்ஷன், பொன்தீவுகண்டல், முருங்கன்.
06. வி. வேஜின் டிலைக்சனா, சின்னப்பண்டிவிரிச்சான், மடு.
07. ராஜிவி அல்போன்ஸ், பெற்றா, மன்னார்.
08. தேவிகா பத்மராஜா, மடுமாதா வீதி, பெற்றா, மன்னார்.
09. ம. மேரி மதலேனா முத்துத்தம்பி, கல்பிட்டிறோட், மாம்புரி
10. டி. கொலற் துரம், தாராபுர வீதி, தாழ்வுபாடு.
11. C.J. ஜெனட் ஆன் பிரின்சி, கல்பிட்டி வீதி, மாம்புரி.
12. அ. மெர்லின், பொன்தீவுகண்டல், முருங்கன்.
13. நி. ஜஸ்மின் ஷறோன், ஆவணம், நானாட்டான்.
14. அருண் கிறித்திக் துரம், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
15. E. நிஷாந்தினி கூஞ்ஞ, குழந்தையேசு வீதி, பேசாலை.
16. கிறிஸ்ரின் ஏஞ்சல் டலிமா, 1ம் வட்டாரம், பேசாலை.
17. ச. கனிஸ்ரா, குருவில், வட்டக்கண்டல்.
18. ஜ. அலோஜிகா, பாலைப்பெருமாள்கட்டு, வட்டக்கண்டல்.
19. பி. நித்தியானந்தன் குருஸ், ஆனாள் நகர். வங்காலை.
20. பி. ஆனந்தராணி, திருக்குடும்ப மாகாண இல்லம், யாழ்.
21. அல்போன்ஸ் லில்லி ஷிரோமியா, ஹப்புத்தளை.
22. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
23. அ. இனற் றுக்சனா, சென்மேரிஸ் வீதி, அடம்பன்.
24. A.J. பீற்றர் பியன்மனோ, பள்ளிமுனை, மன்னார்.
25. கெ. சுமித் சுவீற்ஷன், பொன்தீவுகண்டல், முருங்கன்.
26. S.M. குலோஜினி மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை
27. S.A. டில்ஷான் மொறாய்ஸ், 1ம் வட்டாரம், வங்காலை.
28. அகுஸ்தீன் இசக்கியேல் ஜோசப்வாஸ்நகர், தோட்டவெளி.
29. ச. பவானி, குருவில், பாலைப்பெருமாள்கட்டு.
30. S. டென்சியா பெரேரா, 8ம் வட்டாரம், பேசாலை.
31. மித்திராரூபன் டேனுலன்,சூரியகட்டைக்காடு, நானாட்டான்.
32. செ. ஞானச்சந்திரா, முதலியார்குளம், செட்டிகுளம்.
33. K. மடோனா, இல: 54, கற்குளம்-2, சிதம்பரபுரம்.
34. ச. வானுமதி, பொன்தீவுகண்டல், முருங்கன்.
35. அ. அபிஷேக், கொக்குப்புடையான், சிலாபத்துறை.
36. A. A. அபிநிஷா, கொக்குப்படையான், சிலாபத்துறை.
37. நி. யாழிசன், குடியிருப்பு, செட்டிகுளம்.
38. K.டொறின்மீனா, அன்னை வேளாங்கண்ணி, நாச்சிக்குடா
39. ம. பிளண்ரீனா, இல: 34/9, கன்னியர்மட வீதி, மன்னார்.
40. ப. சுதர்சினி, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
41. பி. அலஸ்ரன், பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில், மடு
42. N. நிஜித், தாமரைக்குளம், அடம்பன்.
43. செ. இன்பென்ரா டயஸ், மரியாள் வீதி, தாழ்வுபாடு.
44. அ. நோயஸ் ஸ்ரீபினஸ், பெரியபண்டிவிரிச்சான், மடு.
45. K. துளசிகா, இல: 154, கற்குளம் - 2 சிதம்பரபுரம்.
46. S. செலஸ்ரீனா, நாகதாழ்வு, திருக்கேதீஸ்வரம்.
47. அ. மேரி. றொன்சன், புதுக்கமம், உயிலங்குளம்.
48. ஜெ. ஜெனவில், புதுக்கமம், உயிலங்குளம்.
49. A. கில்டா, கட்டையடம்பன், மடு வீதி.
50. வயலட் ஜோண், இல:843, ஆஸ்பத்திரி வீதி, யாழ்.

# பேசாலையில் கார்மேல் கன்னியர் இல்லம் திறப்பு







கடந்த மே மாதம் 10ஆம் திகதி இடம்பெற்ற திறப்புவிழாவின் பதிவுகள் இவை. சென்ற மாத மன்னாவில் இச்செய்தி பிரசுரமாகியது.

## மன்னார் மண்ணின் புதல்வியர் .....

3ஆம் பக்கத் தொடர்ச்சி

வவுனியா இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. விக்ரர் சோசை அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற சிறப்புத் திருப்பலியின்போதே இவர்கள் தமது முதல் வாக்குறுதியை அளித்தனர்.

இந்தியாவில் இருந்து வருகைதந்த சலேசிய சபை சென்னை மாநிலத்தலைவி அருட்சகோதரி மக்னிவிகாட் மற்றும் பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த நவசந்நியாசப் பொறுப்பாளரான அருட்சகோதரி, முதல் வாக்குறுதி அளித்த அருட்சகோதரிகளின் பெற்றோர் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் உள்ள இச்சபையின் அருட்சகோதரிகள் சென்னை மாநில நிர்வாகத்தினுள் வருகின்றமை இங்கு குறிப்பிடத்க்கது. வவுனியா இறம்பைக்குளத்தில் உள்ள சலேசிய சபை கன்னியர் இல்லத்தின் தலைவி அருட்சகோதரி மெற்றில்டா பெனாண்டோ மற்றும் இறம்பபைக்குளம் பங்குத் தந்தை அருட்திரு. எஸ். சத்தியராஜ் ஆகியோர் இந்நிகழ்வை முன்னின்று சிறப்பாக நடத்தினர்.

## மன்னாவை உடனடியாக விநியோகியுங்கள்

அன்பான மன்னா விநியோகஸ்தர்களே, உங்கள் கைக்கு மன்னா பத்திரிகை கிடைத்ததும் உடனடியாகவே அவற்றை உரியவர்களுக்கு வழங்குங்கள். சில விநியோகஸ்தர்கள் மன்னாவைக் காலதாமதமாகக் கொடுப்பதாக அறிகின்றோம்.

பங்கு மட்டத்தில் அல்லது வலய மட்டத்தில் பொறுப்பாக இருக்கும் பங்குத்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அல்லது பொதுநிலைப் பணியாளர்கள் இது விடயத்தில் அதிக அக்கறை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்கள் கைக்கு பத்திரிகை கிடைத்ததும் உடனடியாக அவற்றை உரிய விநியோகஸ்தரிடம் ஒப்படைக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறோம். **- மன்னா நிர்வாகம்.**

## மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 020020029782



## தயவுசெய்து அவதானியுங்கள்

நீத்தார் நினைவுகள், திருமண யூபிலி, பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றைப் பிரசுரிக்க விரும்புகின்றவர்கள் எந்த மாதத்தில் இந்த நினைவுகள் பிரசுரிக்கப்படவேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவுபடுத்துகின்றோம்.

**கட்டணம் :**
கறுப்பு வெள்ளை 4,500/=, கலர் 7,500/=

## ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்




காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களை சுருக்கமாகவும், இறுக்கமாகவும் மன்னாவுக்கு எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு பிரசுரிப்போம்
*- மன்னா நிர்வாகம் -*

**மன்னா வாசகர்களே,**
மன்னா பத்திரிகைக்கான பணத்தை காலம் தாமதிக்காமல் உடனடியாக வழங்கி, உங்கள் அன்பான ஒத்துழைப்பை மன்னா விநியோகஸ்தர்களுக்கு வழங்குங்கள்!

# நீங்காத நினைவுகள்

## 45ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
29
05
1936



உதிர்வு
19
05
2017

### திரு. அந்தோனிமுத்து செபஸ்ரியாம்பிள்ளை
**(பனங்கட்டுக்கொட்டு கிழக்கு, மன்னார்)**

**“உயிர்ப்பும் உயிரும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்” (யோவான் 11:25)**

கண்ணிமைக்கும் பொழுதிலே
காலன் உம்மைக் கவர்ந்தானோ? - நீர்
கால்வைத்த இடமெல்லாம் உம் நினைவு தோன்றிடுதே!
கலங்கி நிற்கின்றோம்; கதறி அழுகின்றோம்.

மண்ணுலகை விட்டு நீர் அவசரமாய்ச் சென்றீரோ
விண்ணுல வாழ்வையும் தேடியே சென்றீரோ
ஆறவில்லை உம் பிரிவு;
தேறவில்லை நாம் இன்னும்!
நித்திய அமைதியில் நீர் நிலைத்திருக்க
நெஞ்சார வேண்டுகிறோம் இறைவனிடம்!



**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், சகோதரி.

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
20
01
1947



உதிர்வு
18
07
2004

### திரு. பறுனாந்து அந்தோனிப்பிள்ளை (பாலசிங்கம்)
**(ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர், முருங்கன் கமம், முருங்கன்)**

**“சீவியத்தில் உம்மை நேசித்தோம்.**
**மரணத்திலும் உம்மை மறவோம்”**

பாசத்தின் பிறப்பிடமே, பண்பின் ஒளி விளக்கே - ஐயாவே
அன்போடு ஐயா என்றழைக்க நீங்களில்லையே!
ஆண்டுகள் பதின்மூன்று ஆனதையா
உங்கள் நினைவு எம்மை வாட்டுதையா
துணை இன்றித் தவிக்கின்றோம்.
உங்கள் உதவியின்றிப் பரிதவிக்கின்றோம்.
இனி எப்போது உங்கள் பூமுகம் காண்போம் ஐயா!

**பிரிவால் நினைந்துருகும்,**
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரங்கள்.

## 40ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17
08
1917



உதிர்வு
09
07
1977

### திரு. ராமசாமி தேவசகாயம்
**(7ம் வட்டாரம், பேசாலை)**

**“அழிவுக்குரியதாய் விதைக்கப்படுவது அழியாததாய் உயிர்பெற்று எழுகிறது” (1கொரிந்தியர் 15:42)**


நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து
நாற்பது ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகளோ எம்மைவிட்டு
ஒருபோதும் பிரிந்ததில்லை ஐயா!
உறவுகளுக்கு விடைசொல்லி
விழிமூடிக்கொண்டாலும் - எம்
நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ளது
உங்கள் நினைவுகள்........!
உங்களது விண்ணுலக வாழ்வுக்காக
இறைவனிடம் இரந்து நிற்கின்றோம்.



**பிரிவால் நினைந்துருகும்,** மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 13ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
09
04
1928



உதிர்வு
21
07
2004

### திருமதி. பாவிலு சந்தாக்குட்டி
**(முருங்கன் கமம், முருங்கன்)**

எம் அன்புத் தெய்வமே அம்மா!
நேரங்கள் ஓடினாலும் காலங்கள் மாறினாலும்
எம்மைவிட்டு நீங்கவில்லையே உம் நினைவுகள்!
யாராலும் ஈடுகொடுக்க முடியவில்லையே உம் இழப்பினை!
பதின்மூன்று ஆண்டுகள் போனால் என்ன?
எத்தனை ஜென்மம் ஆனால் என்ன?
புதிய உறவுகள் வந்தால் என்ன?
பழைய உறவுகள் அணைத்தால் என்ன?
மாறுமோ உம் பாசம்? மறையுமோ எம் நேசம்?
இறைவனின் இல்லத்தில் இனிதே வீற்றிருக்க
இறைஞ்சுகின்றோம் இறைவனை எந்நாளும்.

**பிரிவால் நினைந்துருகும்; மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உறவினர்.**

## பெரிய தம்பனை ஆலயத் திறப்பு.....

**1ஆம் பக்கத் தொடர்ச்சி**

மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை புதிய ஆலயத்தைத் திறந்துவைத்து, திருப்பொழிவு செய்து, திருவிழாத் திருப்பலியையும் தலைமை தாங்கி ஒப்புக்கொடுத்தார். பெரிய பண்டிவிரிச்சான் பங்குத்தந்தை அருட்திரு. சவுல் நாதன் அடிகளார் இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார். புதிய ஆலயக் கட்டுமானப் பணியில் கைகொடுத்த அனைவருக்கும் மன்னாவின் வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் உரித்தாகுக!

## இலங்கையின் ஆரம்பத் ......

**7ஆம் பக்கத் தொடர்ச்சி**

இறுதியாக அவர் நோய்வாய்ப்பட்டு 1711ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி இறைவனடி சேர்ந்தார். அவரது பூதவுடல் கண்டி அரசனின் அனுமதியோடு கண்டியில் அவரால் கட்டப்பட்ட தேவாலயத்திலேயே அடக்கம் செய்யப்பட்டது. அரசரும், பல இனமத மக்களும் பெருந்தொகையில் கூடியிருக்க மிக மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அடிகளாருக்கு 1995ஆம் ஆண்டு தை மாதம் முத்திப்பேறுபட்டமும், 2015ஆம் ஆண்டு தை மாதம் 16ஆம் திகதி தற்போதைய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனிதர் பட்டமும் வழங்கப்பட்டது. இலங்கை ஆயர் பேரவை 2017ஆம் ஆண்டை இலங்கையின் அப்போஸ்தலரான புனித யோசவ்வாஸ் ஆண்டாகப் பிரகடனம் செய்துள்ளது.

## அதிர்வுகள் ........

**10ஆம் பக்கத் தொடர்ச்சி**

ஏனெனில் தமிழரசுக் கட்சிக்கு மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு இருக்கிறது என்பது உண்மை. ஆனால், அவ் ஆதரவு தொடர்ந்து அதேநிலையில் இருக்குமா என்பதனையும் அது எண்ணிப்பார்க்க வேண்டும். அத்துடன் மற்றய கட்சிகள் பிற்சேர்க்கை (‘அப்பெண்டிஸ்’ /Appendix) போலதான் இருக்கின்றன என எண்ணும் மனநிலையை அது களைய வேண்டும்.

எந்தளவிற்கு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து செயற்படுகிறதோ அந்தளவிற்குத்தான் எமது பலமும் எமது எதிர்கால விமோசனமும் தங்கியிருக்கிறது என்பதைச் சரியாகப் புரிந்துகொண்டால் நம் அரசியல் தீர்வு நோக்கிய நகர்வுக்கு அது அனுகூலமாக அமையும் என நம்பலாம். இதனை விட்டுவிட்டு வெவ்வேறு காரணங்களைக் கூறிக்கொண்டு பிரிந்து - தனித்து இயங்க முனைந்தால் குளித்துவிட்டு மீண்டும் சேறு பூசிய கதையாகவே தமிழர் நிலமையும் கதையும் மாறிவிடும் ஆபத்து இருக்கிறது என்பதையும் இங்கு கூறியே ஆகவேண்டும்.

### *இளைப்பாறும் மன்னார் ஆயர் இரா. யோசேப்பு இருந்திருந்தால்!...*

இன்றைய வடபுலத்து அரசியல் நிலமையில் - வடமாகாண சபை இருக்கும் நிலமையில் இளைப்பாறும் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு கொஞ்சம் சுகதேகியாக இன்று இருந்திருந்தால் நிலமை எப்படி இருந்திருக்கும் என ஒரு தடவை எண்ணிப் பார்ப்பது தவிர்க்க முடியாததாகிறது! ஒரு உருவகம் தோன்றியது: நாய், தன் வாலைப் பின்கால்களுக்கு இடையில் (நறுக்கென்று வேறு வார்த்தையில் சொல்ல முடியும்! எனினும் கொஞ்சம் பண்பார்ந்த வகையில் சொல்வது நல்லது என்பதால் இப்படியாகச் சொல்கிறேன்!) வைத்துக்கொண்டு பவ்வியமாக மெலிந்து நெளிந்து வளைந்து நிற்பதுபோல விக்கி ஐயா தொடக்கம் அக்கி (அனந்தி அக்கா) வரையும், சம்மந்தன் ஐயா தொடக்கம் சாந்தி அக்கா வரையும் எல்லாரும் அணிவகுத்து நின்றிருப்பார்கள். வடமாகாண சபை இரண்டுபட இடமிருந்திருக்காது. என்ன செய்வது? பூனையில்லா வீட்டில் எலிகளுக்குக் கொண்டாட்டம் என்ற நிலையாகிவிட்டது! சரியான ஒரு தலைவன் இருந்தான்! அவன், அவன் இல்லாததால் நாமும் நமது அரசியல் தலைவர்களும் சிதறிப்போக எத்தணிக்கிறோம்!

### *நிறைவாக...*

இளைப்பாறும் மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு சமூக நலனில் அக்கறைகொண்டு ஆண்டவன் கொடுத்த அதிகாரத்தை வைத்துக்கொண்டு செயற்பட்டதுபோன்று அவ்வப்போது பிரிந்து பிளவுபட்டு நிற்கும் நம்முடைய தமிழ் அரசியல்வாதிகளை, தலைவர்களை ஒன்றுபடுத்த, மக்கள் நலன்களுக்காக உழைக்க, அவர்களை ஊக்கப்படுத்தவேண்டிய பெரும் பொறுப்பு சமூக நலன்சார்ந்து சிந்திக்கிற சமூக – சமயத் தலைவர்களுக்கு உண்டு.

ஏற்கனவே, நம் அரசியல் தலைவர்ககளை ஒன்றுபடுத்தும் - ஒற்றுமைப்படுத்தும் முயற்சியில் வெற்றிகண்ட யாழ். ஆயர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ பரமாச்சாரிய தேசிக சம்பந்த சுவாமிகள் போன்ற மதத்தலைவர்கள் தொடர்ந்தும் இவர்களை இணைக்கும் பாலமாக மாறவேண்டும் என ஆண்டவனை நம்பும் - ஆயனின் வழிகாட்டல்களை எதிர்பார்த்திருக்கும் ஆடுகள் எதிர்பார்க்கின்றன. “நல்லாயன் தன் ஆடுகளுக்காக உயிரையும் கொடுப்பான்” என்பது வேதம் கூறும் விண்ணக வாக்கு!

## மணற்குளம் ..... 1ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை தலைமையில் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இந்நிகழ்வில் பெருமளவிலான குருக்கள், துறவியர், இறைமக்கள் கலந்துகொண்டனர்.

இவ்வாலயத்தின் புனித அந்தோனியார் திருவிழாத் திருப்பலி யூன் மாதம் 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்திரு. டெஸ்மன் குலாஸ் அவர்கள் இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறப்பாக நெறிப்படுத்தியிருந்தார்.

## பிச்சகுளம் ..... 1ஆம் பக்கத் தொடர்ச்சி

புதிய ஆலயத்தை மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்கள் ஆசீர்வதித்து திறந்துவைத்தார். தொடர்ந்து ஆயர் தலைமையில் கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. திருப்பலியின்போது அமரர் அருட்பணி. அவித்தப்பர் அடிகளாருக்காகச் சிறப்பாக இறைவேண்டல் செய்யப்பட்டது. திருப்பலியைத் தொடர்ந்து ஆலயத்தில் சிறிய நன்றி உபசார வைபவம் இடம்பெற்றது. இதில் ஆலயக் கட்டுமானப் பணிக்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. அவிதப்பர் அடிகளாரின் 2ஆம் ஆண்டு நினைவையொட்டிய நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்தையும் சிறுக்கண்டல் பங்குத்தந்தை அருட்பணி. எமில் எழில்ராஜ் அவர்கள் சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தார்.

## றம்ழான் ....... 11ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆக, தனிப்பட்ட ஒரு நபரோ, ஒரு தேசமோ, ஒரு சமுதாயமோ அதன்மேல் சுய ஆதிக்கம் செலுத்த முடியாது. எனவேதான் திருத்தந்தை பிரான்சிஸ் நாம் சந்தித்துக்கொண்டிருக்கும், சூழல்கள் இயற்கை அனர்த்த சவால்களுக்கு முகம் கொடுக்கவும், நம் அனைவரையும் பெரிதும் பாதிக்கும் மனிதனின் அடிப்படைச் செயற்பாடுகளைப்பற்றியும் சிந்தித்துச் செயற்படவைக்கக்கூடிய ஒரு புதிய உரையாடலை மேற்கொண்டு, எதிர்கால புதிய உலகை உருவாக்க அழைத்து நிற்கின்றார்.

மேலும் இயற்கையின் அனர்த்த உச்சநிலை ஓர் ஆழ்ந்த உள்ளார்ந்த மனமாற்றத்திக்கான எச்சரிக்கை என, திருத்தந்தை பிரான்சிஸ் எதிர்வு கூறுகின்றார் (இல 217). இச்சவாலை திருப்திகரமாகச் சந்தித்து மேற்கொள்ள நமக்கு அவசியமானதாக கற்றல் நெறியோடு, ஆத்மீக திறந்த மனப்பாங்கும் உலகளாவிய, இயற்கை வளமேம்பாடு அடிப்படையிலான மனமாற்றமும் தேவையானதாகும். விசுவாசிகளாகிய நாம், நமது இறைவனோடு கொண்டுள்ள உறவு, நம்மைச் சூழவுள்ள உலகோடு நாம் கொண்டிருக்கும் உறவின் வெளிப்பாடாகவும் அவ்வெளிப்பாடு என்றும் அதிகரித்த நல்தாக்கம் கொண்டுள்ளதாகவும் விளங்க வேண்டும். இறைவனின் அழகிய படைப்பைப் பாதுகாக்க நாம் பெற்ற பணியானது கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களாகிய நமக்கு கொடுக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புள்ள பணியாகும்.

செபம், உபவாசம், நற்செயல்கள் வழியாக, பெறும் சமய ஆன்மீக உந்துதல்களும், ஆசீரும் உங்களைப் பலப்படுத்துவதாக. அனைத்து மனித குலத்தோடு, படைப்பனைத்தையும் பேணிப் பாதுகாக்க இறைதுணை உங்களை அமைதியும் நன்மைத்தனமும் நிறைந்த பாதையில் வழிநடத்திச் செல்வதாக! மீண்டுமாக அமைதியும் மகிழ்வும் சுபீட்சமும் நிறைந்த நல்வாழ்த்துக்கள் கூறி அமைகின்றோம்.

# நீங்காத நினைவுகள்

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி



**அருட்பணி.**
**லாசர் செபஸ்ரியான் குருஸ்**
**(திருவுளப் பணியாளர் சபை - I.V.D)**
**குருத்துவம் – 04.01.1990**

**மலர்வு : 30 - 06 - 1957**
**உதிர்வு : 19 - 07 - 2016**

அர்ப்பணித்தோம் எம் மகனை இறைபணிக்கு!
பணிவாழ்வின் பாதியில் பறித்துவிட்டாய் இறைவா!
..........................
வங்க மண்ணில் பிறந்த முத்து
திருவுளப்பணியாளரின் சொத்து
மண்ணுக்குள் மறைந்துவிட்டது.
நீ மறைந்த செய்தி கேட்டு எம்மனசு ஆறாதய்யா
உங்கள் அன்பு வதனமும், கனிவான பேச்சும்
அமைதியான போக்கும் ஆழமான
மறையுரைகளையும் மறக்க முடியுமா?
எங்கள் பாச தீபம் அணைந்துவிட்டது!
பகிடிகள் கூறிய வாய் அடைத்துவிட்டது
நற்செய்திக்கு சான்றாக வாழ்ந்த
பாதச்சுவடுகள் இன்று அழிந்துவிட்டன.
நோயைச் சுமந்து சுமந்து பிறர் காயம் ஆற்றினீர்.
தாயாகப் புரிந்தீர் நன்னலமற்ற சேவைகளை.
நல்லதொரு மகனாக, சகோதரனாக,
அருட்பணியாளராக, I.V.D தொண்டனாக
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்தீர். - இன்று
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்டுள்ளீர்!

**பிரிவால் நினைந்துருகும்,**
அண்ணன்மார், அக்காமார், உறவுகள் - வங்காலை

## 08ம் ஆண்டு நினைவஞ்சலி



**செல்வி. குமார் ரினுஷா லக்ஷி**
**(எமில்நகர், மன்னார்)**

**மலர்வு : 29 - 10 - 1997**
**உதிர்வு : 14 - 07 - 2009**

ஓடி மறைந்ததம்மா இன்றுடன் எட்டாண்டும்
உன் நினைவோ நீங்காது
ஒரு சிறு பொழுதும்
நீ மண் வாழ்வை துறந்திட்ட அந்நாளை
நினைத்தே துடிக்கின்றோம் எந்நாளும்.

மறையாத பொன் முகமும்
மாறாத உன் நற்குணமும்
சலிக்காத புன்சிரிப்பும்
சரியாத மனத்துணிவும்
அதை நினையாத நாளென்று நாளுண்டா
நினைக்காமல் எம் வாழ்வென்று
வாழ்வுண்டா?

ஈராறு ஆண்டுகள் மண்ணுலகில் உன்
வாழ்க்கை - அதைக் கூறிடப் போதுமோ
இவ்வுலகில் எம் வாழ்க்கை!
விண்ணுலகில் உன் வாழ்வு அமைதிபெற
வேண்டுகின்றோம் இறைவனிடம் அது ஈடேற!

**ஆத்ம சாந்திக்காய் இறைவனிடம் மன்றாடும்;**
அம்மா, அப்பா, அண்ணா, அம்மம்மா,
மற்றும் உன் உறவுகள்.

## 01ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 13 11 1937



**உதிர்வு** 15 07 2016

**திரு.ச.அந்தோனிப்பிள்ளை(பொன்ராஜா)**
**(பெரிய கட்டைக்காடு, நானாட்டான்)**

காலங்கள் ஒராண்டு கடந்து போனாலும்
கணப்பொழுதும் எம் நெஞ்சைவிட்டு நீங்காத ஐயாவே!
கலங்குகின்றோம் உம் பிரிவை நினைந்து
காலச்சுழற்சியிலே நிலையாமையை ஏற்கின்றோம்.

அன்பினால் அரவணைத்து எமைக் காத்தீர்
அயலவர் வாழ்வுபெற கொடை வள்ளலானீர்
எத்தனை நற்பண்புகளை எம் இதயத்தில் பதித்தீர்!
அத்தனையையும் வாழ்வாக்க முனைகின்றோம் ஐயா.

வருடம் ஒன்று கடந்து சென்றாலும்
வாழ்கின்றோம் உம் நினைவுகளுடன்
வான்வீட்டில் நீர் என்றும் வளமுடன் வாழ்ந்திட
வல்ல தேவனை பிரார்த்திக்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவுகள்.

## 04ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 14 12 1949



**உதிர்வு** 21 07 2013

**திருமதி. ஜெபநேசன் விக்ரோறியாள்**
(மாந்தை மேற்கு ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் தலைவி,
ஓய்வுபெற்ற மாந்தை மேற்கு பிரதேசசபை உத்தியோகத்தர்)
**(காத்தான்குளம், வட்டக்கண்டல்)**

அன்போடு அள்ளித்தந்து அரவணைத்தீர்கள்.
எம்மை ஆறாத்துயரில் தவிக்கவிட்டு
ஆறுதல்தேடி சென்றுவிட்டீர்களே அம்மா!
வருடம் நான்கு ஆனதம்மாஆறவில்லை எம் காயம்.
அன்போடு எமைக்காத்து அறிவுரைகள் பல கூறி
பண்போடு எம்மை உம் கண்ணுக்குள் வைத்து வளர்த்து
பாரினிலே உயரவைத்தீர்கள்.
கண்ணீர் நாம் வடிக்க எங்கு அம்மா போய் மறைந்தீர்?
இறைவன் பாதத்தருகில் அமர்ந்திருக்க
நாளும் பொழுதும் இறைவனிடம் வேண்டுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
கணவன், மகன், மகள், மருமகன், பேத்தி.

## 40ம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு** 17 01 1944



**உதிர்வு** 24 05 2017

**திருமதி. ச. ஜோசப் டலிமா**
**(விவாக, பிறப்பு, இறப்பு பதிவுகாரர்)**
**(தலைமன்னார் மேற்கு)**

பாரினில் எமைப் பிரிந்து சில நாட்கள்தான் சென்றாலும்
நீங்காது உம் நினைவு எம் நெஞ்சைவிட்டு.
பாரினில் வாழ்ந்த காலம் பாச மழை பொழிந்தவரே
தேடிவந்தோரின் தேவையறிந்து
அதை நிறைவேற்றிக் கொடுத்தவரே!
பாரினில் வாழ்ந்த காலம் முழுவதுமே
பலர் நலமுடனும் வளமுடனும் வாழ வழிசெய்தவரே.
தாராள மனத்தோடு இறுதிவரை
தயங்காமல் பணிகளைச் செய்தவரே
குணம் என்னும் பெயருக்கே இலக்கணமாய்த் திகழ்ந்தவரே
இறைவனின் நிழலில் என்றும் நீர் இளைப்பாற
உருக்கமாய் வேண்டுகின்றோம். எமக்காய் மன்றாடும்.

**பிரிவால் நினைந்துருகும்,**
குடும்பத்தினர், உற்றார், உறவினர்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

**மலர்வு** 26 12 1928



**உதிர்வு** 12 05 2017

**திரு. செ. இம்மானுவேல் குருஸ்**
**(வேதம் குருஸ் - வங்காலை)**

ஐயா என்ற சொல்லிற்கு அர்த்தம் தந்தீர்
ஐயனே உம் இருப்பு எம் வாழ்வின் சக்தி!
ஐயம் இன்றி தெளிந்த மனதுடன் வாழ்ந்தீர்
அன்பினால் அரவணைத்து எமைக் காத்தீர்
அயலவர் வாழ்வுபெற கொடை வள்ளலானீர்.

இத்தனை சிறப்புப் பண்புகளையும் உம்மகத்தே கொண்டீர்
அத்தனையையும் எம் இதயத்தில் ஆழமாகப் பதித்திட்டோம்.
எத்தனை ஆண்டுகள் கடந்து சென்றாலும்
உம் நினைவு எமைவிட்டு அகலாது ஐயா!

உம் ஆன்மா இறைவனில் இளைப்பாற
எந்நாளும் இறைவனிடம் இறைஞ்சியே நிற்கின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,**
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவுகள், நண்பர்கள்.

## 03ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 07 08 1962



**உதிர்வு** 09 06 2014

**திரு. செ. அன்ரன் இன்பதாசன்**
**(சின்னக்கடை, மன்னார்)**

பாசத்தை உம் வளர்ப்பில் கண்டோம்.
தியாகத்தை உம் செயலில் கண்டோம்.
மூன்று ஆண்டுகள் மறைந்து போய்விடினும்
ஆறாது உம் இழப்பு எம் வாழ்வில் அப்பா!

நீங்கள் தொலை தூரத்தில் அல்ல;
எம் விழி ஓரத்தில் இருக்கிறீர்கள்.
துயர் சுமந்து எமக்காய் திரியாகி ஒளி தந்தீர்
வலிகளை நீர் சுமந்து வழிகளை எமக்குக் காட்டினீர்.

இன்று ஆயனில்லா ஆடுகள்போல் அந்தரிக்கின்றோம்
நித்தமும் உம் அன்பைப் பெற்றிட ஆசிக்கின்றோம்.
நித்தியமாய் நின் ஆன்மா இளைப்பாற
நித்தமும் இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பாச மகள், உடன் பிறப்புகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 02ம் ஆண்டு நினைவஞ்சலி

**மலர்வு** 11 08 1955



**உதிர்வு** 26 07 2015

**திரு. மருசலீன் ஜோர்ச் குமார்**
**(ஓய்வுபெற்ற கிராம சேவை உத்தியோகத்தர், மடு)**

கதிரவனாகிய வெளிச்சம் அணைந்தபோது
எங்கள் நிழல்கூட எங்கள் சொந்தமில்லை என்றாகியது.
இது உங்கள் பிரிவித்துயரில் நாங்கள் கண்ட உண்மையப்பா!
குளிர்கால வேனிற்கால வாழ்வு - மாபெரும் கோட்டையாக
கட்டிய இல்வாழ்க்கை - திடீரென சுக்குநூறானதேயப்பா...!
நிழல்கள் மறைந்ததப்பா நிஜங்கள் என்றும் அழியாதப்பா
கவலை, கஸ்ரம், துன்பம், பகிர
நீங்கள் எம்மோடு இல்லாமல் போனீர்களப்பா!
வாழ்வு போதுமென்றா புலம்பி அழும் எம்மைவிட்டு
திடீரென சூரிய உதயம் மறைந்ததோ?
எமக்காக மன்றாடுங்கள் அப்பா!
வான் வீட்டில் உங்கள் மகிழ்வுக்காக
என்றென்றும் மன்றாடுவோம் நாங்கள்!

**பிரிவால் நினைந்துருகும்,** அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.